Registered as a News paper in Sri Lanka

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி | THE EELANAATHAM | மக்கள் தினசரி

நாதம் 01 | பிரமோதூத ஸு வைகாசி மீ 4ஆம் உ | வெள்ளிக்கிழமை | (18 - 05 - 1990) | ஹிஜ்ரி 1410 | ஷவ்வா 22 | ஓசை 89

## சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் உட்பட ஆறு தமிழ் பொலிஸார் வேலை நீக்கம்

(திருக்கோணமலை நிருபர்)

ஒரு தமிழ் சப்- இன்ஸ்பெக்டரும் 5 தமிழ் பொலிஸாரும் பொலிஸ் சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். சென்ற மாதம் திருக்கோணமலை வீரநகர் பொலிஸ் பிரிவில் கடமையாற்றிய பொலிஸாருக்கும் அப் பகுதி மக்களுக்கும் இடையில் இடம் பெற்ற சம்பவத்தின் எதிரொலியாகவே இவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இச் சம்பவத்தை அடுத்து விடுதலைப் புலிகளின் வேண்டுகோளின் பேரில் இப் பொலிஸ் பிரிவு உடனடியாக அகற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. வீதியால் சென்ற இளம் பெண் ஒருவருடன் ஷேஷ்டை புரிந்ததையடுத்தே பொலிஸாருக்கும் - பொது மக்களுக்கும் இடையில் கலவரம் மூண்டதும் பின்னர் விடுதலைப் புலிகள் அங்கு சென்று நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததும் தெரிந் (4 ஆம் பக்கம் பார்க்க)

# அமைச்சர் ஹமீத் - புலிகள் பேச்சு: திங்கள் யாழ். நகரில் நடைபெறும்

## மாத்தயா, யோகி, பாலா கலந்து கொள்வர்

(யாழ்ப்பாணம்)

வடகிழக்கு சமாதான சபையின் தலைவரும், நீதி அமைச்சருமான ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீத் எதிர்வரும் திங்கட்கிழமை காலை யாழ். நகரில் விடுதலைப் புலிகளை சந்தித்துப் பேசுவார். விடுதலைப் புலிகளின் சார்பில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு, மகேந்திரராசா (மாத்தயா) முன்னணியின் செயலாளர் திரு. யோகரத்தினம் யோகி, அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர்,

வடகிழக்கு மாகாண சபையைக் கலைப்பதிலும், ஆறாவது சட்டத் திருத்தத்தை நீக்குவதிலும் அரசாங்கம் அசமந்தபோக்கை கடைப்பிடிப்பது குறித்து விடுதலைப் புலிகள் ஆட்சேபம் தெரிவிப்பதுடன், இவை குறித்து காலம் தாமதிக்காது உடன் நடவடிக்கை எடுக்கும்படியும் வலியுறுத்துவார்கள் எனத் தெரிகிறது. தமிழீழத்தில் அரசியல் வெறுமை நிலையை நீடிப்பதன் ஆபத்துகள் பற்றியும் அமைச்சரிடம் புலிகள் எடுத்து விளக்குவார்களென வும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியுடன் அரசாங்கம் நடத்தும பேச்சுகள் குறித்தும் விடுதலைப் புலிகள் தரப்பில்கடும் ஆட்சேபம்தெரிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது, இந்தப் பேச்சுக்கள் தொடருமானால் விடுதலைப் புலிகள் இயக்கம் சர்வ கட்சி மாநாட்டை முற்றாகப் பகிஷ்கரிக்குமென புலிகள் எச்சரிக்கை விடுக்கலாமென நம்பகரமான வட்டாரங்கள் தெரிவித்தன.

## கல்முனையுடன் செயற்படும்

(அம்பாறை)

அம்பாறைக் கல்விப்பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் இயங்கி வந்த திருக்கோவில் கோட்டக் கல்வி அலுவலகம் வடகிழக்கு மாகாண அரசின் அனுமதியுடன் கல்முனை கல்விக் காரியாலயத்திற்குக் கீழ் இயங்குவதற்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளன.

இதனால் திருக்கோவில் பிரதேச ஆசிரியர்கள், அதிபர்கள், பல கஷ்டங்களை தவிர்க்க முடியும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

(48)

## பாண்பணிசுடன் வருவோருக்கு கொடுப்பனவு இல்லை

(யாழ்ப்பாணம்)

மதிய உணவாக பாண் பணிஸ் போன்ற உணவுகளைப் பாடசாலைக்கு கொண்டுவரும் மாணவர்களுக்கு இனிமேல் மதிய உணவுக்கான கொடுப்பனவு வழங்கப்பட மாட்டாது என கல்வி அமைச்சினால் சகல பிரதேச கல்விப் பணிப்பாளர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

அதிபர்கள், வகுப்பாசிரியர் மாணவத் தலைவர்கள் ஆகியோர் மாணவர் கொண்டு வரும் உணவு விபரங்களைக் குறித்து வைக்கவேண்டுமென்று கேட்கப்பட்டுள்ளனர்.

இதன்படி உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் அரிசி மற்றும் தனியங்கள் மூலம் (4ஆம் பக்கம் பார்க்க)

## கடலில் மூழ்கி மரணம்

(கொழும்பு)

கொழும்பில் இந்தியத் தூதரகத்தில் பாதுகாப்பு உத்தியோகத்தராகக் கடமையாற்றும் கிஷன் லால் கடலில் நீந்தும் போது நீரில் மூழ்கிக் காலமானார் என்று இந்தியத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

ஞாயிறன்று இந்தியத் தூதரகத்துக்குப் பின்னால் உள்ள கொள்ளுப்பிட்டிக் கடலில் குளிக்கும் போது இவர்கடலில் மூழ்கியுள்ளார்.

கடந்த செவ்வாயன்று பாதுகாப்பு உத்தியோகத்தர் வழங்கிய மரியாதை அணி வகுப்பின் பிறகு கி[illegible]ன் லாலின் உடல், அவரது சொந்த ஊரான ஹமச்சல் பிரதேசத்துக்கு விமான மூலம் எடுத்துச் செல்லப்பட்டது.

## இரு கிழமைக்குள் அறிவித்தால் மரணச் சடங்குச் செலவு

வன்செயல்கள், அசம்பாவிதங்களில் உயிரிழந்தவர்களின் மரண சடங்குச்செலவு இரு வாரங்களுக்குள் விண்ணப்பம் செய்திருந்தால் மட்டும் வழங்கப் படல் வேண்டும்.

இது தொடர்பான சுற்றறிக்கை புனர்வாழ்வு அமைச்சு செயலாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி செலவிற்காக ரூபா 2000 வழங்கப்படுகிறது.

உயிரிழப்பு ஏற்பட்டு இரு வாரங்களுக்குள் விண்ணப்பம் செய்யாதவர்கள் இக் கொடுப்பனவு பெறமுடியாத நிலை இதனால் ஏற்பட்டுள்ளது. (37)

## ஆறாவது சட்டத்திருத்த நீக்கம் ஈரோஸ் தலைமை நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

ஆறாவது சட்டத்திருத்தத்தை நீக்குவதற்கு உடன் நடவடிக்கைஎடுக்கஈரோஸ் தலைவர் முயற்சிப்பதாகதெரியவருகிறது. விடுதலைப் புலிகளின் யோசனையின் பேரில் ஈரோஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒரு தனிப்பட்ட தீர்மானத்தை விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கலாமென நம்பகரமான வட்டாரங்கள் கூறுகின்றன.

ஆறாவது சட்டத்திருத்தம் நீக்கப்படாவிடில் ஈரோஸ் பாராளுமன்ற அங்கத்தவர் தமது பதவிகளை ராஜினாமா செய்யலாமெனவும் தெரியவருகிறது.

## புற்றுநோய்க் கண்காட்சி

(காங்கேசன்துறை)

புற்றுநோய் அறிவியல் கண்காட்சி, தெல்லிப்பழை வறுத்தலை விளானிலுள்ள புற்றுநோயாளர் விடுதியில் எதிர்வரும்18, 19, 20- ஆம் திகதி

## வடக்கில் குண்டுவீச்சு விமான நோட்டம்; புலிகள் கடும் சினம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் கடந்த இரண்டு நாட்களாக சிறிலங்கா விமானப்படையைச் சேர்ந்த குண்டு வீச்சு விமானமும் நோட்டம் பார்க்கும் விமானமும் தர்மபுரத்திலுள்ள வி[illegible]லைப் புலிகள் தலைமைச் செயலகத்தின் மீதும் விஸ்வமடு, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளிலும் வானில் வட்டமிட்டது விடுதலை புலிகளுக்குக் கடும் ஆத்திரத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இது ஒரு தேவையற்ற

## கல்முனை பொலிஸ் விவகாரம்

புலிகள் ஆட்சேபம் தெரிவிப்பதுடன், இவை குறித்து காலம் தாமதிக்காது உடன் நடவடிக்கை எடுக்கும்படியும்

வும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியுடன் அரசாங்கம் நடத்தும பேச்சுகள் குறித்தும் விடுதலைப் புலிகள்

கப் பகிஷ்கரிக்குமென புலிகள் எச்சரிக்கை விடுக்கலாமென நம்பகரமான வட்டாரங்கள் தெரிவித்தன.

இயங்குவதற்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளன.

இதனால் திருக்கோவில் பிரதேச ஆசிரியர்கள், அதிபர்கள், பல கஷ்டங்களை தவிர்க்க முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (48)

மாணவத் தலைவர்கள் ஆகியோர் மாணவர் கொண்டு வரும் உணவு விபரங்களைக் குறித்து வைக்கவேண்டுமென்று கேட்கப்பட்டுள்ளனர்.

செய்திருந்தால் மட்டும் வழங்கப் படல் வேண்டும்.

இது தொடர்பான சுற்றறிக்கை புனர்வாழ்வு அமைச்சு செயலாளரால் அறிவிக்கப்

வாரங்களுக்குள் விண்ணப்பம் செய்யாதவர்கள் இக் கொடுப்பனவு பெறமுடியாத நிலை இதனால் ஏற்பட்டுள்ளது. (37)

# ஆறாவது சட்டத்திருத்த நீக்கம் ஈரோஸ் தலைமை நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

ஆறாவது சட்டத்திருத்தத்தை நீக்குவதற்கு உடன் நடவடிக்கைஎடுக்கஈரோஸ் தலைவர் முயற்சிப்பதாகதெரியவருகிறது. விடுதலைப் புலிகளின் யோசனையின் பேரில் ஈரோஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒரு தனிப்பட்ட தீர்மானத்தை விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கலாமென நம்பகரமான வட்டாரங்கள் கூறுகின்றன.

ஆறாவது சட்டத்திருத்தம் நீக்கப்படாவிடில் ஈரோஸ் பாராளுமன்ற அங்கத்தவர் தமது பதவிகளை ராஜினாமா செய்யலாமெனவும் தெரியவருகிறது.

## புற்றுநோய்க் கண்காட்சி

(காங்கேசன்துறை)

புற்றுநோய் அறிவியல் கண்காட்சி, தெல்லிப்பழை வறுத்தலை விளானிலுள்ள புற்றுநோயாளர் விடுதியில் எதிர் வரும்18, 19, 20- ஆம் திகதிகளில் நடைபெறும்.

இக் கொடிய ஆள் கொல்லி நோய் பற்றி அறியத்தருவதும் இந் நோய் ஏற்படாது தடுக்கும் வழிவகைகளைப் பொதுமக்களுக்கு விளக்குவதுமே இக் கண்காட்சியின் நோக்கமாகும்.

மாலை எட்டு மணி மட்டும் கண்காட்சி இடம் பெறும் விசேட போக்கு வரத்.து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

# வடக்கில் குண்டுவீச்சு விமான நோட்டம்; புலிகள் கடும் சினம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் கடந்த இரண்டு நாட்களாக சிறிலங்கா விமானப்படையைச் சேர்ந்த குண்டு வீச்சு விமானமும் நோட்டம் பார்க்கும் விமானமும் தர்மபுரத்திலுள்ள விடுதலைப் புலிகள் தலைமைச் செயலகத்தின் மீதும் விஸ்வமடு, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளிலும் வானில் வட்டமிட்டது விடுதலை புலிகளுக்குக் கடும் ஆத்திரத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இது ஒரு தேவையற்ற ஆத்திரமூட்டும் செயல் என்று விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசாங்கத்தின் நல்லெண்ணத்தில் சந்தேகம் கொள்ளாமல் அதன் நட்புக்கரத்தைப்பற்றி இனப்பிரச்சி

(4ஆம் பக்கம் பார்க்க)

# சட்டப்படி வேலைசெய்ய வைத்திய அதிகாரிகள் முடிவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள உதவி வைத்திய அதிகாரிகளுக்கும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நிர்வாகத்திற்குமிடையிலான ''ஓவர்ரைம்'' கொடுப்பனவு தொடர்பான இழுபறிக்கு தீர்வுகாண ''சட்டப்படி வேலை போராட்டம்'' ஓரிரு வாரங்களில் ஆரம்பிக்க மாவட்ட உதவி வைத்திய அதிகாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

1988 ஆம் ஆண்டு யூன் மாதம் முதல் உதவி வைத்திய அதிகாரிகளுக்கு தினமும் 24 மணித்தியாலங்கள் ஓவர்ரைம் வழங்கப்படலாம் என பணிப்பாளர் நாயகம் அறிவித்

(4ஆம் பக்கம் பார்க்க)

## கல்முனை பொலிஸ் விவகாரம்

# ரஞ்சனின் பதிலும் புலிகளின் விளக்கமும்

(கொழும்பு)

கல்முனைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரு சப்இன்ஸ்பெக்டர்கள் உட்பட பத்தொன்பது பொலிசார் விடுதலைப் புலிகளால் கைது செய்யபபட்டு விடுதலை செய்யப்பட்டது சம்பந்தமாக நேற்றைய பத்திரிகையாளர் மாநாட்டில் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் ''இது ஒரு கீழ்த்தரமான செயல்'' என்று குறிப்பிட்டிருந்தார்.

இது பற்றி விடுதலைப் புலிகள் வட்டாரங்களில் கேட்ட போது, உதைபந்தாட்டம் விளையாடப் போவதாகச் சொல்லிச் சென்ற பொலிசார்

(4ஆம் பக்கம் பார்க்க)

# பாடசாலை மதியபோசனம் நாளையுடன் நிறுத்தம்!

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவர்களுக்காக நடைமுறைப்பட்டு வந்த மதியபோசனத் திட்டம் யாழ். மாவட்டத்தில் நாளையுடன் நிறுத்தப்படவுள்ளதாக யாழ். கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

இத்திட்டம் ஏற்கனவே ஏனைய மாவட்டங்களில் நிறுத்தப்பட்டிருந்தது. யாழ் மாவட்டத்தில் மட்டுமே இது வரை அமுல் செய்யப்பட்டு வந்தது.

இதுபற்றிக் கல்விப்பணிப்பாளர் கருத்துத் தெரிவிக்கையில், மதிய போசனத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதில் எமது திணைக்களம் பல பிரச்சினைகளை எதிர் நோக்கியது மதிய உணவின் சுவை, சுகாதாரநிலை, ஒதுக்கப்படும் பணம், இதில் ஈடுபடும் அதிபர், ஆசிரியர் நிலைப்பாடு, இவ்வாறு எத்தனையோ பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது.

இதனால் வீண் மனஸ்தாபங்களும்வேலைப்பளுவும் ஏற்பட்டது. இனிமேல் இதற்கு இடமிருக்காது பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு சுகாதாரமுறையில், வயிறாற உணவைக் கொடுத்து சோர்வில்லாது கல்வி கற்க அனுப்புமாறும், பல கசப்புணர்வுகளுக்கு மத்தியிலும் பாடசாலை மாணவர்களுக்கு கல்வியூட்டலோடு

(4ஆம் பக்கம் பார்க்க)

# வடபகுதி வெங்காயம் தென்பகுதி உற்பத்திப்பெயரில்வெளியேஏற்றுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் வெங்காயம், மிளகாய் போன்றவற்றை தென்பகுதி விவசாயிகள் தரகர்கள் மூலம் கொழும்பில் பெற்றுக் கொண்டு தமது ஏற்றுமதி உற்பத்தி கிராமங்களில் உற்பத்தி செய்ததாக கூறி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகின்றனர். ஆனால் தற்போது வடபகுதியில் விதை வெங்காயம் தட்டுப்பாடு நிலவுவதாலேயே இலங்கையின் ஏற்றுமதி பாதிப்படைந்துள்ளது என வடபகுதி கூட்டுறவு சந்தைப் படுத்துத் சம்மேளன பிரதம முகாமையாளர் (மாக்பெட்) தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் பற்றி அவர் மேலும் குறிப்பிடும்போது எமது பிரதேசத்தில் கடந்த காலங்களில் இந்திய இராணுவத்தால் திட்டமிட்டு பொருளாதார அழிவு செய்யப்பட்டது. அத்துடன் இந்த ஆண்டு ஆரம்பத்தில் பெய்த மோசமான மழை என்பவற்றால் எமது வெங்காய மிளகாய்ச் செய்கை பெருமளவு பாதிப்படைந்துள்ளது: இவை தவிர எம்மால் காலா காலம் பெரு

(4ஆம் பக்கம் பார்க்க)

# தேவை 12 பஸ்கள்; சேவையில் 2 எவ்வாறு சேவை நடத்துவது

(வந்தாறுமூலை)

வாழைச்சேனை போக்குவரத்து சபை டிப்போவினால் சிறந்த முறையில் போக்கு வரத்தினை நடாத்துவதானால் பன்னிரண்டு பஸ்வண்டிகள் தேவை ஆனால் ஏழு பஸ் வண்டிகளே உள்ளன அவற்றில் இரண்டு பஸ்கள் மட்டுமே சேவையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளது. ஏனைய ஐந்து பஸகளும் உதிரிப்பாகங்கள் அற்ற நிலையில் கட்டையில் வைக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் எவ்வாறு போக்குவரத்து சேவையினை நடத்த முடியும் என சாலை பொறியி

(4ஆம் பக்கம் பார்க்க)

# வடபகுதிக்கு வார இறுதி ரயில் சேவை

(கொழும்பு)

வட பகுதிக்கான வார இறுதி ரயில் சேவை இன்று தொடக்கம் ஆரம்பமாகுமென்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த விசேட ரயில் வண்டி வெள்ளிக்கிழமை மாலை கொழும்புக் கோட்டை ரயில்வே நிலையத்திலிருந்து இரவு 9.15 புறப்பட்டு, காங்கேசன்துறையை சனிக்கிழமை காலை 6.10 க்குச் சென்றடையும்.

இந்த விசேட ரயில் சேவை காங்கேசன்துறையிலிருந்து ஞாயிற்றுக்கிழமை மாலை ஆரம்பமாகும். ஞாயிற்றுக்கிழமை மாலை 5. 30 மணிக்கு காங்கேசன்துறையிலிருந்து புறப்படும் விசேட ரயில் சேவை திங்கட்கிழமை காலை 3.45 மணிக்கு கொழும்புக்கோட்டைக்குவந்தடையும் என ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

# மூளைக் காய்ச்சலால் போராளி மரணம்

(வேலணை)

நாரந்தனையை வசிப்பிடமாகக் கொண்டவரும்: தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச்சேர்ந்தவருமான செல்வி உஷா பாலச்சந்திரன் சென்ற 15 ஆம் திகதி அன்று மூளைக்காய்ச்சல் நோயினால் மரணமடைந்து விட்டார்.

இவருக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் வேலணை வங்களாவடியில் சோக கீதங்கள் இசைக்கப்பட்டன.

இவரது இறுதிக்கிரியைகளிலும் பெருந்தொகையான மக்கள் கலந்து கொண்டு அஞ்சலிகளைத் தெரிவித்துச் சென்றனர். (14)

# யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி நூற்றாண்டு 1890 - 1990

## வரிவிளம்பரம்

**விற்பனைக்கு**

புதிய அச்சடிக்கும் திருமணக்கார்ட்டுகள்,சகலடிசைன்களிலும் விற்பனையாகிறது. உங்கள் எண்ணம்போல் தெரிவு செய்யஸ்ரீகாந்த்புத்தகசாலை, மின்சார நிலைய வீதி, பஸ் நிலைய முன்புறம், யாழ்ப்பாணம்,

(B/1002)

**தொழிற் கல்வி**

Radio Officers (Ship) P.M. G. Telex Operators (International) இரு பாலாரும். Air Conditioning And Refrigeration Electronics. (City and Guilds London)

வெளிநாடுகளில் பிரபல்ய மானவை. சான்றிதழ் வழங்கப்படும். ஆரம்பம் 2-6-90 Nesta Technical Institute 59, Station Road, Jaffna.

(R/480)


## வெளிக்கள நிலையப் பரீட்சை

(யாழ்நகர்)

க.பொ.த. (உயர்தரம்) 12 ஆம் ஆண்டு மாணவர்களுக்கு தொண்டமனாறு வெளிக்கள நிலையத்தினால் நடாத்தப்படும் பரீட்சை இன்று 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிறது.

கலை,விஞ்ஞான,வர்த்தகப் பிரிவு12 ஆம்ஆண்டுக.பொ.த. (உயர்தர) வகுப்புகளில் கல்வி கற்கும் யாழ்.மாவட்ட மாணவர்களுக்கான இப்பரீட்சை 25.05 90. வெள்ளிக்கிழமை வரை நடைபெற உள்ளது(52)

## கல்முனை உ.அ.அ. பிரிவில் தளபாட வசதி இல்லை

(அம்பாறை)

கல்முனை உதவி அரசாங்க அதிபர் தமிழ்ப்பிரிவு அலுவலகத்தில் தளபாட வசதிகள் இன்றி கிராம சேவையாளர்களும், ஊழியர்கள், பொது மக்களும் பெரிதும் கஸ்டமுறுகின்றனர்.

கிராமசேவையாளர்கள் தமது வாராந்த கூட்டத்திற்கு பாயில் இருந்தே தமது கடமைகளைச் செய்கின்றனர்.

இது குறித்து பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு பல தடவைகள் புகார்கள் தெரிவித்தும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.


### யாழ்நகரில் இன்றைய சினிமா

**மனோகரா - (யாழ்)**
தினசரி 4.00, 6.30, 9.30
சனி. ஞாயிறு
10-30, 2-30. 4-00,
6.30 & 9.30
**BRUCE LEE IN RUCELEE THELEGEND**
கராட்டிப் படம்

**வெலிங்டன் (யாழ்)**
ரகுமான் - நதியா
தினசரி 4-00, 6-45, 9-30
சனி ஞாயிறு 10-30,2-30,
6-30,9-30
**நிலவே மலரே**
(புதிய பிரதி)
B/859

**ஹரன் - (யாழ்)**
தினசரி 4·00, 7.00, 9.30
விடுமுறை நாட்களில்
4 காட்சிகள்
நிழல்கள் ரவி. நம்பியார்.
சத்தியராஜ்
நடித்த
**விலங்கு**
இந்தியாவிலிருந்து
தருவிக்கப்பட்ட
(புதிய பிரதி)
B 878

**வின்ஸர் - யாழ்**
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறை
நாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
**இது நம்ம ஆளு**
(புதிய வெளியீடு)

**ராஜா (யாழ்)**
தினசரி 4·45, 7·00, 9·45
சனி ஞாயிறு விடுமுறை
நாட்களில்
10·00, 2·00, 4·45,
7·00, 9·45
**EDDIE MURPHY IN BEVERLY HILLS COP**
( Color - Scope )

**நியூ சாந்தி (யாழ்)**
தினசரி 4.00, 6.30
7.00 9.00
சனி ஞாயிறுவிடுமுறை
நாட்களில்
10:30 2:30,: 4,00 6:00
7-30 9-00
**UNMASKING THE IDOL**
(Color)

**லிடோ (யாழ்)**
18 முதல் 21 வரை
Daily at. 4. P.M 6,30
& 9.30 P.M.
Sat &Sun&Pud liceHoiiday
10.30 2.30 4.30 6.30 9.30
**CAN BE DONE AMIGO**
(color)

**ஸ்ரீதர் - (யாழ்.)**
தினசரி 4.00, 7.00, 9.45
சனி, ஞாயிறு விசேஷ
விடுமுறை நாட்களில்
4 காட்சிகள்
10,30, 2.30, 6.30, 9.30
ரஜனி,ராதிகா, ரகுவரன்
நடித்த
**ஊர்க்காவலன்**
50-வது நாளை நோக்கி
B/969



# கொம்பியூட்டர் கல்வி


❋ **Diploma in Data Processing and Computer Programming in BASIC LANGUAGE**

ஆரம்பம்: 19th May, 1990
(சனி. ஞாயிறு வகுப்புகள்) நேரம் 1-30 P. M.
ஆரம்பம் 25th May 1990
(திங்கள், புதன், வெள்ளி வகுப்புகள்) நேரம் 1-30P. M.

**LOTUS 1-2-3**

ஆரம்பம் 19th May. 1990
(சனி, ஞாயிறு வகுப்புகள்)

O/L படித்த இரு பாலாரும் சேரலாம். மிகவும் விளக்கமான முறையில் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.



UNIKCO COMPUTER CENTRE

*No. 5, Power House Road,*
*2nd Lane, Jaffna.*

(B-951)


## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



லெப்டினன் அங்கிள் அன்ரனி
(ரஞ்சித்)

| வீர ஜனனம் | வீர மரணம் |
| --- | --- |
| 21 - 06 - 1950 | 18 - 05 - 1986 |

உனது இழப்பு எமக்கு இதுவரை அறியாத தவிப்பு
வரண்ட உள்ளங்கட்கு வற்றாத நீரூற்றாய்
இருண்ட மனங்கட்கு அணையாத தீபமாய்
வானுறை மாளிகைக்குள் ஓர் ராஜகோபுரமாய் நின்ற
நீ மறைந்தது உனை அறியாதவர்களுக்கும் துன்பம் தரும்
எம் நெஞ்சங்களில் அடிக்கும் செங்குருதியே
உனக்கு இறுதி அஞ்சலி!

மற்ஸ் சென்றல்
மாணவர்கள்

(R-490)


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க


# விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியினரும்

CENTRE

*No. 5, Power House Road,*
*2nd Lane, Jaffna.*

(B-951)

இருண்ட மனங்கட்கு அணையாத தீபமாய்
வானுறை மாளிகைக்குள் ஓர் ராஜகோபுரமாய் நின்ற
நீ மறைந்தது உனை அறியாதவர்களுக்கும் துன்பம் தரும்
எம் நெஞ்சங்களில் அடிக்கும் செங்குருதியே
உனக்கு இறுதி அஞ்சலி!

மற்ஸ் சென்றல்
மாணவர்கள்

(R-490)

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியினரும் கலை, கலாசாரப் பிரிவினரும் இணைந்து வழங்கும்

# தேனிசை செல்லப்பாவின் இசை நிகழ்ச்சியும் கலை விழாவும்

இடம்: **யா / நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்**

காலம்: **இன்று வெள்ளிக்கிழமை (18-05-1990) மாலை 5 மணி**

இந்நிகழ்ச்சிகளில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் முக்கிய பிரமுகர்களும் கலந்துகொண்டு உரை நிகழ்த்துவார்கள். அனைத்து தமிழீழ மக்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

— விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரும், கலை கலாசாரப் பிரிவினரும்

(B-972)

# மக்களின் கேள்விகளும் 'மாத்தயா' பதில்களும்

**9. கேள்வி:**

விடுதலைப் புலிகள் போல், அதன் தலைவர் போல், அவர்கள் தியாகம் போல் தனித்துவமானது தான் அமையப் போகும் தமிழீழம் என்பது உண்மை. பலரளவில் எம்மக்கள் மனதைமாற்ற முடியாது என்பது உண்மை. எல்லோரும் புலிகள் ஆதரவாளர்கள் தான். ஆனால் தனித்துவ தமிழீழத்திற்கு ஏற்றமாதிரி அவர்கள் மாறுவார்கள் என்பது நம்ப முடியாது அப்படியாயின் தனித்துவமான இத் தியாகங்களுக்கு பதில் என்ன?

**பதில்:**

இன்று எம்மிடையே (சமூகத்தில்) ஏற்படுகின்ற மாறுதல்களை எல்லோரும் விளங்கிக் கொள்ளவில்லை. இந்த மாறுதல்களை விரும்பாதவர்களும் உண்டு.

பொருளாதார அடக்கு முறைகளும் சாதி - பெண் ஒடுக்கு முறைகளும் நீங்கிய ஓர் சமத்துவமான சகல உரிமைகளையும் கொண்ட மக்களைக் கொண்ட ஓர் நாட்டை நாம் அமைக்க வேண்டும். என்பதை எமதும் எமது மக்களதும் விருப்பமாகும்.

சுயநலம் கொண்ட மக்களை ஏமாற்றி பெரும் சொத்து சம்பாதிப்பவர்கள் இத்தகைய நாட்டை விரும்பப் போவதில்லை. இப்படியானவர்களை நாம் தூக்கி எறிய வேண்டும்.

வேறு சிலர் நாம் ஏமாற்றப் படுகின்றோம் என்பது தெரியாமல் வாழ்பவர்கள் அவர்களது அறியாமையை நீக்கி அவர்களை எம்மோடு போராட்டத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

இன்று ஏற்பட்டு வரும் நல்ல மாறுதல்கள் யாரும் திசை திருப்பி விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். நாம் விரும்பும் வண்ணம் மக்கள் சமத்துவமாக சகல உரிமைகளும் பெற்று வாழ்வதற்கான வேலைத்திட்டங்களை நாம் உருவாக்கி செயல்பட வேண்டும்.

எமது போராளிகளினதும் மக்களினதும் தியாகங்கள் வீண் போகாது பார்த்துக் கொள்ள வேண்டும்.

**10- கேள்வி:**

தமிழீழ விடுதலைப் புலிகளின் சகோதரிகளைப் பார்த்து மயங்கித்தானாம் (அதாவது அவர்களின் கவர்ச்சியில்) இயக்கத்தில் சேர்க்கின்றோம் என்று மக்கள் சிலரின் கருத்து இதில் உங்கள் கருத்தென்ன?

மாணவி.

**பதில்:**

கவர்ச்சியால் கவரப்பட்டு வருபவர்களால் உறுதியாக உயிரை அர்ப்பணித்து ஓர் இலட்சியத்திற்காக போராட முடியாது. எமது அமைப்பின் உறுதியான தலைமைக் கட்டுக்கோப்பு - இலட்சியப்பிடிப்பு, உயிரை அர்ப்பணிக்கும் தியாகம் - இவற்றை அறிந்து கொண்டதால் தான் எம்மோடு இணைந்து போராட



பலர் வருகின்றனர். பெண் போராளிகளால் கவரப்பட்டுத்தான் போராளிகள் வருகின்றார்கள் எனச் சொல்பவர்கள் இருந்தால் இவர்களையிட்டு சமுதாயம் வெட்கப்பட வேண்டும்.

**11. கேள்வி:**

இலங்கை அரசியல் வரலாற்றில் தமிழர் நலன் எனக் கூறும் அக்கால அரசுகள் ஒப்பந்தங்களைச் செய்தாலும் பின் ஆட்சி மாறும் போது ஒப்பந்தங்களை கிழித்து எறிகின்றனர். உதாரணமாக பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தங்களைக் கூறலாம். அதேபோல் பிரேமதாசாவின் அரசு வழங்கும் உரிமைகளையும் நலன்களையும் இனிவரும் அரசு பறிக்காதா? அந்நிலையில் எமது நிலை என்ன?

**பதில்:**

முந்திய நிலைக்கும் இன்றைய நிலைக்கும் பாரிய வேறுபாடு உண்டு. முன்பு நாம் பலமற்றவர்களாக இருந்தோம். எதிரி ஏமாற்றினான். தட்டி கேட்க முற்பட்டபோது ஆயுதபலம் கொண்டு அடக்கினான். இன்று நாம் பலத்தோடு இருக்கின்றோம். நாம் யாரையும் நம்பி எமது சொந்தப் பலத்தை எப்போதும் இழக்க மாட்டோம். நாம் ஓர் நிரந்தரத் தீர்வை அடையும் போது அது யாராலும் பறிக்க முடியாத ஒன்றாகவே அமையும்.

# அமெரிக்காவின் எதிர்கால தந்திரோபாயம் என்ன?

உலகின் இராணுவ கேந்திர வலைப்பின்னல் அமைப்பை விஸ்தரிக்கும் நோக்கை அடிப்படையாகக் கொண்டு எந்நேரமும் செயற்பட்டுவரும் ஆதிக்க நாட்டம் கொண்ட அமெரிக்காவுக்குத் தற்போது பிலிப்பைன்ஸில் இருந்து தனது தளங்களை எடுத்துக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

பிலிப்பைன்ஸ்சுடன் இராணுவக் கடற்படைத் தளம் சம்பந்தமாகச் செய்து கொண்ட உடன்பாட்டுக் காலக்கெடு அடுத்த ஆண்டு செப்டெம்பர் மாதத்துடன் முடிவடைகின்றது. இதனை முன்னோடியாகக் கொண்டு பிலிப்பைன்ஸில் இத்தள வசதிகளைத் தொடர்ந்தும் வைத்திருப்பதா அல்லது அனைத்தையும் காலிசெய்து கொண்டு கிளம்புவதா என்பது பற்றித் தற்போது மணிலா நகரில் பேச்சுவார்த்தைகள் நடந்து வருகிறது.

இந்தப் பேச்சுவார்த்தைகள் ஒரு புறத்தில் நடந்துகொண்டிருக்க, மக்களின் ஏகோபித்த குரல் கட்டுக்கடங்காது போய்க் கொண்டிருப்பதும், மக்கள் உடன் இராணுவத் தளங்கள் அப்புறப்படுத்தப்பட வேண்டுமெனக் கோரி வருவதும், இதனால் ஏற்பட்ட ஆர்ப்பாட்டங்களில் கண்ணீர்ப் புகைகள் பாவிக்கப்படுவதும், கலகங்களைப் பிலிப்பைன்ஸ் இராணுவ, பொலிசார் அடக்குவதற்குப் பெரும் பாடுபடுவதும் தற்போது அறியக்கூடியதாக உள்ளது.

இதே நேரத்தில் தற்போதிருக்கும் பிலிப்பைன்ஸ் அரசு சர்வாதிகாரி மார்க்கோசை வீழ்த்தி ஆட்சியைக்கைப்பற்ற வழிவகுத்தது இதே மக்கள் சக்தி தான் என்பதை நாம் கருத்திற் கொள்ள வேண்டியவர்கள் ஆகிறோம்.

மக்களுடன் பிலிப்பைன்ஸில் உள்ள அமெரிக்க இராணுவத் தளங்களை அகற்றப்படாது போனால் புதிய தாக்குதல்களை மேற்கொள்ளப் போவதாகக் கம்யூனிசக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட "புதிய மக்கள் இராணுவம்" என்ற பிரபல்யம் பெற்ற கெரில்லா அணியும் அறிவித்திருப்பது அக்கினோ அரசுக்குப் புதிய தலையிடியையே கொண்டு வரும் என்பதில் ஐயமில்லை.

இருந்தும் இராணுவ, கடற்படை தளங்களை அகற்றுவதற்கு அக்கினோ அரசு உத்தரவிடும் போது அமெரிக்கா எதிர் காலத்தில் எத்தகைய தொல்லைகளை உருவாக்கும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டிய கடமையில் உள்ளது. ஏனெனில் ஏலவே பல உள்நாட்டு இராணுவ சதிகளைச் சந்தித்திருப்பது இதற்கு நல்ல உதாரணங்களாகும்.

இருந்தும் கடந்த புதன் கிழமை அறுதியாக அனைத்து அமெரிக்க கேந்திரங்களும் வெளியேறிவிட வேண்டும் என பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி கொறாசோன் அக்கியூனோ அறிவித்திருப்பது எந்த நேரத்திலும் தமது எதிர்கால ஆட்சியில் எத்தகைய எதிர்ப்புக்களையும் சந்திக்கத் தயார் என்ற நிலைப்பாட்டையே காட்டி நிற்கிறது.

இந்நிலையானது அமெரிக்காவைப் பொறுத்த வரையில் ஒரு பெரும் தாக்கத்தை விளைவிக்கக் கூடியதாகும். ஏனெனில் கடந்த காலங்களில் பசுபிக் கரையில் உள்ள தமது நலன்களுடன் ஒத்துப்போவதாக (ஜப்பான், சீனா உட்பட வடகொரியா, வியட்னாம் போன்றன) நாடுகளை தகுந்த நேரத்தில் கண்காணிக்கவென இருந்த ஒரு மாபெரும் தளத்தை அது இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இது அமெரிக்காவின் உள்மனதில் சீற்றத்தை உண்டு பண்ணும் என்பதில் ஐயமில்லை.

## செயலாளர் வவுனியா வருகை

வடகிழக்கு மாகாணசபை கல்வி அமைச்சின் செயலாளர் திரு. சற்குணராஜா இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு வவுனியா வந்துசேர்ந்துள்ளார்.

செவ்வாய்க்கிழமை (15-5-90) அவர் வவுனியா மாவட்டத்தில் உள்ள பல பாடசாலைகளுக்குச் சென்று பார்வையிட்டார்.

இப்பாடசாலைகளில் உள்ள தேவைகள் யாவற்றையும் கணிப்பீடு செய்தார்.

வவுனியா பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. நவரட்ணராஜாவுடன் இதுபற்றி கலந்துரையாடலும் மேற்கொள்ளப்பட்டது. (தி)

# ஆப்கானிஸ்தானில் ஸ்திர அரசு அமையுமா?



காபுல் நகரமக்கள் தற்போது இரண்டு பொதுவான பிரச்சினைகளில் முக்கியமாக சிக்குண்டு தவிக்கின்றனர். முதலாவது மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகரித்து விட்டது, பொருட்களின் விலைகள் உச்சகட்டத்தை அடைந்துவிட்டன. தாம் பெற்றுக் கொள்ளும் சம்பளத்தை வைத்துக் கொண்டு தமக்குத்தேவையான அடிப்படைப்பொருட்களையே வாங்க முடியாத நிலையில் உள்ளனர், அடுத்தது இந்த விலையேற்றமும் மக்களின் வாழ்க்கைக்கு அச்சுறுத்தலாகவும் இருக்கும் பல ஆண்டுகால போர். இந்த இரண்டும் ஆப்கான் மக்களை வாட்டிவதைக்கின்றன. இவ்வளவு பிரச்சினை

தகைய விமானங்களை பாகிஸ்தான் பெற்றுக் கொள்ளுமிடத்து அது சோவியத் படைகளுக்கெதிராக பாவிக்கப் படுவதிலும் தமக்கெதிராகவே கூடுதலாக பாவிப்பதற்கான சாத்தியக் கூறுகள் உண்டு என இந்தியா பலமுறை சோவியத் ரஷ்யாவிற்கு தெரிவித்ததை தொடர்ந்தும் புதிய தலைவர் மிக்கெயில்கொர்பசேவின் மறுசீரமைப்பு கொள்கையும் ஆப்கான் படைகளை திருப்பி அழைத்துக்கொள்வதற்கு வழி

இருக்கும் ஆப்கான் அரசு 1973ஆம் ஆண்டு நாட்டைவிட்டு வெளியேறிய பழைய மன்னர் சஹிர் ஷா (வயது 75) அவர்களையும் பேச்சுவார்த்தை மேடைக்கு அழைத்திருந்தது. மன்னர் ஷாவுக்கு இன்னமும் மக்கள் மத்தியில் ஒரு தனிமரியாதை இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். அதே போல கிளர்ச்சிக் குழுக்களிலும் மன்னரின் கொள்கைகளை ஆதரிக்கும் படைகளும் அடங்கி இருப்பதும் குறிப்

டிற்குள் கொண்டு வந்தன.

ஆகவே டாக்டர் நஜீப் புல்லா தமது ஆட்சியை சோவியத்தின் உதவியுடன் ஆப்கானிஸ்தானில் ஒரு ஸ்திரத் தன்மையை பெற வைத்துள்ளார். சோவியத் இராணுவ பலம் இல்லாமலே கிளர்ச்சிக்கார படைகளை காபூல் நகரிலிருந்து உள்நாட்டு படைகளின் உதவியுடன் விரட்டி

**லோகன்**

உள்ளார். இடைக்கால அரசு அமைப்பதில் கிளர்ச்சிக்காரர்களுக்கு புதிய சிக்கல்களை உருவாக்கி உள்ளார். அதே நேரம் நாட்டின் பொருளா

கூடிய கவனத்துடன், நிதான விலையில்...

- குளிர் சாதனப் பெட்டிகள்
- எயார் கொன்டிசன்
- றேடியோ
- ரீவி
- டெக்

மற்றும்...

மோட்டர் றிவைன்டிங்,
பெயின்ற் வேலைகள்
மின்சார உபகரணங்கள்

யாவும் குறித்த தவணையில்
செய்து கொடுக்கின்றோம்.

அறியக்கூடியதாக உள்ளது. யில் எத்தகைய எதிர்ப்புக் ளப்பட்டது. (தி)

# அமையுமா?



காபூல் நகரமக்கள் தற்போதுஇரண்டு பொதுவான பிரச்சினைகளில் முக்கியமாக சிக்குண்டு தவிக்கின்றனர். முதலாவது மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகரித்து விட்டது, பொருட்களின் விலைகள்உச்ச கட்டத்தை அடைந்துவிட்டன. தாம் பெற்றுக் கொள்ளும் சம்பளத்தை வைத்துக் கொண்டுதமக்குத்தேவையான அடிப்படைப்பொருட்களையே வாங்கமுடியாத நிலையில் உள்ளனர், அடுத்தது இந்த விலையேற்றமும் மக்களின் வாழ்க்கைக்கு அச்சுறுத்தலாகவும் இருக்கும் பல ஆண்டுகால போர். இந்த இரண்டும் ஆப்கான் மக்களை வாட்டிவதைக்கின்றன. இவ்வளவு பிரச்சினைகளூடாகவும் ஆப்கானிஸ்தானிய தலைவர் டாக்டர் நஜீப்புல்லாவின் கம்யூனிச அரசாங்கம் எதிர் நீச்சல் போட்டுக் கொண்டிருப்பது வெளிப்படையாகும்.

## கடந்தகாலத்தில்...

தெற்கே அடிப்படையாக கம்யூனிசத்தை எதிர்க்கும் கொள்கைகளைக் கொண்ட பாகிஸ்தானையும் ஈரானையும் எல்லையாக கொண்டமைந்த ஆப்கானிஸ்தான் 1973 ஆம் ஆண்டு முடியாட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்த காலந்தொட்டே அந்நியநாட்டு உளவு ஸ்தாபனங்கள் உட்பட நேரடி இராணுவத் தலையீடுகளையும் எதிர்நோக்கிவந்தது. கம்யூனிச ஆட்சியை கவிழ்ப்பதற்கெனப் போராடிவரும் அரச எதிர்ப்பு கிளர்ச்சிப் படைகளுக்கு அமெரிக்கா, பாகிஸ்தான் சீனா, ஈராக் என பல நாடுகள் உதவி ஒத்தாசைகள் செய்து வந்தன.

இதனை உணர்ந்த சோவியத் ரஷ்யா தனது தென் பகுதியில் தனக்கு எதிராக ஓர் அரசு அமைவது தனது குடியரசுகளின் பாதுகாப்பிற்கு உத்தரவாதமற்ற தன்மையைக் கொண்டுவருகிறது என்பதால் ஆப்கான் அரசின் இசைவுடன் 1979 ஆம் ஆண்டு தனது படைகளை, ''சட்ட பூர்வமான ஆப்கான் அரசைப் பாதுகாத்து அமைதியை நிலைநாட்டுதல்'' என்ற போர்வையில் அனுப்பி வைத்தது. இதனைத்தொடர்ந்து சோவியத் யூனியனையும் அதனைச்சார்ந்த நாடுகளிலும் பரவிவரும் கம்யூனிச சித்தாந்தத்தை பரவவிடாது தடுத்தல் என்ற கொள்கையில் முழுமூச்சாக இருந்து வரும் மேலைத்தேய நாடுகள் பாகிஸ்தானூடாக கிளர்ச்சிப் படைகளுக்கு மேலும் பெரும் உதவிகள் செய்தன.


இதனைத் தொடர்ந்து ஆப்கானிஸ்தானின் ''இந்துகுஷ்'' மலை அடிவாரங்களில் சோவியப் படைகளுக்கும் அமெரிக்க ஆதரவு பெற்ற கிளர்ச்சிப் படைகளுக்கும் இடையில் பெரும் யுத்தங்கள் நடைபெற்றன. இந்த யுத்தங்களின் போது பல புதிய சோவியத் ''மிக்'' ரகவிமானங்களும் அமெரிக்க ''ஸ்ரிங்கர்'' ஏவுகணைகளும் பரீட்சார்த்தமாக பரஸ்பரம் ஒன்றை ஒன்று தாக்கிக்கொண்டன என்றால் அது மிகையாகாது.

## உலக அரசியல் நோக்கு

யுத்தம் ஒரு புறம் நடைபெற்றுக்கொண்டிருந்த அதே வேளை ஆப்கானிஸ்தானிய அகதிகள் பிரச்சினை விஸ்பரூபம் எடுக்கத் தொடங்கியது. பெருந்தொகையான ஆப்கானிஸ்தானிய மக்கள் பாகிஸ்தானை நோக்கி வந்தனர். மேலும் ஒரு பிரிவினர் மேலை நாடுகளில் தஞ்சம் கோரினர். இதனைசந்தர்ப்பமாகவைத்து பலமேலைநாடுகள் 'சோவியத் படைகள் ஆப்கானிஸ்தானில் மேற் கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளும் மனித இனத்திற்கே எதிரானவை'' என வர்ணித்தன. அத்துடன் ஆப்கான் கெரில்லாக்கள் மீது தாக்குதல்கள் செய்வதற்கு கோடிக் கணக்கான ரூபிள்களை செலவிட வேண்டியிருந்தமையும் இவை எல்லாவற்றுடன் ஆப்கான் கெரில்லாக்களுக்கும் அகதிகளுக்கும் உதவி என்ற பெயரில் பாகிஸ்தான் அரசு பெருந்தொகை ஆயுதங்களையும் நிதியையும் தமக்கு ஆதரவான நாடுகளிடம் பெற்றுக் கொண்டது. இறுதியாக ஆயுத உதவி நவீன ரக ''எவாக்ஸ்'' என்றராடர் பொருத்தப் பட்ட விமானம் வரை சென்று விட்டதால் இத்தகைய விமானங்களை பாகிஸ்தான் பெற்றுக் கொள்ளுமிடத்து அது சோவியத் படைகளுக்கெதிராக பாவிக்கப் படுவதிலும் தமக்கெதிராகவே கூடுதலாக பாவிப்பதற்கான சாத்தியக் கூறுகள் உண்டு என இந்தியா பலமுறை சோவியத் ரஷ்யாவிற்கு தெரிவித்ததை தொடர்ந்தும் புதிய தலைவர் மிக்கெயில்கொர்பசேவின் மறுசீரமைப்பு கொள்கையும் ஆப்கான் படைகளை திருப்பி அழைத்துக்கொள்வதற்கு வழி வகுத்தது எனலாம்.

## தற்போதைய நிலைமை

சோவியத் தலைவர் மிக்காயில் கொர்பசேவ் 1989ஆம் ஆரம்பப் பகுதியில் ஜெனிவாவில் நடைபெற்ற மகாநாட்டில் தமது நாடு ஏற்றுக் கொண்ட விடயங்களை முழுமையாக நிறைவேற்றினார். ஆனால் கிளர்ச்சிக் குழுக்களோ இடைக்கால அரசு ஒன்றை அமைப்பது



ஆப்கான் கெரில்லாப்போராளி

பற்றி செய்துகொண்ட முடிவுகளைச் சரிவர நிறைவேற்ற முடியாது, ஒன்றிலும் ஒன்று கூடுதல் அதிகாரப் பிரதிநிதித்துவம் வேண்டும் எனக் கோரின. இதனால் இடைக்கால அரசு அமைப்பது நடைமுறைச் சாத்தியமற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டது எனலாம். கிளர்ச்சிக் குழுக்களின் அதிகாரப் போட்டி ஒருபுறமிருக்க, சோவியத் ரஷ்யாவின் பக்கபலத்துடன் இருக்கும் ஆப்கான் அரசு 1973ஆம் ஆண்டு நாட்டைவிட்டு வெளியேறிய பழைய மன்னர் சஹிர் ஷா (வயது 75) அவர்களையும் பேச்சுவார்த்தை மேடைக்கு அழைத்திருந்தது. மன்னர் ஷாவுக்கு இன்னமும் மக்கள் மத்தியில் ஒரு தனிமரியாதை இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். அதே போல கிளர்ச்சிக் குழுக்களிலும் மன்னரின் கொள்கைகளை ஆதரிக்கும் படைகளும் அடங்கி இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இதனால் மன்னரை ஆதரிக்கும் படைகள் தாம் ஒரு பிரிவாக நின்றுவிட எண்ணின. இதனால் கிளர்ச்சிக் குழுக்களின் ஒற்றுமையில் மேலும் பல பிளவுகள் ஏற்பட்டன. இதனால் இடைக்கால அரசு அமைத்தும் ஒற்றுமையற்ற ஓர் அரசே அமைக்க முடியும் என்பது வெளிப்படையாகி விட்டது. மேலும் புதிய இடைக்கால அரசின் பாதுகாப்புத் துறையில் முக்கிய பொறுப்பு வகித்து வந்த ஜெனரல் ஷா நவாஸ் டனாய் என்பவர் தலைமையில் அண்மையில் ஒரு இராணுவ சதிப்புரட்சி நடைபெற்றது. மிக உக்கிரமாக நடைபெற்ற இந்த காபூல் நகர சண்டை இறுதியில் தோல்வியைத் தழுவியது. புரட்சியை முன்நின்று நடத்தியவர் பாகிஸ்தானுக்குத் தப்பி ஓடி விட்டார். அரசபடைகள் நாட்டை முழுக்கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தன.

ஆகவே டாக்டர் நஜீப்புல்லா தமது ஆட்சியை சோவியத்தின் உதவியுடன் ஆப்கானிஸ்தானில் ஒரு ஸ்திரத்தன்மையை பெற வைத்துள்ளார். சோவியத் இராணுவ பலம் இல்லாமலே கிளர்ச்சிக்கார படைகளை காபூல் நகரிலிருந்து உள்நாட்டு படைகளின் உதவியுடன் விரட்டி

## லோகன்

உள்ளார். இடைக்கால அரசு அமைப்பதில் கிளர்ச்சிக்காரர்களுக்கு புதிய சிக்கல்களை உருவாக்கி உள்ளார். அதே நேரம் நாட்டின் பொருளாதார அழிவுக்கும் முகம் கொடுத்து சோவியத் படைவிலகி ஒரு வருடத்துக்கு மேலாக ஆட்சி செய்கின்றார் ஆயின் அது ஏகாதிபத்தியங்களின் காலடியில் கிடக்கும் கிளர்ச்சி கெரில்லாக்களின் இயலாமையையும் நஜீப்புல்லாவின் புரட்சிகர கம்யூனிச அரசின் தந்திரோபாயமுமே ஆகும்.


கூடிய கவனத்துடன், நிதான விலையில்...

- குளிர் சாதனப் பெட்டிகள்
- எயார் கொன்டிசன்
- றேடியோ
- ரீவி
- டெக்

மற்றும்...

மோட்டர் றிவைன்டிங்,
பெயின்ற் வேலைகள்
மின்சார உபகரணங்கள்

யாவும் குறித்த தவணையில்
செய்து கொடுக்கின்றோம்.

நாடுங்கள்...

யுனைட்டட் சேர்விஸ்
165, ஆஸ்பத்திரி வீதி,- யாழ்ப்பாணம்.

(B/948)



உதவித் தாதியர் பயிற்சி நெறி

TRAINING FOR NURSES AIDE

19-5-90 இல் ஆரம்பமாகவுள்ளன

1. தகைமை வாய்ந்த பதிவுத்தாதியர்களால் (R. N. O) விரிவுரைகள் நடைபெறுகின்றன
2. பதினெட்டு மாதகால பாடத்திட்டங்கள் ஆறுமாதகால செய்முறைப் பயிற்சிகள்
3. செய்முறைப் பயிற்சிகள் யாவும் யாழ்நகரின் பிரபல்யம் வாய்ந்த வைத்தியசாலையில் நடைபெறுகின்றன
4. அரச அங்கீகாரம் பெற்ற சர்வதேச தகைமையுடைய சான்றிதழ்
5. பாடத்திட்டங்கள் யாவும் தமிழ் மொழிமூலம் போதிக்கப்படுகின்றன
6. இலவச ''அக்குபங்சர்'' பயிற்சிகள்

உங்கள் பதிவுகட்கு:-

அதிபர்

Dr. V. P. சுந்தரராஜன்

சாயி மெடிக்கல் அக்கடமி

இல 10, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

B.694)

ஈழநாதம்

ரஞ்சனின

திரும்பிவரும் போது மதுபோ தையில் வந்து விடுதலைப் புலிகள் முகாமுக்கு முன்பாக ஆத்திரமூட்டும் வகையில் கூச்சல் கும்மாளம் போட்டு சென்றதால்தான் அவர்களை விசாரணை செய்ய வேண்டி ஏற்பட்டது'' என்று தெரி க்கப்பட்டது.




# அரசின் நடவடிக்கை எமக்கு சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது

(வவுனியா)

விடுதலைப் புலி ளுடன் பேச்சுவார்த்தை செய்வதால் பிரச்சினை தீரும், அமைதி திரும்பும் என்று நன்கு தெரிந்து வைத்துக் கொண்டும், ஸ்ரீலங்கா அரசு இன்று துரோகக் கும்பலுடன் பேச்சு வார்த்தை நடாத்த ஆரம்பித்து விட்டது. இது அரசின் மீது எமக்கு சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

ஓமந்தை தமிழ் மகா வித்தியாலய மைதானத்தில் நேற்று முன் தினம் புதன் கிழமை நடைபெற்ற தேனிசைச் செல்லப்பாவின் இசை நிகழ்ச்சிகுத் தலைமை வகித்துப் பேசும் போது, வன்னிப் பிராந்திய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் திரு. சந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசும்போது.

ஆயுதங்களில் விருப்பம் கொண்டவராக நாம் என்றும் இருந்ததில்லை. எமது ஆயுதப் போராட்டம் ஆரம்பித்ததன் பின்னர், எம் மக்களின் சுய நிர்ணய உரிமையைப் பெற்றெடுப்பதற்காக பல பேச்சுவார்த்தைகளில் நாம் கலந்து கொண்டோம். இச் சமயங்களில், ஸ்ரீலங்கா அரசும், இந்திய அரசும் எம்மை ஏமாற்றி வந்தன.

இந்தியப் படை எமது பிரதேசத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த சமயத்தில், ஸ்ரீலங்கா அரசுடன் பேச வேண்டிய சூழ்நிலை எமக்கு ஏற்பட்டது. இந்தப் பேச்சு வார்த்தையில் பல கட்டங்களை நாம் கடந்து விட்டோம்.

இன்றும் ஜனாதிபதி பிரேமதாசாவின் நோக்கங்களை நாம் ஆதரிக்கின்றோம். ஆனால் தமிழ் மக்களை மூடர்களாக்கவும், முட்டாள்களாக்கவும் ஸ்ரீலங்கா அரசு முனையுமென்றால், அதுவே பெரிய விபரீதமாக முடியும்.

எமது போராட்டம் எமது கைகளிலேயே தங்கியுள்ளது. எமது மக்களை நாம் தொடர்ந்து பாதுகாப்போம். எமது மக்களின் விடுதலையைப் பெ''ற்றுக் கொடுப்போம் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

இந்தியப்படை இங்கு இருந்த சமயத்தில், தமிழகம் எமக்கு பல உதவிகளைச் செய்து வந்தது. இன்றும் பல உதவிகளைச் செய்து வருகிறது. இந்த வகையில் தேனிசைச் செல்லப்பாவின் பணி முக்கியமானது.

செல்லப்பாவின் இசைப் பாடல்களை நேரடியாகக் கேட்பதற்கு எமது உழைப்பே காரணம் என்று குறிப்பிட்டார்.

## ஓமந்தைக் கூட்டத்தில் சந்திரன்

விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட மகளிர் அமைப்பின் பொறுப்பாளர் செல்வி ரதி பேசும் போது

இன்று நாம் தேசிய விடுதலையுடன், பெண் விடுதலைக்காகவும் போராடிக் கொண்டிருக்கின்றோம்.

எமது பெண் விடுதலைக்கான போராட்டத்திற்கு, எமது தலைவர் உறுதுணையாக நின்று வழிநடத்திக் கொண்டிருக்கின்றார் என்று குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகளின் கலை, கலாசார பொறுப்பாளர் திரு. புதுவை ரத்தினதுரை தமதுரையின்போது,

எமது எழுத்தாளர்களும், கலைஞர்களும் போராட்டக் கால ஆவணங்களை குறுகிய காலத்தில் பதிவு செய்யாது விட்டால், நாம், எமது சமுதாயப் பணியிலிருந்து தவறி விட்டவர்களாவோம்.

எமது கலைஞர்களில் பலர் செய்யத் தவறியதை, செய்து முடித்தவர் செல்லப்பா ஆவார்.

இன்று பல வசதிகளை இழந்தும் செல்லப்பாவின் வாய் எமது மக்களுக்காக தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறது.

பல பாடகிகள் பாட முன் வராத போது, எமக்காகப் பாட முன் வந்தவர் பாடகி சொர்ணலதா. இவர்களை கௌரவிப்பதற்காகவே இம் மேடை அமைக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார்.

யாழ். மாவட்ட கலை, கலாசாரப் பொறுப்பாளர் செல்வி சீதா பேசும்போது, எமது உணர்ச்சிகளை நீங்களும், உங்கள் உணர்ச்சிகளை நாமும் புரிந்து வைத்துக் கொள்ள செல்லப்பாவின் பாடல்கள் உதவுகின்றன என்றார்.

நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் வவுனியா மாவட்ட விடுதலைப் புலிகள் இராணுவப் பொறுப்பாளர் திரு. தயாபரன் குத்துவிளக்கேற்றி வைத்தார். இவரே செல்லப்பாவிற்கு மாலை அணிவித்து கௌரவித்தார்.

இரவு எட்டு மணியளவில் தொடங்கிய இந் நிகழ்ச்சிக்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் வருகை தந்திருந்தனர்.

(தி)

---

### வடபகுதி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மளவு வெங்காயம் உற்பத்தி செய்யப்பட்டு வந்தது. இவ் வருடம் தொடக்கம் எமது சிறு பயிர் உற்பத்தி பெருமளவு அதிகரிக்கும் என எதிர் பார்க்கிறோம் எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் அறுவடை செய்யப்படும் சிறு பயிர்களை ஏற்றுமதி செய்வது சம்பந்தமாக இவர் குறிப்பிடுகையில் சிறு முதலாளிகளின் போட்டியாலும் விவசாயிகளின் குறுகிய இலாப நோக்காலும் எமது ஏற்றுமதி பாதிப்படைகிறது. போக்கு வரத்தைப் பொறுத்த வரையில் இரயில் சேவை சீரடைந்துள்ளதால் எமது உற்பத்திகளை தெற்கிற்கு திட்டமிட்டு ஏற்றுமதி செய்ய இர

---

## உயிரிழந் தோருக்கு நிவாரணம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உயிரிழப்பு, காயமுற்றவர்களுக்கான புனர்வாழ்வு நஷ்டஈடு நிவாரணம் வழங்கும்

---

## வீடமைப்பு போட்டிப் பரிசு பெற்றோருக்கு சன்மானம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 1988-89 ஆண்டுக்கான தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை நடாத்திய குறைந்த செலவிலான வீடமைப்புப் போட்டியில் பரிசு பெற்றோருக்கு சன்மானங்கள் வழங்கப்பட்டன.

இப் போட்டியில் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு கிராமோதய சபை மட்டத்தில் ரூபா 62,000, பிரதேச சபை மட்டத்தில் ரூபா 8,000

பணம் தமக்குக் கிடைப்பதற்கு காலதாமதமானதால் நடந்து முடிந்த போட்டிப் பரிசுப் பணத்தை உரியவர்களுக்கு உடன் வழங்க முடியாதிருந்ததென்றும், இப்பொழுது அப் பணம் கிடைத்ததனால் உடன் வழங்க கூடியதாக இருந்ததென்றும் தேசிய விடமைப்பு அபிருத்தி மாவட்ட முகாமையாளர் தெரிவித்தார்.

(58)

---

வீடமைப்புக்

---

### பாடசாலை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

உணவூட்டலையும் மேற்கொண்ட அதிபர்கள், ஆசிரியர்கள் உதவியாளர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் அவர் கூறினார்.

இத் திட்டத்திற்குப் பதிலாக உணவுமுத்திரை வழங்கும் திட்டம் நடைமுறைக்கு வரும் எனத் தெரியவருகிறது.

(மு)

---

### வடக்கில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னைக்கு நிரந்தரத் தீர்வு காணலாமென்று விடுதலைப் புலிகள் வழங்கிய ஒத்துழைப்பை சில தீய சக்திகளின் தூண்டுதலால் அரசாங்கம் தப்புக்கணக்குப் போட்டுவிட்டது என்றே விடுதலைப்புலிகள் கருதுவதாகத் தெரிகிறது.

விடுதலைப்புலிகளின் பலத்தைக் கண்டே அரசாங்கம் அவர்களைப் பேச்சு வார்த்தைக்கு அழைத்தது, பேச்சு வார்த்தை வெற்றியளிக்கக் கூடாது என்பதில் கவனமாக இருந்துவரும் தீய சக்திகள் இடையில் நுழைந்து பேச்சு வார்த்தையைக் குழப்புவதற்கு முயற்சி செய்துவந்ததுடன் விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையே மோதல் நிலையை ஏற்படுத்துவதிலும் தீவிரமாக முயற்சி செய்துவருகின்றன என்றும் விடுதலைப்புலிகள் வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது

அரசாங்க நிலைமையைப் புரிந்து தகுந்தபரிகாரம்காணத் தவறினால் மிக மோசமான

---

சாவகச்சேரியில்

## 15 இலட்சம் ரூபா செலவில் தும்புத் தொழிற்சாலை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரியில் 15இலட்சம் ரூபா செலவில் ஒரு தும்புத் தொழிற்சாலை புனரமைப்பு செய்யப்படவுள்ளதெனயாழ். மாவட்ட சிறுகைத்தொழில் சபை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி கச்சாய்வீதியில் அமைந்துள்ள இந்த தும்புத் தொழிற்சாலைக்குப் புதிய வடக்கு, கிழக்கு மாகாண சபை பதவி ஏற்றதும் நேர்முகப் பரீட்சை மூலம் உள்ளூரிலிருந்து தொழிலாளரும்ர் நிர்வாக உத்தியோகஸ்தர்களும் தெரிவு செய்யப்படுவ, எனவும் அவ்வதிகாரி தெரிவித்துள்ளார்.

இத்தொழிற்சாலை கடந்த காலத்தில் தேங்காயெண்ணை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையாக மாற்றப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

(லோ)

---

## சந்திரசேகரன் தீவிரவாத இயக்கத் தலைவராம்

### —பொலிஸ் மாஅதிபர்

(கொழும்பு)

கைது செய்யப்பட்ட தீவிரவாதி ஒருவர் கொடுத்த தகவலின் போரிலேயே சந்திரசேகரன் கைது செய்யப்பட்டார் என்றும், அவர் ஒரு தீவிரவாதக் குழுவிற்கு தலைதாங்குவதாகவும்பொலிஸ் மாஅதிபர் எனேஸ் பெரேரா தெரிவித்தார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் கடந்த சில நாட்கள் மலையகத்தில் சில தோட்டங்களில் வேலை நிறுத்தம் தொடர்பாகவும், சந்திரசேகரன் கைது செய்

உல்லாசப்பிரயாணிகளிடம் ஹோட்டலில் நடந்த கொள்ளைகளோடு சம்பந்தப்பட்ட நான்கு பேர் கைதுசெய்யப் பட்டிருப்பதாகவும் கொள்ளையர் தலைவருக்கும் ஜே. வி. . தொடர்பிருப்பதாகவும் தெரிவித்தார்.

---

## நலன்புரிச் சங்கம்

(பச்சிலைப்பள்ளி)

பளைஉதவிஅரசாங்கஅதிபர் திரு. அ. கந்தசாமிதலைமையில் நோயாளர் ஆஸ்பத்திரி நலன் புரிச்சங்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மளவு வெங்காயம் உற்பத்தி செய்யப்பட்டு வந்தது. இவ் வருடம் தொடக்கம் எமது சிறு பயிர் உற்பத்தி பெருமளவு அதிகரிக்கும் என எதிர்பார்க்கிறோம் எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் அறுவடை செய்யப்படும் சிறு பயிர்களை ஏற்றுமதி செய்வது சம்பந்தமாக இவர் குறிப்பிடுகையில் சிறு முதலாளிகளின் போட்டியாலும் விவசாயிகளின் குறுகிய இலாப நோக்காலும் எமது ஏற்றுமதி பாதிப்படைகிறது. போக்கு வரத்தைப் பொறுத்த வரையில் இரயில் சேவை சீரடைந்தள்ளதால் எமது உற்பத்திகளை தெற்கிற்கு திட்டமிட்டு ஏற்றுமதி செய்ய இரயில் பெட்டிகளை வாடகைக்கு அமர்த்திக் கொள்வது மிக அவசியம் என்றதுடன் இரயில் பெட்டிகளிலும் பார்க்க நேரடியாக நாம் அண்டை நாடுகளுக்கு எமது உற்பத்திகளை ஏற்றுமதி செய்ய பலாலி விமான நிலையத்தின் வசதியை பெற்றுக் கொள்வது மிக மிக அவசியம் என்றார். (லோ)

---

### சப் இன்ஸ்பெக்டர்

(4ஆம் பக்கம் பார்க்க)

ததே.

இது பற்றி நடைபெற்ற பொலிஸ் விசாரணையின் பின்பு ஒரு சப்-இன்பெக்டரும், 5 பொலிஸாரும் சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக உயர் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

---

மட்டக்களப்பு

### வெள்ளி மஞ்சரி

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

மொழி அரசு' என்றும் தொண்டை மண்டலாதீனம் 'பெருஞ்சொல்லமுதம்' என்றும் ஏற்கனவே பட்டமளித்து கௌரவித்துள்ளது.

தமிழ்ப்பணி, சமயப்பணி ஆகியவற்றை 50 வருடங்களுக்கு மேலாக ஆற்றிவரும் அன்னாருக்கு காலம் கடந்தாயினும் இன்று 'இலக்கிய மணி' என பட்டமளித்து கௌரவிப்பது வரவேற்கத் தக்கது

மேற்படி மூவரையும் காலம் கடந்து கௌரவித்தாலும் அவர்கள் வாழும்போதே அதைச் செய்தது வரவேற்கத்தக்கது.

– சாந்தி உதயகுமார்

---

இருந்த சமயத்தில், தமிழகம் எமக்கு பல உதவிகளைச் செய்து வந்தது. இன்றும் பல உதவிகளைச் செய்து வருகிறது. இந்த வகையில் தேனிசைச் செல்லப்பாவின் பணி முக்கியமானது.

செல்லப்பாவின் இசைப் பாடல்களை நேரடியாகக் கேட்பதற்கு எமது உழைப்பே காரணம் என்று குறிப்பிட்டார்.

---

### உயிரிழந் தோருக்கு நிவாரணம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உயிரிழப்பு, காயமுற்றவர்களுக்கான புனர்வாழ்வு நஷ்டஈடு நிவாரணம் வழங்கும் பணி தற்போது மீண்டும் ஆரம்பிக்கபட்டுள்ளது

பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்ட பட்டியலிலுள்ள 102 பேருக்கு இந் நஷ்டஈடு வழங்கப்படுகிறது

இதற்காக புனர்வாழ்வு அமைச்சு ரூபா 30 இலட்சம் வழங்கியுள்ளதாக செயலக அதிகாரியொருவர் தெரிவித்தார் (37)

---

தேவை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யலாளர் ரீ. சீனித்தம்பி அவர்கள் எமது ஈழநாதம் நிருபரிடம் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் இவ் டிப்போவில் தண்ணீர் வசதி இல்லை. தண்ணீர் தேவையானால் அருகில் உள்ள இலங்கை வங்கிக்குத் தான் செல்ல வேண்டும். ஒழுங்கான மின்சார வசதி இல்லை சாலைக்காரியாலயம் மட்டுமே மின்சார வசதியை பெறுகிறது ஏனைய பகுதிகள் இருளில் மூழ்கிக் கிடக்கிறது. இதனால் ஒழுங்கான பாதுகாப்பினை கண்காணிக்கமுடியாது. மற்றும் சிற்றுண்டிச் சாலை வசதி இல்லை தேநீர் குடிப்பதானால் ஒரு மைல் தொலைவிற்கு சென்று வர வேண்டும், எரிபொருள் நிரப்புவதானால் மட்டக்களப்புக்கே சென்று வர வேண்டும் கராச் வசதி இல்லை, இவ்வாறு பற்பல பிரச்சினைகள் இருந்தும் இவற்றினை மேலதிகாரிகளுக்கும் சம்பந்தப்பட்ட அமைச்சுக்கும் அறிவித்தும் இதுவரையும் எந்த ஒரு முன்னேற்ற நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பது கவலைக்குரியது என தெரிவித்தார், (29)

---

## வீடமைப்பு போட்டிப் பரிசு பெற்றோருக்கு சன்மானம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 1988-89 ஆண்டுக்கான தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை நடாத்திய குறைந்த செலவிலான வீடமைப்புப் போட்டியில் பரிசு பெற்றோருக்கு சன்மானங்கள் வழங்கப்பட்டன.

இப் போட்டியில் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு கிராமோதய சபை மட்டத்தில் ரூபா 62,000, பிரதேச சபை மட்டத்தில் ரூபா 8,000, பிரதேச மட்டத்தில் ரூபா 15,000 மொத்தமாகக் கிடைத்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பிரதேச ரீதியாக புதுக்குடியிருப்பைச் சேர்ந்த எஸ். கணேசமூர்த்தி, துணுக்காயில் கே. நவரட்ணராசா, பாண்டியன் குளத்தில் எஸ். செல்வராஜா முல்லைத்தீவில் எஸ் கந்தப்பிள்ளை ஆகியோர் முதலாம் இடத்தினைப் பெற்றுள்ளனர். மாவட்ட அடிப்படையில் எஸ். கந்தப்பிள்ளை முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

பணம் தமக்குக் கிடைப்பதற்கு காலதாமதமானதால் நடந்து முடிந்த போட்டிப் பரிசுப் பணத்தை உரியவர்களுக்கு உடன் வழங்க முடியாதிருந்ததென்றும், இப்பொழுது மையில் பணம் கிடைத்ததனால் உடன் வழங்க கூடியதாக இருந்ததென்றும் தேசிய விடமைப்பு அபிருத்தி மாவட்டமுகாமையாளர் தெரிவித்தார். (58)

---

### வீடமைப்புக் கொடுப்பனவுகள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஒட்டிசுட்டான் துணுக்காய் மாந்தை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கான புனர்வாழ்வு புனரமைப்பு திட்ட வீடமைப்புகளுக்கான கொடுப்பனவுகள் எதிர்வரும் ஜூன் 17ஆம் திகதி மாங்குளம் மக்கள் வங்கி ஊடாக வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன இத் தகவலை முல்லைத்தீவு மாவட்ட வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை முகாமையாளர் தெரிவித்தார் (58)

---

## கடல் உவர் மண்ணால் விவசாயம் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கைதடி கடலை அண்டியுள்ள வயல்கள் தோட்டங்களில் மேற்கொள்ளப்படும் விவசாயநடவடிக்கைகள் பெரும் பாதிப்பு குள்ளாகியுள்ளன வரட்சிக்காலங்களில் கோப்பாய் கைதடி கடல் வற்றிவிடுவதால் காற்றுவீசும் போது உலர்ந்த உவர்த்தன்மையான மண் காற்றினால் அள்ளிச் செல்லப்பட்டு அண்மையிலுள்ள விவசாய நிலங்களில் படை படையாக விழுகிறது.

இதன் காரணமாக அந்நிலங்களில் இவ்வுர் மண்ணினால் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளமுடியாது பெரும் பாதிப்பேற்படுகிறது இப்பிரச்சினையை நிவர்த்தி செய்ய கடற் பகுதி ஆழமாக்கப்பட வேண்டும்.

இக் கோரிக்கையை கைதடிப் பகுதி சனசமூக கிராம முன்னேற்றச் சங்கப் பிரதிநிதிகள் தென்மராட்சிப் பகுதிக்கு உத்தியோகபூர்வ விஜயம் செய்த யாழ் அரசாங்க அதிபரிடம் மகஜர் மூலம் சமர்ப்பித்தனர் அத்துடன் கைதடி ஆயுர்வேத வைத்தியசாலை வன் செயலால் பாதிப்புற்ற வீதிகள் கட்டடங்கள் என்பவற்றை புனரமைக்கும் படியும் கோரிக்கை விடுத்தனர் (மு

---

பாண்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி

தயாரிக்கப்படும் உணவு வகைகளைக் கொண்டுவரும் மாணவர்களுக்கு, மாத்திரமே இனிமேல் பகல் போசனத்திற்கான 3 ரூபாய் வழங்கப்படும்

இதேவேளை பகல்போசனத்திற்காக வழங்கப்படும் பணத்திற்குப் பதிலாக மாணவர்களுக்கு கூப்பன் வழங்கும் திட்டம் கல்வி அமைச்சால் உத்தேசிக்கப்பட்டுள்ளது. பரீட்சார்த்தமாக இத்திட்டம் தற்போது கம்பஹா மாவட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக அறியவருகிறது மதிய போசனத் திட்டம் யாழ் மாவட்டத்திலும்நாளையுடன் நிறுத்தப்பட்டு மேற்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும் (மு)

---

றது.

விடுதலைப்புலிகளின் பலத்தைக் கண்டே அரசாங்கம் அவர்களைப் பேச்சு வார்த்தைக்கு அழைத்தது, பேச்சு வார்த்தை வெற்றியளிக்கக் கூடாது என்பதில் கவனமாக இருந்துவரும் தீய சக்திகள் இடையில் நுழைந்து பேச்சு வார்த்தையைக் குழப்புவதற்கு முயற்சி செய்துவந்ததுடன் விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையே மோதல் நிலையை ஏற்படுத்துவதிலும் தீவிரமாக முயற்சி செய்துவருகின்றன என்றும் விடுதலைப்புலிகள் வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது

அரசாங்க நிலைமையைப் புரிந்து தகுந்தபரிகாரம்காணத் தவறினால் மிகமோசமான நிலையையே அடைய நேரிடுமென்றும் விடுதலைப்புலிகள் வட்டாரங்களில் கருதப் படுகிறது

இதே சமயம் மக்களைப் பாதுகாப்பதற்கு விடுதலைப் புலிகள் தயாராக இருப்பினும் மக்களும் தங்களைப் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைகளில் கவனம் செலுத்த வேண்டும் என விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் கருதுகின்றன.

**குண்டு வீச்சிலிருந்து பாதுகாப்பது எப்படி? இதன் விபரம் நாளை 'ஈழநாதம்' பத்திரிகையில் வெளிவரும்,**

---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி

சட்டப்படி

திருந்தார்.

இதன் பிரகாரம் 1988 டிசம்பர் வரையில் கொடுப்பனவு வழங்கப்பட்டது.

உதவி வைத்திய அதிகாரிகள் சமர்ப்பித்த ஓவர்ரைம் செய்த வேலைக்கு குறைவாக தம் இஷ்டப்படி வெட்டிக் குறைத்து நிர்வாகம் மேற்படி கால ஓவர்ரைம் வழங்கியுள்ளது.

1989 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஓவர்ரைம் வழங்கப்படவில்லை. இது தொடர்பாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருடன் பல தடவைகள் தொடர்புகொண்டும் பலனளிக்கவில்லை.

இதனையடுத்தே தொழிற் சங்க நடவடிக்கையில் ஈடுபடப்போவதாக சங்கம் அறிவித்துள்ளது. (37)

---

## இயக்கத் தலைவராம்

### –பொலிஸ் மாஅதிபர்

(கொழும்பு)

கைது செய்யப்பட்ட தீவிரவாதி ஒருவர் கொடுத்த தகவலின் பேரிலேயே சந்திரசேகரன் கைது செய்யப்பட்டார் என்றும், அவர் ஒரு தீவிரவாதக் குழுவிற்கு தலைதாங்குவதாகவும்பொலிஸ் மா அதிபர் எனேஸ் பெரேரா தெரிவித்தார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் கடந்த சில நாட்கள் மலையகத்தில் சில தோட்டங்களில் வேலை நிறுத்தம் தொடர்பாகவும், சந்திரசேகரன் கைது செய்யப்பட்டது தொடர்பாகவும் பத்திரிகையாளர் ஒருவரின் கேள்விக்கு பதில் அளிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் சிகிரியாவில் உல்லாசப்பிரயாணிகளிடம் ஹோட்டலில் நடந்த கொள்ளைகளோடு சம்பந்தப்பட்ட நான்கு பேர் கைதுசெய்யப்பட்டிருப்பதாகவும் கொள்ளையர் தலைவருக்கும் ஜே. வி. பி. தொடர்பிருப்பதாகவும் தெரிவித்தார்.

---

### நலன்புரிச் சங்கம்

(பச்சிலைப்பள்ளி)

பளைஉதவிஅரசாங்கஅதிபர் திரு. அ. கந்தசாமிதலைமையில் நோயாளர் ஆஸ்பத்திரி நலன்புரிச்சங்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இதன் தலைவராக டாக்டர் அம்பிகை பாகனும், செயலாளரக திரு. பா. யோர்ஜ், பொருளாளர்திரு.இ.செல்லத்துரை ஆகியோரும் தெரிவானார்கள்.

---

### தூதுவராலயத்தில் இருந்து

## கப்பல் சேவை ஆரம்பிக்க அனுமதி எதிர்பார்ப்பு

(கொழும்பு)

கடந்த ஆறு வருடங்களாக நிறுத்தப்பட்டிருந்த இலங்கை இந்திய கப்பற் சேவையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகளின் அங்கீகாரத்தை எதிர்பார்த்திருக்கின்றன.

48 மணி நேர அறிவித்தல் ராமேஸ்வரம் துறைக்குக் கொடுத்தால் போதும் என்று இச் சேவையை நடத்தும் இந்திய கப்பற் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

இந்திய உயர் ஸ்தானிகர் அனுமதி வழங்கினால் இன்றுள்ள நிலையில் 1991 ஜனவரியில் சேவை ஆரம்பிக்கலாம். ஆனால் இரு அரசாங்கங்களும் முன்னதாகவே எமக்கு அறிவித்தல்கள் தரவேண்டும் என்று கப்பற் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

---

## உள்ளூர் புடவைக்கைத்தொழில் அபிவிருத்திசெய்யஅமைச்சுமுடிவு

(கொழும்பு)

உள்ளூர் புடவைக் கைத் தொழிலை அபிவிருத்திசெய்ய அரசாங்கம் நடவடிக்கைஎடுத்துள்ளதாக பிரதமரும் நிதி அமைச்சருமான டி.பி. விஜயதுங்கா நேற்று பாராளுமன்றத்தில் கூறினார்.

சுங்கபகுதிக்கட்டளைச் சட்டத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை பாராளுமன்றத்தில் விவாதிக்கப் பட்டது.

இதற்கான சுங்கத்தீர்வை இருபத்தைந்து சத வீதத்தில் இருந்து பத்துசத வீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

இந்த வரிச்சலுகை மூலம் அரசாங்கத்துக்கு 50 லட்சம் ரூபா நட்டம் ஏற்படுகிறது எனவும் பிரதமர் தெரிவித்தார்.

உள்ளூர் கைத்தொழிலை விருத்தி செய்ய ஜனாதிபதி எடுக்கும் முயற்சியே இது என்றும் அவர் கூறினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எம். பியான தர்மசிறிசேன நாயக்கா இதனைப் பாராட்டி பேசினார்.

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு மே மாதம் 18-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# ஈழநாதம்

## வெள்ளி மஞ்சரி



''நாம் போராட வேண்டும் என்பதற்காகவோ சிறு நன்மைகளுக்காகவோ போராட வில்லை, எத்தனையோ தியாகங்களைச்செய்து விட்டோம். ஆதலால் போரை நாம் நிறுத்தி விட முடியாது; எப்பொழுது, எதிரிகள் அழிக்கப்பட்டு அல்லது ஒடுக்கப்பட்டு நமது இலட்சியம் அடையப்படுகிறதோ அப்பொழுது போர் தானாகவே நின்று விடும். அந்தக் காலம் எதிரிகளின் இயல்பைப் பொறுத்து அமையும்''

– பிரபாகரன்

## அக்கினிக் குஞ்சு

பட்டுச் சட்டைக்குள் - ஒரு
பட்டாம் பூச்சியோ - சின்னச்
சிமிழ்விழி திறந்து
சிந்தனையில் மிதக்கும்
சிட்டுக்குருவியோ - புது
வட்டநிலாக் குஞ்சோ..
வைகறையின் புதுக்கதிரோ
அட,
எட்ட நின்று இவள்
என்னத்தைப் பார்க்கின்றாள்?
பொட்டும் பூவுமென...
பொன்னணிந்த கோலமென
சட்டம் இருக்கின்ற
சமூகத்தின் சடங்குகளை
சுட்டும் விழிச்சுடரால்
சுட்டெரிக்க நினைத்தாயா?
சுடர்க்கொழுந்தாய் நின்றாயோ?
கொட்டும் பனி குளித்த
பொற் செடியோடுறவாடும்
சிட்டே நீ பகர்வாய்...
சிறு அரும்பே நீ பகர்வாய்.

'கிளியண்ணன்'



அந்நியச் சுவடுகள்
பதித்த
துப்பாக்கி நகங்கள்
உன் மேனியில்
படுகளப் பாலை வனங்களை
மட்டுமல்ல
முகலாவண்யங்களையும்
சிதைத்து.........

..........................

உன் தனித்துவத்தை
சிறைப்படுத்தும்
தேசியத்தின் விலங்கினை
தகர்ப்பதற்கு.......

......................

இழப்புகள் மத்தியிலும்

தமிழீழத்தின் தென் மாகாணம் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக நின்று அவர்கள் ஆற்றிய பணிகள் சிறப்புடையவையாகும்.

கவிஞர் காசி ஆனந்தனின் உடன் பிறந்த சகோதரரான மேஜர் சந்திரன், (காத்தமுத்து சிவஜெயம்) தமிழ்த் தேசிய இனத்தின் போராட்டம் மறைந்த தலைவர் வேலுப்பிள்ளை செல்வநாயகம் (தந்தை செல்வா) தலைமையில் உரிமைகளுக்கான போராட்டமாக இடம்பெற்ற காலம் தொட்டு இன்று தலை

கொள்ளவில்லை. அவன் ஒரு நாள் கவிஞர் காசி ஆனந்தனிடம் பின்வருமாறு கேட்டான்.

''அண்ணா நாங்கள் அறவழியில் வெறும் கைகளோடு போராடுகிறோம். நம்மைத் துப்பாக்கிகளால் அடக்க வருகிறார்களே! அறப்போர் தமிழர்களுக்குச் சரியான வழி தானா! காந்தி அடிகளையும் படித்தேன். நேதாஜி பகத்சிங் ஆகியோரையும் படித்தேன். எனக்கு என்னவோ நேதாஜியையும் பகத்சிங்கையும் தான் அருகில் வைத்துக்

பிரிவில் ஓர் அரசு வெளிக்களப்பிரிவு உத்தியோகத்தராகவிருந்த சிவஜெயம் ஒவ்வொரு கிராமம் கிராமமாக தனது பணிகளின் பொருட்டுச் சென்றான். அரசசேவையைத் தனது சுயநலனுக்காகப் பயன்படுத்தும் பலர் மலிந்த ஒரு பூமியில் அரசசேவையை விடுதலைக்குப் பயன்படுத்தக் கூடிய ஒரு களமாக அவன் ஆக்கிக் கொண்டான். மலேரியா தடுப்பு ஊழியராகவிருந்த ஜெயம் அண்ணை பெற்ற அனுபவங்களும் மக்கள் மத்தியில் அவனுக்கு இருந்த செல்வாக்

இருவர் மீதும் மட்டக்களப்பு அரசியல் அதிகாரி இராஜன் செல்வநாயகத்தைக் கொலை செய்யச் சதி செய்ததாகவும் மேஜர் அல்பிரட் துரையப்பா கொலையுடன் சம்பந்தமுடைய கிருபாகரன் என்ற இளைஞருக்கு மட்டக்களப்பில் புகலிடம் கொடுத்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டது. பின்னர் கண்டி போகம்பரை சிறைச் சாலையிலிருந்து பொரல்லை வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு இருவரும் மாற்றப்பட்டனர்.

### அகதிகளுக்கு உதவி மண்ணுக்குப் பாதுகாப்பு

1977ஆம் ஆண்டு இனக்கலவரத்தின் போது பாதிக்கப்பட்டு மண்டூர்க் கிராமத்திற்கு அகதிகளாக வந்த தமிழ் மக்களுக்கு தரைவழியாகவும் நீர் வழியாகவும் போதிய உணவு, உடை முதலான ஆதார சேவைகளைச்செய்து கொடுப்பதில் சிவஜெயம் முன்னின்று உழைத்தான். இதே வேளை வடமுனைப் பகுதியில் சிங்கள அரசின் திட்டமிட்ட குடியேற்றங்களுக்கு இடம் கொடாது தமிழர்களை அப்பகுதியில் குடியேற்றி தமிழ் மண்காக்கவும் தாயகம் பாதுகாக்கப்படவும் உழைத்தான்.

### 1983ல் இன ஒழிப்பு முயற்சி

1983ஆம் ஆண்டு கலவரம் பலரது மனதில் புதிய தாக்கங்களையும் புத்தூக்கங்களையும் உருவாக்கியது போல சிவஜெயத்தின் வாழ்விலும் மாற்றங்களை உருவாக்கியது. சிவஜெயம் சந்திரன், வள்ளுவன் என்ற பெயர்களில் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்து கொண்டான். இக்கால கட்டத்தில் இலங்கை இராணுவத்தால் கடுமையாகத் தேடப்பட்ட கவிஞர் காசி ஆனந்தனைப் போராளி சந்திரன் கருவேப்பங்கேணி பற்றைக் காடுகளில் மறைத்து வைத்துக் காப்பாற்றினான்.

கள். விடுதலையாகி வெளியே வந்த மேஜர் சந்திரன் இவ்விடயத்தை அறிந்து கொஞ்சம் கண்டனக் குரலில் சக போராளிகளுக்கு அறிவுரை வழங்கினார். இச்சம்பவம் தன்னிலும் பார்க்க தன்னுடைய சக போராளிகளையும் தான் சார்ந்த விடுதலை ஸ்தாபனத்தையும் எவ்வளவு வாஞ்சையோடு அவன் நேசித்தான். என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டுவதாக அமைந்துள்ளது எனவிடுதலைப்புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் சொன்னார்.

மேஜர் சந்திரன் கல்லடிமுகமில் மூன்றுநாள் சித்திரவதை அனுபவங்கள் பற்றி சுவரஸ்யமகா சக போராளிகளுக்கு எடுத்துக் கூறினான். அதில் ஒரு விடயம் சூடும் சுவையும் நிரம்பியதாகும். அவன் சொன்னான்.

''ஒரு நாள் என்னைச் சந்தித்த எனது நண்பர் ஒருவர் என் இடுப்பில் ஒரு தாயத்தைக் கட்டினார். கட்டிவிட்டு உனக்கு ஏதாவது ஆபத்து வருமாகவிருத்தால்தாயதது உடனே அதைக் காட்டிவிடும். ஆகவே இதனைக் கழற்றாமல் வைத்துக் கொள். என அன்புக்கட்டளையாகச் சொன்னார். நானும் ஏதோ அவர் கட்டுகிறார். இருக்கட்டும் என்று விட்டு விடடேன்.

## நேதாஜி

கல்லடி முகாமில் என்னை அடித்தும் தாக்கியும் சித்திரவதை செய்த இராணுவத்தினர் பின்னர் ஒரு அறை ஒன்றினுள் போட்டுப் பூட்டிவிட்டுச் சென்றனர். அப்போது ஆபத்து வரும்போது தாயத்தைப் பார் என்று அந்தநண்பர் சொன்ன விடயம் எனக்கு ஞாபகத்திற்கு வந்தது. தாயத்தைப் பார்த்தேன். ''அதுவும் நெளிந்து [illegible]ாய்த்தான் கிடந்தது.'' [illegible]ன்றான். நண்பர்கள் எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தனர். விடுதலை செய்த

கொடுத்துவிட்டேதான் நித்திரைக்குப் போவான்.

மேஜர் சந்திரன் மருத்துவ பொறுப்பாளனாக இருந்த போது காய்ச்சல நோய்வாய்ப் பட்ட ஒரு போராளி தான் காய்ச்சல் நோயால் இறந்து விடக்கூடாதுஎனக்கூறிமருந்து வாங்கிக் குடித்தான். மறு நாள் மாலை ஐந்து மணியளவில் எதிரியுடனான ஒருமோதலின்போது அவன் சைனைட் குடித்து வீரமரணமுற்றான், இந்த நிகழ்வு சந்திரனின் நெஞ்சத்தைத் தொட்டு விட்டது. எதிரியுடன் மோதி களத்தில் மடிவதில்தான் விடுதலை புலிகள் எவ்வளவு பெருமை அடைகின்றார்கள்: கழுத்தில் நஞ்சைக் கட்டிய புலிகள் களம் கண்டு அஞ்சியதுண்டா? என கவிஞர் புதுவைஇரத்தினதுரை பாடியது எவ்வளவு பொருத்தமானது?

1983ஆம் ஆண்டு செப்ரெம்பர் 23 ஆம் திகதி இடம் பெற்ற மட்டுநகர் சிறையுடைப்பின் போது தப்பி வந்த சிறைக் கைதிகளைகாப்பாற்றுவதில் சந்திரன் பெரும் பங்கு வகித்தவன். இதே போல 1984இல் மட்டுநகரில் இடம்பெற்ற இன்னுமொரு சிறையுடைப்பிற்கான தயாரிப்பு வேலைகளைத் திட்டமிட்டு செயற்படுத்தி அதனை ஒரு முழுமையான வெற்றிகரமான சிறையுடைப் பாக்கியவனும் சந்திரனே யாகும்.

### தாளங்குடா சம்பவம்

1985ஆழ ஆண்டளவில் ஒரு நாள் மேஜர் சந்திரன் விடுதலைப் புலிகளின் பொறுப்பாளர் வேறு இரண்டு போராளிகள் ஒரு வீதி வழியாகவந்து கொண்டிருந்தனர். தாளங்குடாவில் அதிரடிப்படையினர் ஒரு இடத்தில் நின்று வீதிச் சோதனையில் ஈடுபடுவது வழமை. அன்றைய தினம் எதிர்பாராமல் நேருக்கு நேர் எதிரிக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதாவது ஜீப் வண்டியில் வந்த எதிரிகளை எதிரும்புதிருமாகப் போராளிகள் சந்தித்தனர். எதிரி ஒரு சிரிப்புசிரித்து விட்டு அப்பால் நகர்ந்துசென்றான். அப்போது எல்லோருக்கும் ஆச்சரியமாக விருந்தது. ஒரு போராளியிடம் சைனட் வில்லைகள் இருக்கவில்லை. அப்போது அந்தப் போராளியைப் பார்த்து பொறுப்பாளர் உன்னிடம் சைனைட் இல்லை. தற்செயலாக அதிரடிப்படைஉன்னைப் பிடித்து இருந்தால் என்ன செய்வாய்? என்று கேட்டார். அதற்கு அந்தப் போராளி சந்திரன் அண்ணை குப்பியைக் கடிச்சதும் நான் அவற்றைய வாயைக் கடித்திருப்பேன்'' என்று பதில் சொன்

சிட்டே நீ பகர்வாய்...
சிறு அரும்பே நீ பகர்வாய்.

'இளியண்ணன்'



அந்நியச் சுவடுகள்
பதித்த
துப்பாக்கி நகங்கள்
உன் மேனியில்
படுகளப் பாலை வனங்களை
மட்டுமல்ல
முகலாவண்யங்களையும்
சிதைத்து.........

.........................

உன் தனித்துவத்தை
சிறைப்படுத்தும்
தேசியத்தின் விலங்கினை
தகர்ப்பதற்கு.......

.......................

இழப்புகள் மத்தியிலும்
இலக்கினை நோக்கியே
முன்னேறுகின்றது.




தமிழ்த் தேசிய வாதக் கருத்தை முன் வைத்து தமிழர்களின் தேசிய தனித்துவத்தை தந்தை செல்வா வலியுறுத்திய போதும் அரசியல் தலைமை என்ற முறையில் வடக்கு கிழக்கில் வாழும் மக்கள் மத்தியில் பாராளுமன்ற அரசியலுக் கூடாக ஒரு மேலெழுந்தவாரியான ஒருமைப் பாட்டையே உருவாக்க' முடிந்தது. ஆனால் பிரிக்கப்படாத பூகோள ரீதியான தாயகக் கோட்பாட்டின் அடிப்படையில் வடக்கிலும் கிழக்கிலும் அடித்தளத்திலிருந்து தமிழ்த் தேசிய வாதத்தை விடுதலைப் புலிகளின் தலைமையில் போராட்டத் தலைமையே வளர்த்தெடுத்தது.

1931 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட டொனமூர் அரசியல் யாப்பை ஏற்றுக்கொண்டு தமிழர்களுக்குத் துரோகம் இழைத்த அப்போதைய மட்டக்களப்பு எம். பியான தம்பிமுத்து தொடக்கம் 07-05-90 அன்று கொழும்பில் அகால மரணமான சாம் தம்பிமுத்து வரை கடந்த அறுபது ஆண்டுகளாக பல அரசியல் வாதிகள் கிழக்கில் பிரதேச வாதத்தை முன் வைத்தே அரசியல் நடத்தினார்கள். அத்தோடு இன்னொரு சமூகமான முஸ்லிம் சமூகத்திற்கு எதிராகவும் இவர்கள் செயல் பட்டார்கள்.

இத்தகைய பிரதேசவாதத்திற்கும் இனப்பூசல்களுக்கும் எதிராக பல ஆண்டுகளாக போராடிய குடும்பம் கவிஞர் காசி ஆனந்தனின் குடும்பமாகும். கிழக்கு மாகாணம் என்று கூறுவதே பெருந்தவறு. அது கிழக்கு மாகாணம் அல்ல தமிழீழத்தின் தென் மாகாணம் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக நின்று அவர்கள் ஆற்றிய பணிகள் சிறப்புடையவையாகும்.

கவிஞர் காசி ஆனந்தனின் உடன் பிறந்த சகோதரரான மேஜர் சந்திரன், (காத்தமுத்து சிவஜெயம்) தமிழ்த் தேசிய இனத்தின் போராட்டம் மறைந்த தலைவர் வேலுப்பிள்ளை செல்வநாயகம் (தந்தை செல்வா) தலைமையில் உரிமைகளுக்கான போராட்டமாக இடம்பெற்ற காலம் தொட்டு இன்று தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தலைமையில் தமிழ்த் தேச விடுதலைப் போராட்டமாக பரிணமித்த காலம் வரை பங்களிப்பு செய்த நீண்ட போராட்ட வரலாற்று அனுபவங்களை உள்வாங்கிய ஒரு போராளியாக விளங்குகிறான்.

### சிறுவன் சிவஜெயம்

1958 ஆம் ஆண்டு இனக் கலவர காலத்தின் போது வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த காசி ஆனந்தனின் கடிதங்களை உரியவர்களுக்கு எடுத்துச் சென்று சேர்ப்பிப்பதில் பதின் மூன்று வயதுச் சிறுவனான சிவஜெயம் ஈடுபட்டதிலிருந்து அவனது பொது வாழ்வு ஆரம்பமாகியது. அக்காலத்தில் அறவழிப் போராட்டங்களே இடம் பெற்றன. ஆனால் சிறுவன் சிவஜெயம் அப் போராட்ட அணுகு முறையில் ஆர்வம் கொள்ளவில்லை. அவன் ஒரு நாள் கவிஞர் காசி ஆனந்தனிடம் பின்வருமாறு கேட்டான்.

''அண்ணா நாங்கள் அறவழியில் வெறும் கைகளோடு போராடுகிறோம். நம்மைத் துப்பாக்கிகளால் அடக்க வருகிறார்களே! அறப்போர் தமிழர்களுக்குச் சரியான வழிதானா! காந்தி அடிகளையும் படித்தேன். நேதாஜி பகத்சிங் ஆகியோரையும் படித்தேன். எனக்கு என்னவோ நேதாஜியையும் பகத்சிங்கையும் தான் அருகில் வைத்துக் கொள்ள வேண்டும் போல் தோன்றுகின்றது.''

### ராஜனுக்கு ஒரு அடி

1970 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று சிறீமாவோ அரசில் மட்டக்களப்பு மாவட்ட அரசியல் அதிகாரியாக நியமிக்கப்பட்ட ராஜன் செல்லநாயகம் மட்டக்களப்பில் அடாவடித்தனங்களில் ஈடுபட்டுவந்தான். மட்டக்களப்பு மாவட்டமே அவனது சண்டித்தனங்களால் பாதிக்கப்பட்டது. இராஜன் செல்வநாயகமும் அவனது அடிதடிக்கும்பலும் போட்ட அட்டகாசங்களுக்கு குறைவேயில்லை. ஒரு நாள் சிவஜெயம் செங்கலடி கிராமத்தில் வைத்து போட்ட அடியால் ராஜன் செல்வநாயகம் மட்டுமல்ல அவனது அடிதடி படையே அதிர்ச்சியடைந்தது.

1972 மே 22 ஆம் திகதி இலங்கையின் முதலாவது குடியரசு யாப்பு அமுலுக்கு வந்த போது, அதனை எதிர்த்து தமிழ்ப் பகுதிகள் எங்கும் மூன்று தினங்களுக்கு ஹர்த்தால், கடையடைப்பு, பூரண துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது. அன்றைய தினங்களில் தமிழ்ப் பகுதிகளில் ஆங்காங்கே வன் செயல்களும் இடம் பெற்றன. ஆயுதப் போராட்டத்தின் ஆரம்ப புள்ளியாக இச்சம்பவங்கள் அமைந்தன. சிவஜெயமும் அவனது நண்பன் ஜெரால்ட்டும் மட்டக்களப்பில் இ. போ. ச. பஸ் வண்டிகளுக்கு தீவைக்க மேற்கொண்ட முயற்சி பெற்றோல் அடைக்கப்பட்ட புட்டிகள் அடைபட்டுப் போனமையால் கைகூடாமற் போயிற்று.

### அரச சேவையும் கள அனுபவமும்

இலங்கை மலேரியா தடுப்பு பிரிவில் ஓர் அரசு வெளிக்களப்பிரிவு உத்தியோகத்தராகவிருந்த சிவஜெயம் ஒவ்வொரு கிராமம் கிராமமாக தனது பணிகளின் பொருட்டுச் சென்றான். அரசசேவையைத் தனது சுயநலனுக்காகப் பயன்படுத்தும் பலர் மலிந்த ஒரு பூமியில் அரச சேவையை விடுதலைக்குப் பயன்படுத்தக் கூடிய ஒரு களமாக அவன் ஆக்கிக் கொண்டான். மலேரியா தடுப்பு ஊழியராகவிருந்த ஜெயம் அண்ணை பெற்ற அனுபவங்களும் மக்கள் மத்தியில் அவனுக்கு இருந்த செல்வாக்கையும் விடுதலைப் போராளிகளாகிய நாங்கள் சுவீகரித்துக் கொண்டு அந்தக் கட்டுமானத்தில் நின்றே எமது விடுதலை அமைப்பை மட்டக்களப்பில் கட்டி எழுப்பினோம் என விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்டப்பொறுப்பாளர்ஒருவர் தெரிவித்தார்.



மேஜர் சந்திரன்

1974 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5 ஆம் திகதி கோப்பாய் பகுதியில் இடம்பெற்ற ஒரு நடவடிக்கையின் போது தியாகி சிவகுமாரன் தியாக மரண மடைந்தான். அவனது அஸ்திக்கலசத்தை மட்டக்களப்புக்கு எடுத்துச் சென்ற சிவஜெயம் அதனை வாவி ஒன்றில் கரைத்தான். அந்தக் கால கட்டத்தில் இது ஒரு துணிச்சலான நடவடிக்கையாகவிருந்தது.

1975 ஆம் ஆண்டு சிவஜெயமும் அவனது தம்பி சுதர்சனும் கைது செய்யப்பட்டனர். இவர்கள் இருவரையும் கைது செய்த சி. ஐ. டி. பஸ்தியாம்பிள்ளை இவர்கள் இருவரையும் கொழும்பில் நாலாம் மாடியில் வைத்து சித்திரவதை செய்தனர். கண்டி போகம்பறை சிறைச்சாலையில் சிறை வைக்கப்பட்டவும் தாயகம் பாதுகாக்கப்படவும் உழைத்தான்.

### 1983ல் இன ஒழிப்பு முயற்சி

1983ஆம் ஆண்டு கலவரம் பலரது மனதில் புதிய தாக்கங்களையும் புத்தூக்கங்களையும் உருவாக்கியது போல சிவஜெயத்தின் வாழ்விலும் மாற்றங்களை உருவாக்கியது. சிவஜெயம் சந்திரன், வள்ளுவன் என்ற பெயர்களில் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்து கொண்டான். இக்கால கட்டத்தில் இலங்கை இராணுவத்தால் கடுமையாகத் தேடப்பட்ட கவிஞர் காசி ஆனந்தனைப் போராளி சந்திரன் கருவேப்பங்கேணி பற்றைக் காடுகளில் மறைத்து வைத்துக் காப்பாற்றினான்.

### தமிழகம் புறப்பாடு

1984-ஆம் ஆண்டு சனவரி மாதம் சந்திரன் தமிழகத்திற்குச் சென்றான். அங்கு அவன் பல முக்கிய தலைவர்களைச் சந்தித்தான். அவனது வாழ்வில் பல புதுமையான அனுபவங்களைப் பெற்றுக்கொண்டான். அவன் இயல்பாகவே நகைச்சுவை ஆற்றல் மிக்கவன். காசிஆனந்தன் குடும்பத்தோடு தமிழகத்தின் சில ஒகாயில்களைப்பார்வையிட்ட சந்திரன் சொன்ன ஒரு பகிடி சிந்தனை நிறைந்த கருத்தைக் கொண்டது.

ஒரு நாள் காசி ஆனந்தனுடன் இராமேஸ்வரத்தில் உள்ள ஒரு கோயிலுக்கு சிவஜெயம் சென்றான். அங்கே இராமர் சிலைக்குப் பக்கத்தில் இருந்த இலக்குமணன் சிலையை யாரோ களவாடிச் சென்று விட்டதாகக் கூறப்பட்டது, அப்போது சிவஜெயம் அண்ணன் காசிஆனந்தனைப் பார்த்து ''அண்ணை இது என்ன புதிய இராமாயணம். வழக்கமாக இராமயணத்தில் சீதையைத்தான் களவாடிச் சென்றதாகப் படிக்கிறோம். இங்கே இலக்குமணனையல்லவா களவாடிக் கொண்டு போய்விட்டார்கள்.

### புல்லுமலையில் கைது

மேஜர் சந்திரன் 8-1-1984ம் ஆண்டு அம்பாறை மாவட்டம் புல்லுமலையில்வைத்துக்கைது செய்யப்பட்டான். கல்லடி முகாமில் மூன்று தினங்கள் வைத்துச் சித்திரவதை செய்த ஸ்ரீ லங்கப் படையினர் மூன்று தினங்களின் பின்னர் விடுதலை செய்தனர்.

இவர் கைது செய்யப்பட்டமை சக போராளிகளுக்குத் தெரியாது. இவரைக் காணவில்லை எனத்தேடி சக போராளிகள் மட்டக் களப்பில் வழமையாகச் சந்திக்கும் ஓரிடத்தில்வந்து வினாவினார் துக் கொள். என் அன்புக்கட்டளையாகச் சொன்னார். நானும் ஏதோ அவர் கட்டுகிறார். இருக்கட்டும் என்று விட்டு விடடேன்.

## நேதாஜி

கல்லடி முகாமில் என்னை அடித்தும் தாக்கியும் சித்திரவதை செய்த இராணுவத்தினர் பின்னர் ஒரு அறை ஒன்றினுள் போட்டுப் பூட்டிவிட்டுச் சென்றனர். அப்போது ஆபத்து வரும்போது தாயத்தைப் பார் என்று அந்தநண்பர் சொன்ன விடயம் எனக்கு ஞாபகத்திற்கு வந்தது. தாயத்தைப் பார்த்தேன். ''அதுவும் நெளிந்துபோய்த்தான் கிடந்தது.'' என்றான். நண்பர்கள் எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தனர். விடுதலை செய்த அன்றுதான் இராணுவத்திற்கு சந்திரன் தேடப்படுவர் என்ற விடயம்தெரியவந்தது உடனே மட்டக்களப்பு பொலிசார் சந்திரன் அண்ணையின் வீட்டை முற்றுகையிட்டனர்.

இச்சம்பவத்தின் பின்னர் சந்திரன் தன்னில் சில மாறுதல்களை செய்தான்.

ஒரு கெரில்லாப் போராளி என்பவன் காலம் குழ் நிலை இயற்கையமைப்பு என்பவற்றிற்கு அமைய தேவை கருதி தன்னை உருமாற்றிக்கொள்ள வேண்டிய தேவையுடையவனாவன். தனது கெரில்லா வாழ்க்கைக்கு தன்னை ஒரு முஸ்லிம் இளைஞனைப்போல் மாற்றிக் கொண்டால் தனது போராட்ட வாழ்வுக்கு உறுதுணையாகவிருக்கும் எனக் கருதிய மேஜர் சந்திரன் ஒரு இஸ்லாமியரைப்போல்குல்லா போட்டுக்கொண்டான். குறுந்தாடி வைத்துக்கொண்டான். குர்ஆன் நன்குகற்றுக் கொண்டான் அடையாள அட்டையில் பெயர் மாற்றம் செய்து கொண்டான்.

### மருத்துவப் பொறுப்பாளர்

மருத்துவ அறிவு கொஞ்சம் சந்திரனுக்கு இருந்தபடியால் மருத்துவ பிரிவுப் பொறுப்பை ஆரம்பத்தில் விடுதலைப் போராளிகள் சந்திரன் அண்ணையிடமே ஒப்படைத்தனர். காயப்பட்ட போராளிகளுக்கு காலநேரம் தவறாமல் மருந்து கட்டுவான். முகாமில் நோய் வாய்ப்பட்ட போராளிகளுக்குத் தகுந்த உணவுகளை வழங்குதல், நேரம் தவறாமல் மருந்து கொடுத்தல் போன்றவற்றில் கூடிய கவனம் எடுப்பான் நள்ளிரவில் சிலவேளைகளில் மருந்து குடிக்கவேண்டியிருந்தால் இரவில் தான் கண்விழித்துஇருந்து உறங்கிவிட்ட நோயாளிகளைக்கூட தட்டியெழுப்பி மருந்து குடிக்கக்

எதிரிக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதாவது ஜீப்வண்டியில் வந்த எதிரிகளை எதிரும்புதிருமாகப் போராளிகள் சந்திச்தனர். எதிரி ஒரு சிரிப்புசிரித்து விட்டு அப்பால் நகர்ந்துசென்றான். அப்போது எல்லோருக்கும் ஆச்சரியமாக விருந்தது. ஒரு போராளியிடம் சைனைட் வில்லைகள் இருக்கவில்லை. அப்போது அந்தப் போராளியைப் பார்த்து பொறுப்பாளர் உன்னிடம் சைனைட் இல்லை. தற்செயலாக அதிரடிப்படைஉன்னைப் பிடித்து இருந்தால் என்ன செய்வாய்? என்று கேட்டார். அதற்கு அந்தப் போராளி சந்திரன் அண்ணை குப்பியைக் கடிச்சதும் நான் அவற்றை வாயைக் கடித்திருப்பேன்'' என்று பதில் சொன்னான். உடனே இதைக்கேட்ட சந்திரன் நகைச் சுவையாகச் சொன்னான் நல்லவேளை உன்ரை உயிரும். தப்பிச்சுது என்ரை வாயும் தப்பிச்சுது'' உடன் வந்தவர்கள் எல்லோரும் குதூகலமாகச் சிரித்துக் கொண்டே துவிச்சக்கர வண்டியில் ஏறி அப்பால் நகர்ந்தனர்.

### ஆரையம்பதி முற்றுகை

எதிரிகள் ஒரு இடத்தை முற்றுகையிட்டு சுற்றி வளைத்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு விட்டார்கள் என்றால் மட்டக்களப்பு மக்கள் எப்போதும் போராளிகளை பாதுகாப்பதிலேயே அக்கறையுடையவர்களாக இருப்பார்கள், குறிப்பாக சந்திரன் அண்ணையின் பாதுகாப்பைப் பற்றி விசாரிப்பார்கள். தமது பாதுகாப்பிலும் பார்க்க எப்போதும் போராளிகளது பாதுகாப்பில் அக்கறையுடையர்களாக மட்டுநகர் மக்கள் இருப்பார்கள். 1986-ம் ஆண்டு ஒரு நாள் அப்போதைய மட்டக்களப்பு மாவட்ட நிதிப் பொறுப்பாளனாகவிருந்த சந்திரன் ஆரையம்பதியில் தங்கியிருந்த போது ஆரையம்பதியை இலங்கை இராணுவம் சுற்றி வளைத்துக் கொண்டது. மக்கள் எல்லோரும் கண்கலங்கி நின்றார்கள். கண கலங்கி நின்ற மக்கள் எல்லோரையும் ஆறுதல் சொல்லி அனுப்பிவிட்டு எதற்கும் தயார்ன நிலையில் சந்திரன் நின்றான். எதிரிகள் வரும் அறிகுறி தென்பட்டது. ஒரு வீட்டின் கட்டிலுக்கு கீழ் சந்திரன் பதுங்கிக் கொண்டு கையில் கிரனைட் கிளிப்பைக் கழற்றி வைத்தபடி இருந்தான். அந்த வீட்டுக்கார அம்மா ஓடி வந்து படுக்கை விரிப்பை நிலமட்டத்துடன் விரித்து விட்டுச் சென்றார்.

8ஆம் பக்கம் பார்க்க

# சிறுவர் பகுதி




## [2] கணணியின் கதை

(பகுதி ஒன்றின் தொடர்)

இந்த தத்துவத்தின் அடிப்படையில் தான் இலக்கம் காட்டும் கடிகாரமும் இயங்குகின்றது. அதாவது பல அணுக்கள் படிகமாக அதாவது ஏதாவது ஒரு மூலகத்திண்மமாக இலக்கத்திற்கேற்றபடி அடுக்கப்படுகின்றன. 'உள்சுற்று' எனப்படும் கருவியின் மூலம் மின்னைக்கொடுக்கும் போது அக்கருவி இலத்திரனை எந்தவழியில் செல்ல வேண்டும் என கட்டுப்படுத்தும். அத்தவழியே இலத்திரன் ஓட கடிகாரம் ஓடும். (மேல் கூறியதை இரண்டு மூன்று தடவை திருப்பிப் படியுங்கள் விளங்கும்) இதேபோலத்தான் கணனியிலும் நடக்கின்றது. ஆனால் கணனியில் மேலும் நுண்மையான விளையாட்டுகள் உள்ளன. அப்படி என்ன விளையாட்டுகள்.

அணுக்களைச் சுற்றும் இலத்திரன்களை கட்டுப்படுத்தி இலத்திரனியல் அதாவது எலக்ட்ரோனிக் கருவிகள் செய்யப்படுகின்றன என்பதை அறிந்துகொண்டீர்கள். அதற்கு உதாரணமாககணக்கிடும் எந்திரங்கள் (Calculators) இலக்கம் காட்டும் கடிகாரங்கள் ஆகியவற்றை எடுத்துக் கொண்டோம்.

ஒரு கணக்கிடும்எந்திரத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அதில் இலக்கங்களுக்கேற்ப அணுக்கள் அடுக்கப்படுகின்றன. அடுக்கப்பட்ட அந்த அணுக்களைச் சுற்றும் இலத்திரன்களை கட்டளை

அதற்குப் பெயர் உள்சுற்றி I.C. என தொழில் நுபட் உலகில் கூறுவார்கள். 'சிப்'என்று கணனி உலகில் சொல்வார்கள். இந்த சிப்பில் பலவித மூலகங்களைக்கொண்ட சுற்று அமைக்கப்பட்டுள்ளது. இந்த மூலகங்கள் மின்னைச் செலுத்தினால் குறித்த அளவில் மின்னைக் கட்டுப்படுத்திக் கடத்தும். இந்த அடிப்படையில்தான் கணக்கிடும் எந்திரங்கள் கணனிகள் இயங்குகின்றன.

கணக்கிடும் எந்திரங்களும் ஒருவகையில் கணனிகள்தான் இவற்றால் எண்களை கூட்ட பெருக்க மட்டும் இயலும். ஆனால் கணனிகளால் கூட்டவும், பெருக்கவும் எமது பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைத் தரவும் முடியும். சில செய்திகளை ஞாபகத்தில் வைத்திருக்கவும் முடியும் இங்கு ஞாபகத்தில் வைத்திருக்க காந்தப்புலம் பயன்படுகிறது.

அதாவது நாம் கூறும்செய்திகளுக்கேற்ப ஒருவகை காந்தப்புலம் உருவாகும். உருவாகும் காந்தப்புலம் நிலைத்து நிற்கும். அவ்வப்போது செய்திகளை மீட்கவும் முடியும்.

இன்று கணனிகளில் நினைவில் வைத்திருக்க தட்டுகள் பயன்படுகின்றன. இவையும் ஒரு வகை காந்தத் தட்டுக்களே. நீங்கள் கேள்விப்படும் IBM என்ற தட்டு கணனியில் செய்திகள் பதியப்படும் தட்டுகளே இதுபோல இன்னும் பல அரிய சேவைகளை கணனி செய்கின்றன.

## விடுதலை வீரர்வரிசை.....

### கறுப்புப் புலி
### மார்ட்டின் லூதர்கிங்

அன்புள்ளங்களே,

எங்கள் இனம் வேறொரு இனத்தால் ஆளப்பட்டு நாம் அழிக்கப்பட்டு வருவது உங்களுக்குத் தெரியும். எத்தனை வீடுகள் உடைந்திருப்பதைப் பார்த்திருப்பீர்கள். விமானங்கள் குண்டு வீசும் போதும் செல்களை ஏவும் போதும்பதுங்குகுழிகளில்நடுங்கியிருந்ததை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள் என நினைக்கிறேன்.

எப்படி எங்களைப்போல் உலகின் ஏனைய நாடுகளிலும் இனத்தினால் இனம் அடக்கப்பட்டு வருவது நடைபெறுகிறது. இதற்காக அடக்கப்பட்ட மக்கள் பொங்கியெழும் புரட்சிகளும் நடைபெற்று வருகின்றன.

இங்கும் உங்களுக்கு ஒரு இனத்தின் விடுதலைக்காக போராடி உயிர்நீத்தபோராளி ஒருவரின் கதையே கூறப் போகின்றேன்.

இன்றிலிருந்து இருநூறு முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னர் ஆபிரிக்காக் கண்டத்தில் இருந்து அக்கண்டத்தில் வாழும் கறுப்பின மக்களை வெள்ளையர்கள் அடிமைகளாக்கி அமெரிக்க தேசத்திற்குக் கூட்டிச் சென்றார்கள் என்பதைவிட ஓட்டிச் சென்றார்கள் என்றே கூறலாம்.



நாம் மாடுகளை அடித்து வேலைவாங்குகிறோமல்லவா. அதுபோல வெள்ளையர்களும் அந்தக் கறுப்பின மக்களை வருத்தினார்கள். உண்மையில் நமது மாடுகளுக்குக்கூட கூடிய சுதந்திரம் கொடுத்திருப்போம். ஆனால் அந்தக் கறுப்பின மக்களை எந்நேரமும் சும்மாயிருக்க விடமாட்டார்கள் வெள்ளையர்கள். இத்துணை கொடூரம் அவர்கள் ஏன் அனுபவிக்கவேண்டும். பாவம் அவர்கள் கறுப்பாக பிறந்துவிட்டதால் தான் இந்தநிலை. நிறத்தில் எதுவுமில்லை. நம் மனதில்தான் இருக்கிறது. வெள்ளையர்கள் தாம் ஏதோ தேவர்சள் என நினைத்தார்கள். கறுப்பர்களை விலங்குகள் என தூற்றினார்கள்.

வெள்ளையர்கள் கறுப்பரை வெறுத்தாலும் ஒருசில வெள்ளையர்க்கு கறுப்பர்மீது இரக்கம் ஏற்படும். அவர்கள் கறுப்பர்களை தூண்டிவிட்டு அவர்களிடையே புரட்சியை ஏற்படுத்தி விட்டார்கள். கறுப்பர்கள் பொங்கினர். கொஞ்சம் கொஞ்சமாக வெள்ளையர்க்கு நிகராக வளர்ந்தார்கள். படித்தார்கள். பட்டம் பெற்றார்கள்.


இப்படி வளர்ந்தும்கூட வெள்ளையர்கள் கறுப்பர்களை வெறுக்கவேசெய்தனர். வெள்ளையர்கள் ஏறும் பஸ்ஸில் இவர்கள் ஏறக்கூடாது. கறுப்பர்க்கு தனிப்பாடசாலை, கல்லூரி, ஊர். வெள்ளையர்க்கு அடிபணிய வேண்டும். படங்களில் அடிமைகளாக கறுப்பரை நடிக்க வைத்தார்கள்.

இத்தகைய அடக்குமுறையை. இனவேறுபாட்டை ஒழிக்க வந்தார் ஒரு மனிதர். யார் அவர்? அவர்தான் கறுப்புப்புலி என அழைக்கப்படும் 'மாட்டின் லூதர் கிங்.'



### வாரம் ஒரு அறிவுரை

பொறாமை
-இது மிகவும்கொடிய
உணர்வாகும்.
-பொறாமைப்
படுபவன் தன்
முன்னேற்றத்துக்கு
தானே,
தடையாகின்றான்
-பொறாமை
ஒருவனை
நிதானமிழக்க
வைக்கின்றது
-பொறாமை
ஒருவனை நோயாளி
ஆக்குகின்றது
-பொறாமை
மனத்தில் இருளையும்
முகத்தில்
ஒளியின்மையையும்
ஏற்படுத்துகின்றது
-பொறாமைப்



## பறவைகளின் கதை -2

"பிள்ளைகள் எல்லோரும் வந்திட்டீங்களோ" என அதிசயம் அப்புசாமித் தாத்தா சுற்றிவர இருந்த அவரது ரசிகப் பெருமக்களாகிய துர்க்கா, கஜன், தீபன், பிரபன் ஆகியோரை வினவ, 'ஆம் தாத்தா' எனப் பதில் வந்தது. 'சரி நேற்றைக்கு விட்டதிலிருந்து இன்றைக்குச் சொல்கிறேன்' என தொண்டையைக் கனைத்துக்கொண்டார்.

பறவைகளுக்கு எலும்புகள் உண்டு. சிறகுகள் உண்டு. அந்த எலும்புகள் மெல்லியவை. நடுவில் துவாரங்களையுடையவை. அதனால் அவ் எலும்புகள் கனமற்றவையாகின்றன. ஆகவே பறக்கும் போது கூடிய நிறையைத் தாங்கவேண்டிய அவசியமில்லாததாகின்றது. பறவைகளை இருவகையாக உயிரியல் அறிஞர்கள் பிரிக்கின்றனர். அவை பழம் பறவை, புதுப்பறவை. பழம்பறவை என்பது அழிந்துபோன பறவையினம் ஆகும். இப்பழம் பறவையின் அலகுகளில் பற்கள் காணப்படும். இரு சிறகுகளிலும் விலங்குகளின் கைகளில் உள்ளது போல மும்மூன்று நகங்கள் காணப்பட்டன. வாலின் நுனி வரை எலும்புகள் நீண்டு காணப்பட்டன.'

'அப்படிப்பட்ட பறவைகள்

புதுப்பறவைகள் இரண்டு வகையானவை. ஒன்று 'ஓடும் பறவை இனம். மற்றையது 'குருத்தெலும்புள்ள' பறவை இனம்.

'ஓடும் பறவை என்றால் கோழி, பென்குயின், தீக்கோழி' எல்லாம் ஓடும் பறவைகள் தானே என பிள்ளைகள் வினாவினர்.

'ஆம் இவையெல்லாம் ஓடும் பறவைகள் தான். இவை பறக்காததற்குகாரணம்,குருத்தெலும்புகள் வளராமையே ஆகும் மார்புத்தசைகள் முழு வளர்ச்சி அடையவில்லை. அதனால்தான் அவற்றால் பறக்க முடியவில்லை. ரியா, ஈமு, கசோவாரி, கீவி போன்ற பறவைகளும் பறப்பதில்லை.

பறக்கும்பறவைகளில் எட்டு இனங்கள் உண்டு. அவை,

பிடித்து உட்காரும் பறவை, அகன்ற வாய்ப்பறவை, பற்றி ஏறும் பறவை. ஊன் உண் உண்ணும்பறவை, வேட்டைப் பறவை, நீந்தும் பறவைகள். இத்துடன் இன்னும் இரு இனங்கள் சேர்ந்துள்ளன.

'பறவைகள் தண்ணீரில் மிதக்கின்றனவே அதுஎப்படித் தாத்தா' என்றான் தீபன்.

பறவைகளும் சுவாசிக்கின்றன. பறவையின் எலும்புகள் துவாரமுள்ளவை என்பது தெரியும். அவற்றிடையே காற்றுப்பைகள் உள்ளன.

அணுக்களைச் சுற்றும் இலத்திரன்களை கட்டுப் படுத்தி இலத்திரனியல் அதாவது எலக்ட்ரோனிக் கருவிகள் செய்யப்படுகின்றன என்பதை அறிந்துகொண்டீர்கள். அதற்கு உதாரணமாககணக்கிடும் எந்திரங்கள் (Calculators) இலக்கம் காட்டும் கடிகாரங்கள் ஆகியவற்றை எடுத்துக் கொண்டோம்.

ஒரு கணக்கிடும்எந்திரத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அதில் இலக்கங்களுக் கேற்ப அணுக்கள் அடுக்கப்படுகின்றன. அடுக்கப்பட்ட அந்த அணுக்களைச் சுற்றும் இலத்திரன்களை கட்டளையிடுவதன்மூலம் கணக்குகள் தீர்க்கப்படுகின்றன. இங்கு இலத்திரன்களுக்கு கட்டளை தருவது எது?


ஞாபகத்தில் வைத்திருக்க காந்தப்புலம் பயன்படுகிறது.

அதாவது நாம் கூறும்செய்திகளுக்கேற்ப ஒரு வகை காந்தப்புலம் உருவாகும். உருவாகும் காந்தப்புலம் நிலைத்து நிற்கும். அவ்வப் போது செய்திகளை மீட்கவும் முடியும்.

இன்று கணனிகளில் நினைவில் வைத்திருக்க தட்டுகள் பயன்படுகின்றன. இவையும் ஒரு வகை காந்தத் தட்டுக்களே. நீங்கள் கேள்விப்படும் IBM என்ற தட்டு கணனியில் செய்திகள் பதியப்படும் தட்டுகளே இதுபோல இன்னும் பல அரிய சேவைகளை கணனி செய்கின்றன.

அப்படி என்னதான் செய்கின்றன? இதற்குமுன் கணனி எப்படிஉருவானது என அதன் வரலாற்றை கிளறுவோமா?

□



எந்தச் செய்மதி பூமியுடன் தொடர்பு கொண்டுள்ளது?

-இது மிகவும்கொடிய
உணர்வாகும்.
-பொறாமைப்
படுபவன் தன்
முன்னேற்றத்துக்கு
தானே,
தடையாகின்றான்
-பொறாமை
ஒருவனை
நிதானமிழக்க
வைக்கின்றது
-பொறாமை
ஒருவனை நோயாளி
ஆக்குகின்றது
-பொறாமை
மனத்தில் இருளையும்
முகத்தில்
ஒளியின்மையையும்
ஏற்படுத்துகின்றது
-பொறாமைப்
படுபவன்
மனிதன் என்ற
பெருமையையும்
இழக்கின்றான்.

□—□

உண்டு. சிறகுகள் உண்டு. அந்த எலும்புகள் மெல்லியவை. நடுவில் துவாரங்களையுடையவை. அதனால் அவ் எலும்புகள் கனமற்றவையாகின்றன. ஆகவே பறக்கும் போது கூடிய நிறையைத் தாங்கவேண்டிய அவசியமில்லாததாகின்றது. பறவைகளை இருவகையாக உயிரியல் அறிஞர்கள் பிரிக்கின்றனர். அவை பழம் பறவை, புதுப்பறவை. பழம் பறவை என்பது அழிந்துபோன பறவையினம் ஆகும். இப்பழம் பறவையின் அலகுகளில் பற்கள் காணப்படும். இரு சிறகுகளிலும் விலங்குகளின் கைகளில் உள்ளது போல மும்மூன்று நகங்கள் காணப்பட்டன. வாலின் நுனி வரை எலும்புகள் நீண்டு காணப்பட்டன.'

'அப்படிப்பட்ட பறவைகள் இருந்தன என்றதற்கு ஆதாரம் என்ன தாத்தா' என இடைக்கேள்வி போட்டான் துர்கா.

'ஜேர்மனி தேசத்தில் தோண்டி எடுக்கப்பட்ட 'ஆக்கியோப்டெரிக்ஸ்' ஆக்கியோனிக்ஸ், ஆகியவை பழம் பறவைகளுக்கு ஆதாரமாக உள்ளவை ஆகும். சரி இனிப் புதுப் பறவைகளைப் பற்றிப் பார்ப்போம்.

ஆகும் மார்புத்தசைகள் முழு வளர்ச்சி அடையவில்லை. அதனால்தான் அவற்றால் பறக்க முடியவில்லை. ரியா, ஈமு, கசோவாரி, கீவி போன்ற பறவைகளும் பறம்பதில்லை.

பறக்கும்பறவைகளில் எட்டு இனங்கள் உண்டு. அவை,

பிடித்து உட்காரும் பறவை, அகன்ற வாய்ப்பறவை, பற்றி ஏறும் பறவை. ஊன் உண் உண்ணும்பறவை, வேட்டைப் பறவை, நீந்தும் பறவைகள். இத்துடன் இன்னும் இரு இனங்கள் சேர்ந்துள்ளன.

'பறவைகள் தண்ணீரில் மிதக்கின்றனவே அதுஎப்படித் தாத்தா' என்றான் தீபன்.

பறவைகளும் சுவாசிக்கின்றன. பறவையின் எலும்புகள் துவாரமுள்ளவை என்பது தெரியும். அவற்றிடையே காற்றுப்பைகள் உள்ளன. சுவாசிக்கும்போது நுரையீரலுடன் இக்காற்றுப் பைகளும் காற்றால் நிரம்புகின்றன. அதனால் பறவை லேசாகின்றது. நீரில் மிதக்கின்றது. சரி அடுத்தவாரத்திலிருந்து ஒவ்வொரு பறவையாக விளக்கம் சொல்கிறேன். நேரம்போட்டு போய் படியுங்கோ என்றபடி புறப்பட்டார் தாத்தா.

(தொடரும்)

# தேடிப் படியுங்கள் .....

## தோம்சோயரின் வீரங்கள்

(நகைச் சுவைக் கதை)

'தொம் சோயர்' என்பவன் ஒரு அமெரிக்கச் சிறுவன். சரியான குழப்படிகாரன். நீங்களும் குழப்படிசாரர் தான். ஆனால் தொம்மோ உங்களை விட மேதாவியான குழப்படி காரன்.

சும்மா இருக்கமாட்டான். எந்த நேரமும் ஏதாவது சேட்டைகள் செய்து கொண்டிருப்பான். பொருட்களை ஆராய்ந்து உடைப்பான்.

மற்றைய சிறுவர்களுடன் சண்டையிடுவான். இத்தனைக்கும் அவன் தனது சித்தியுடன் வாழ்பவன். சித்தி எப்படித்தண்டித்தாலும் அவனது குழப்படி குறைந்ததில்லை. உதாரணத்திற்கு ஒரு குழப்படி.

அன்று அவனது சித்தி அவனைக் குழப்படி செய்யாமல் இருப்பதற்கு ஒரு வேலையைக் கொடுத்து விட்டாள். ஒரு சுவருக்கு நிறம் பூசும்வேலை.

தொம்மிற்கு கடும் கோபம். பக்கத்தில் உள்ளமைதானத்தில் சிறுவர்கள் எல்லாம் கூடி நின்று விளையாட இவனை மட்டும் வேலை செய்யவிட்டால் கோபம் வராதா? என்ன செய்வது? அலுப்புடன் நிறம் பூசத்தொடங்கினான். அவ்வேளை விளையாட்டுமைதானத்தில் இருந்து ஒரு சிறுவன் அப்பிள் பழம் ஒன்றைக்கடித்தபடி தொம் நின்ற இடத்திற்கு வந்தான்.

தொம்மிற்கு அப்பிளைக் கண்டதும் வாயூறியது. என்ன செய்வது? தொம்மிற்கு ஒரு யோசனை வந்தது. உடனே நிறம் பூசுவதை பெரிய கலை என நினைத்து பல் கோணங்களில் நின்று அழகு பார்த்து நிறம் பூசினான். வந்தசிறுவனுக்கு இவனது செயல்கள் பிடித்தன. ஆகா நிறம் தீட்டுவது ஒரு கலை போல....என நினைத்தான். உடனே தொம்மிடம் கெஞ்சினான். சரி என்று இரக்கப்படுவது போல நடித்து அவனது அப்பிளை வாங்கி விட்டு வர்ணம் பூச விட்டான். இவனைக்கண்டு மற்ற நண்பர்களும் கூடிவிட்டனர். தொம்மிடம் அப்படி இப்படி என நிறையப் பொருட்கள் சேர்ந்து விட்டன. வடிவாக நிழலில் உட்கார்ந்து நிறம் பூசுவதை மேற்பார்வை செய்தான்.

இது ஒன்று அவனது குழப்படி எப்படிச் சிறுவர்களை ஏமாற்றினான்பார்த்தீர்களா! இது மட்டுமல்ல இன்னும் நிறையகுழப்படிகள்.

இவனது குழப்படிகளே 'தொம் சோயரின் வீரதீரங்கள்' என்ற கதை நூலாக வந்தது. ஒவ்வொரு அங்கத்திலும் தொம்மின் ஒவ்வொரு குழப்படி கூறப்பட்டுள்ளது. இது சிறுவர்கட்கு மட்டுமல்ல பெரியவர்களுக்காகவும் கூட நகைச்சுவைக்காக எழுதப்பட்டது.

இதனை எழுதியவர் ''ஒரு அமெரிக்க ஆங்கில நகைச்சுவை எழுத்தாளரான 'மார்க் டுவெய்ன்' ஆவார்.'' மிக மிக நகைச்சுவையாக இக்கதை உள்ளது. படித்தால் வயிறு குலுங்க சிரிக்கலாம்.

இது ஆங்கிலத்தில் உங்களுக்கு ஏற்றவடிவில் சுருக்கமான எளிய நடையில் வந்துள்ளது. தமிழ் மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு இந்தியாவில் பிரசுரிக்கப்பட்டது என ஓர் இதழில் குறிக்கப்பட்டிருந்தது. இத்துடன் நமது பகுதியில் வெளிவரும் ஒரு பத்திரிகையில் கூட மிகக் குழப்பமாக தெளிவற்ற நடையில் தமிழில் பிரசுரிக்கப்பட்டு வருகின்றது. இதன் ஆங்கிலத் தலைப்பு Tom Sawer's adventures.

இவற்றை படிப்பதைவிட எளிய ஆங்கிலத்தில் உள்ள வெளியீடுகளை படியுங்கள். நன்றாக விளங்கும் மொழியும் உங்களுக்கு பயிற்றப்படும்.

சரி இனி தொம் சோயரைத் தேடி அலையுங்கள்...

□

# சிங்கமும் புலியும்

□ கண. மகேஸ்வரன்

நான்கு எருதுகள் ஒன்றி யிருந்ததில்
காட்டு ராஜா கலங்கிப் போனார்;
நான்கையும் பிரிக்க தந்திரம் செய்தார்;
கரரியம்எதுவும் கூடிவர வில்லை.

குட்டையைக் குழப்பி குழம்பிய ராஜா
குரங்கை-அழைத்து யோசனை கேட்டார்;
குரங்கு வந்து கும்மாளம் போட்டது;
கொம்பன் எருதை அடக்கப் பார்த்தது


குரங்கின் கொடுமை தாங்கா எருது
புலியாய் மாறிப் போர்க்களம் போனது;
நரிகள் குரங்கின் பக்கம் சாய்ந்தும்
குரங்கு குரங்கே என்று உணர்ந்தது!

சீறிப் பார்த்த சிங்க ராஜா
சிரித்துக் கொண்டே பக்கம் வந்தார்;
நேசக் கரத்தை நீட்டிப் புலியின்
கைகளைத் தானும் குலுக்கலானார்!

ஒற்றைக் காட்டில் புலியும் சிங்கமும்
ஒன்றிக் குலவையில் திகைத்தார் குரங்கார்;
ஆப்பை மெல்ல இழுக்க முயன்று
வாலை அறுத்துக் கொண்டவ ரானார்!

தனக்கு இயலாக் காரிய மெதிலும்
தலையை வைத்தல் தப்பென் றுணர்ந்தார்,
நரிகள் தம்மையும் அழைத்துக் கொண்டே
நடையைக் கட்டினார் நாடே சிரிக்க!

நாடே சிரிக்க நரியும் குரங்கும்
நடந்த கதையை நினைத்துப் பார்த்து,
தப்புக் கணக்குப் போடுதல் விடுத்து
தக்க வழியில் நடப்பதே மேலாம்!



மனிதன் கிணற்றடிக்கு சென்று நீரருந்து வழியைக் காட்டுங்கள்?

# ஈழத்துத் தமிழ் இன உணர்வின் இலக்கிய வெளிப்பாடு

கலாநிதி - நா - சுப்பிரமணியன்

## முன்னீடு

அடக்கு முறைக்கும் அடிமைத்தனத்துக்கும் எதிராக ஈழத்துத்தமிழினம் ஒரு நீண்ட போராட்டத்தை நிகழ்த்திவந்துள்ளது. உரிமைக்கோரிக்கை முதல் உயிர்த்தியாகம் வரை பல படிநிலைகளில் கடந்த அரை நூற்றாண்டு வரலாற்றிலே இப்போராட்டம் பல பரிணாமங்களைப் பெற்றுள்ளது. அது சந்தித்த சந்தர்ப்ப வாதங்கள் பல. அதனைச் சறுக்கி விழுத்த முயன்ற சதிகள் பல. ஆனால் உண்மைக்கும் உறுதிக்கும் தியாகஉணர்விற்கும் முன் சந்தர்ப்ப வாதங்களும் சதிகளும் ஆக்கிரமிப்பு உணர்வுகளும் நிலை குலைந்து போனமை சமகால வரலாறு.

ஈழத்துத் தமிழினத்தின் இந்த நீண்ட உரிமைப் போராட்ட உணர்வோட்டத்தைத் தமிழ் இலக்கியம் எந்த அளவுக்குப் பிரதிபலித்துள்ளது? அதனை வழி நடத்துவதில் இலக்கியம் ஆற்றியுள்ள பங்களிப்பு என்ன? இவை இன்றுநமது கவனத்துக்குரியனவாகின்றன. இவை தொடர்ப்பானவிடயங்களைத் தொகுத்தும் வகுத்துப் நோக்க வேண்டியது நமதுவரலாற்றுக் கடமை. இதற்கான ஆரம்ப நிலைச் சிந்தனைகளும் அவதானிப்புக்களும்அவ்வப்போது சிலரால் முன்வைக்கப்பட்டுள்ளன. பல்கலைக் கழக மட்டத்தில் உயர்நிலை ஆய்வுகளும் நிகழத் தொடங்கியுள்ளன. இவற்றையெல்லாம் கவனத்திற்கொண்டு அமையும் ஒரு இலக்கியவரலாற்று முயற்சியாக இக்கட்டுரைத்தொடர் அமைகின்றது.

இது ஒரு சமகால வரலாற்றுமுயற்சி. எனவே இதில் எடுத்தாளப்படும் தகவல்கள் அவற்றோடு தொடர்புடைய கருத்தோட்டங்கள் என்பன தொடர்பாக தவறுகள் நிகழ இடமுண்டு கடந்த சில ஆண்டுகளாக நம் மத்தியில் நிலவிய பாதுகாப்பற்ற சூழ் நிலை, இடம்பெயர் நிலை அவலங்கள் என்பவற்றால் பல முக்கிய ஆக்கங்கள் நமது கவனத்திற்கு வரத் தவறியிருக்கலாம், தொகுத்துப் பேணப்பட்டவை பலகை நழுவிப் போயிருக்கவும் வாய்ப்புண்டு.

இவற்றை வாசகர்கள் கவனத்திற் கொள்ளவேண்டும். இவை தொடர்பாக அவர்கள் சுட்டிக் காட்டும் விடயங்கள் நன்றியறிதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். எதிர்காலத்தில் இக்கட்டுரைத் தொடர் நூலுருப் பெறும் பொழுது திருத்தங்களை மேற்கொள்ள அவை பேருதவியாக அமையும்.

— நா. சுப்பிரமணியன்

இலங்கைத் தீவில் வாழும் தமிழ் மக்கள் தமக்கெனத் தனித்துவமான வரலாற்றுப் பாரம்பரியம் உடையவர்கள். அவர்களுக்கென்று அடையாளம் காட்டக் கூடிய திட்டவட்டமான நிலப்பரப்பும் பண்பாட்டுக் கோலங்களும் உள்ளன. அவர்கள் தமக்கென அரச நிறுவனங்களை அமைத்துப் பேணி வந்தமைக்கும் வரலாறு சான்று பகர்கிறது. இவ்வாறு தனது தனித்தன்மையோடு விளங்கிய அச்சமூகம் கடந்த நூற்றாண்டில் ஆங்கிலேயர்ஆட்சி புரிந்த காலப்பகுதியில் சிங்கள இனத்தோடு அரசியல் ரீதியாக இணைக்கப்பட்டது.

இந்த இணைப்பின் தர்க்க

ஆய்வேடு ஒன்றை அப்பல்கலைக்கழகத் தமிழ்த் துறைக்குச் சமர்ப்பித்தார். 1988 ஜூலையில் தெல்லிப் பளைக் கலை இலக்கியக்களத்தின் கேள்விக்கிணங்க அ.யேசுராசா அவர்கள் 'ஈழத்துத் தமிழ்ச்சிறுகதைகளும் தேசிய இனப் பிரச்சினையும் என்ற தலைப்பிலான ஆய்வுரையொன்றை நிகழ்த்தினார். பின்னர் இவ்வுரை விரிந்த நிலையில் அலை (33) திசை என்பவற்றிற் பிரசுரமாயிற்று திரு. ச. முருகானந்தன் அவர்களால் எழுதப்பட்ட தேசிய இனப்பிரச்சினையில் ஈழத்துச் சிறுகதைகளின் தாக்கம்' என்ற சிறுகட்டுரை 1989 நவம்பர் - டிசம்பர் மல்லிகை இதழில் பிரசுரமாகியுள்ளது.

டிப் பயில்வது, இந்நிலப்பரப்பைக் குறிப்பதற்குத் 'தமிழ் ஈழம்' என்ற சொற்றொடரையே நாம் பெரிதும் வழங்கி வருகிறோம். ஈழம் என்ற சொல்லின் வரலாற்றை ஆராய்ந்த பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை அவர்கள் அச்சொல் பொதுவாக இலங்கையைக் குறிப்பினும் சிறப்பாகத் திருக்கோணமலைப்பகுதிக்கே உரியதாக வழங்கி வந்துள்ளது என்பர். (ஆய்வு 2 பக்.7)

யாழ்ப்பாண அரசிலே திருக்கோணமலை அடங்கியிருந்த காலத்திலே, தமிழ் அரசு ஈழமெனப்பட்டது. திருக்கோணமலை கண்டியரசின் மேலாதிக்கத்துட் குட்பட்டிருந்த போது கண்டியரசே ஈழமெனப்பட்டி(ருக்கிறது)'

அ) தமிழரது பாரம்பரிய நிலப்பரப்பில் குடியேற்றங்கள் அமைத்தல் என்ற வகையான ஆக்கிரமிப்பு.

ஆ) மலையகத்துத் தமிழ் மக்களின் குடியுரிமைப் பறிப்பு.

இ) சிங்களமே அரசு கருமமொழியாகவும் பௌத்தமதமே அரசமதமாகவும் கணிக்கப்பட்ட நிலை - தமிழரின் தொண்டைக்குள் சிங்களத் திணிப்புமுயற்சி

ஈ) அரச பணிகளில்பாரபட்சம் கல்வியில் தரப்படுத்தல்.

மேற்குறித்தவை சட்ட திட்டங்களுக்கு ஊடான செயற்பாடுகள். இவைதவிர, நேரடித் தாக்குதல் என்றவகையிலே இனக்கலவரம் என்ற பெயரில் நிகழ்த்தப்படும் தமிழினக் கொலை காடைத்தனங்கள் என்பன அமையும். 1958, 1977, 1983 களில் யுத்தகையை இன அழிப்பு முயற்சிகளைத் தமிழினம் எதிர்கொண்டது. கடந்த பத்தாண்டுக் காலப்பகுதியிலே மேற்படி இன அழிப்பு முயற்சியானது இராணுவத்தாக்குதல் என்ற வகையிற் புதிய பரிணாமத்தைப் பெற்றது சிங்கள இராணுவத்தால் பாதிக்கப்பட்ட நிலை என்ற மட்டோடு அமையாது இந்திய இராணுவத்தாலும் தாக்கப்பட்டு அடக்கி ஒடுக்கப்பட்ட சூழல் அண்மைக்கால நிதர்சனம்.

இவற்றால் முனைப்புப் பெற்ற தமிழ் இன உணர்வுகளின் இலக்கிய வெளிப்பாடுகளை இனி வரலாற்றுமுறையில் அவதானிக்கலாம்.

ஆசியச் சக்கரவர்த்திகள் காலமும் பிரதேச பாதுகாப்புணர்வும்.

ஈழத்தின் தமிழ் இன உணர்வு இலக்கியம் தொடர்பாக நோக்குபவர்கள் பொதுவாக கடந்த ஏறத்தாழ 40 வருடகாலப் பகுதி ஆக்கங்களையே கவனத்திற் கொள்வது வழக்கம் குறிப்பாக சுதந்திரன்- இதழ் தமிழரசுக்கட்சி என்பவற்றின் தோற்றக் காலப்பகுதியில் இருந்தே இவ்வகை இலக்கிய வெளிப்பர்டுகளை அவதானிப்பர். இக் கட்டுரையாளரின் முற்கூட்டிய 'இலக்கியப்பிரச்சினைகள்' கட்டுரைத் தொடரும் அவ்வாறு நோக்கியதே. பா. சுகுமார் அவர்களின் பார்வையும் அதுவே. ஆயினும் இன்று ஆய்வுச் சிந்தனை வளர்ந்துள்ள சூழலில் தமிழ் இன உணர்வு இலக்கிய வரலாற்றை ஆரியச் சக்கரவர்த்திகள் ஆட்சிக்காலம் எனப்படும் கி. பி. 13 ஆம்-17 ஆம் நூற்றாண்டுக் கிடைப்பட்ட காலப்பகுதி ஆக்கங்களிலிருந்து தொடங்கலாம் என எண்ணத் தோன்றுகிறது அக்காலத்(தெ)ழுந்தனவாகக் கொள்ளப்படும் தகவின

மலைப் பிரதேச சமூக- பண்பாட்டுருவாக்கத்தோடு தொடர்புடையனவாயிருப்பதை நோக்கும்போது அக்காலப்பகுதித் தமிழிலக்கிய உருவாக்கத்திலே அப்பிரதேசம் சார்ந்த பண்பாட்டுரிமையுணர்வு முக்கிய பங்கு வகித்துள்ளமையை உய்த்துணர முடிகிறது. திருக்கோணமலைப் பகுதி இவ்வகையிற் பெற்ற முக்கியத்துவத்தை உரியவாறு விளங்கிக் கொள்வதற்கு பேராசிரியர் ஆ. வேலுப் பிள்ளையவர்கள் குறிப்பிட்டவாறு (முற்சுட்டியது) ஈழம்

## பகுதி - 1

என்ற சொல் திருக்கோணமலைப் பகுதிக்குச் சிறப்புரிமை பூண்டதாக வழங்கிய வரலாற்று நிலையை நாம் கவனத்திற் கொள்ளவேண்டும். ஈழத்துத் தமிழர் பண்பாட்டு உருவாக்கத்திலே திருகோணமலைப்பகுதி பெற்றிருந்திருக்கக் கூடிய முதன்மையை இது அரண்செய்வது இதை மேலும் தெளிவு படுத்திக் கொள்வதற்குப் பின்வரும் வரலாற்றை நாம் கவனத்திற் கொள்ளவேண்டும்.

இன்று திருக்கோணமலைப் பிரதேசத்திலும் வடமத்திய மாகாணப் பகுதிகள் சிலவற்றிலும் சிங்களவர் வசித்து வரும் கிராமங்களிற் பண்டைக் காலத்தில் தமிழர் வசித்து வந்தனர். அவர்கள் இந்துக்களாகத் திகழ்ந்தனர். குறிப்பாக கி.பி. பத்தாம் நூற்றாண்டை அடுத்த காலப்பகுதியில் இவற்றில் தமிழரே குடியேறி வாழ்ந்துவந்துள்ளனர். பின்னர் இப்பிரதேசங்களிற் பலவற்றிலே சிங்கள இனத்தினர் குடியேறிப் பௌத்த- சிங்களப் பண்பாட்டைப் பரப்பி விட்டநிலையை இன்று அவதானிக்கிறோம் இவ்வாறான பௌத்த சிங்கள ஆக்கிரமிப்பு கி. பி. 1070 இல் விஜயபாகு சோழரைத் தோற்கடித்து அகற்றிய காலப்பகுதியை அடுத்துப் படிப்படியாக ஏற்பட்டிருக்கவேண்டும். இத்தகைய ஆக்கிரமிப்புகளிலிருந்து இந்தந் தமிழர் தம் பிரதேசங்களையும் பண்பாட்டுக் கூறுகளையும் காப்பாற்றிக் கொள்ள முற்பட்டிருப்பர் என்பது உய்த்துணரற்பாலது.

இவ்வாறான பண்பாட்டுத் தற்பாதுகாப்பு முயற்சி சார்ந்த இலக்கிய ஆக்கங்களாக மேற் சுட்டிய ஆக்கங்களை நாம் கருதுவது ஆய்வு நெறிக்குப் பொருந்துவதேயாம்.

பௌத்த சிங்கள மக்கள் இலங்கை தமக்கே உரிமையுடையதென்ற 'தம்மதுவீப, கோட்பாட்டை மஹாவங்ஸ, சூளவங்ஸ முதலிய வரலாற்றுக் கதைகள் மூலம் முன்வைத்து வந்துள்ளமையை அறிவோம். இவ்வாறு இந்துத் தமிழரும் தமக்கு உரிமையுண்டென்பதை உணர்த்த விரும்பியிருப்பர் என்பது எதிர்பார்க்கக் கூடியதே. இந்நோக்கிற் கேற்ப வடமொழிப் புராணக்கதைகளையும் செவிவழியாக வழங்கிவரும் வரலாற்றுக் கதைகளையும் தொகுத்துப் பேணி அவற்றின் மூலம் தம் பிரதேச உரிமையை உறுதிசெய்ய முற்பட்டிருப்பர். இந்த அடிப்படையிலேயே திருக்கோணமலையைத் தென்கயிலை என்றும் திருக்கரைசைத் தலத்தை அகத்தியத் தாபனம் என்றும் அவர்கள் கற்பனை செய்தமைக்கும் வன்னியர் குடியேற்றம் பற்றிய தகவல்களையும் குளக்கோட்டிராமன் பற்றிய செய்திகளையும் தொகுத்துப் பேணிக் கொண்டமைக்கும் அக்காலப்பகுதியில் ஈழத்துத் தமிழ்மக்களிடம் நிலவியிருக்கக் கூடிய பிரதேசப் பாதுகாப்புணர்வு ஒரு காரணியாகக் கருதப்படத்தக்கதாகிறது. எனவே ஈழத்துத் தமிழ் இன உணர்வின் இலக்கிய வெளிப்பாட்டு வரலாற்றை நாம் ஆரியச் சக்கரவர்த்திகள் காலப் பகுதியில் இருந்தே தொடங்கலாம்.

-வளரும்-

## மன்னராக மாறிய சேர். ஜோன்

ஆண்டு 1972. அரசியல் தலைவர்கள் சிலர், ஒரு விருந்தின் போது சேர் ஜோன் கொத்தலாவலையுடன் பேசிக் கொண்டிருந்தனர். அவ்வேளைகேணல் லின்விக்கிரமசூரிய கொத்தலாவலையைப் பார்த்துகளனி மாநாட்டில்சிங்களம் மட்டும் தீர்மானத்தை நீங்கள்பிரகடனம் செய்த பின்பும் ஏன் 1956 பொதுத் தேர்தலில்தோல்வியடைந்தீர்கள்?' என்று கேட்டார்.

'நான் சிங்களமும் தமிழும் அரச மொழியாக இருப்பதையே விரும்பினேன். நான் பிரதமராய் இருந்த போதிலும் அவர்கள் என்னை மீறி சிங்களம் மட்டும் பிரகடனம் செய்தனர். எனக்கு அதில் நடை போட்டார் சேர் ஜோன்.



□

### ஒரே கோட்பாடு

ஒரு டொக்ரர் தன் காரை திருத்துவதற்காக கராஜ்ஜில் விட்டிருந்தார். திருத்திய பின் மெக்கானிக் சொன்ன கூலியைக் கேட்ட டொக்ரர் திகைத்தவராய், சில மணித்தியால வேலைக்கு இவ்வளவு கூலியா? நான் ஒரு ஆபத்தானஒப்பரேசனுக்கு எடுக்கும் கூலியை விட இது அதிகம், என்றார்.

சரி சார், ஆனால் மனிதனைக் கடவுள் படைத்த காலத்திலிருந்தே நீங்கள் ஒரே கோட்பாட்டின் கீழ் தான் வேலை செய்கிறீர்ள். ஆனால் நாங்கள் ஒவ்வொரு ஆண்டும் வெவ்வேறு வகையில் உற்பத்தியாகும் கார்களையெல்லாம் படிக்க வேண்டியிருக்கிறது, என்றான் மெக்கானிக்.

புரட்டிப் பார்த்து விட்டு சொன்னாள்.

''இந்தமாதம் முடியும்வரை இடமில்லை. அடுத்த மாதம் பத்தாம் திகதிக்குப் பிறகு பதிவு செய்யலாம்.''

''அந்த வரையில் நான் செத்துப் போவேன்.''

''அப்படியென்றால் பதிவுக் காசைத் திருப்பிக் கொடுக்கலாம்.''

□

### குழந்தையுள்ளம்

இறந்து கிடந்த ஒரு தவளையைச் சுற்றி பல எறும்புகள் மொய்த்தன.

இதைப் பார்த்த சிறுமி தாயிடம் சொன்னாள்.-

''அம்மா இந்த எறும்புகளுக்கு எவ்வளவு இரக்கம்...? ஒரு தவளை செத்ததுக்காக அழுகின்றன........''

□

### பாவம் முயல்

ஆசிரியர் 'ஆமையும் முயலும்' கதையை கூறிக்கொண்டிருந்தார்.

''முயல் வேகமாக ஓடிச் சென்று, அவ்வளவு தூரத்தையும் ஆமை கடந்துவர எவ்வளவோ நேரமாகும் என்றெண்ணிக்கொண்டு ஒருமறைவில் படுத்துத் தூங்கிவிட்டது.

...தைத் தமிழ் இலக்கியம் எந்த ஏன்பன தொடர்பாக

இலங்கைத் தீவில் வாழும் தமிழ் மக்கள் தமக்கெனத் தனித்துவமான வரலாற்றுப் பாரம்பரியம் உடையவர்கள். அவர்களுக்கென்று அடையாளம் காட்டக் கூடிய திட்ட வட்டமான நிலப்பரப்பும் பண்பாட்டுக் கோலங்களும் உள்ளன. அவர்கள் தமக்கென அரச நிறுவனங்களை அமைத்துப் பேணி வந்தமைக்கும் வரலாறு சான்று பகர்கிறது. இவ்வாறு தனது தனித் தன்மையோடு விளங்கிய அச் சமூகம் கடந்த நூற்றாண்டில் ஆங்கிலேயர் ஆட்சி புரிந்த காலப்பகுதியில் சிங்கள இனத்தோடு அரசியல் ரீதியாக இணைக்கப்பட்டது.

இந்த இணைப்பின் தர்க்க ரீதியான விளைவாகவே நமது சமகால இனப்பிரச்சினையின் வரலாறு அமைந்துள்ளது.

ஆங்கிலேயர் இலங்கைத்தீவை ஒரே நாடாகக் கருதி ஆண்டனர்; சுதந்திரம் கொடுத்து விலகும்போது சிங்கள ஆட்சியாளரிடம் கையளித்தனர். பெரும்பான்மையினரான சிங்கள ஆட்சியாளர் தமிழர்களின் உரிமையுணர்வுகளை அலட்சியம் செய்தனர்; பேரினவாத ஆக்கிரமிப்பு, அடக்குமுறை என்பவற்றைக் கையாண்டனர். முதலில் உரிமைக்காகக் குரல் கொடுத்த தமிழினம் அடுத்து அறப்போர் நிகழ்த்தியது; அது தோல்வி கண்ட நிலையில் ஆயுதப்போர் தொடுத்தது. சந்தர்ப்பவாதங்களும் சதிமுயற்சிகளும் இந்த ஆயுதப் போராட்டத்தைச் சறுக்கி விழுத்த முயன்றன. ஆயினும் உயிர்த்தியாக உணர்வின் அடிப்படையிலான விடுதலை வேட்கையை எந்த சக்தியாலும் வேரறுக்க முடியாது என்பது நிரூபணமாயிற்று. அண்மைக்கால இலங்கைத் தமிழர் வரலாறு காட்டும் நிதர்சனம் இது. இந்த வரலாற்றுப் போக்கும் இதன் ஊடான உணர்வோட்டமும் தமிழ் இலக்கியத்தில் எவ்வாறு வெளிப்பட்டுள்ளது என்பதை நோக்கும் முயற்சியே இக் கட்டுரைத் தொடர்.

ஒன்பது ஆண்டுகட்கு முன் இக் கட்டுரையாசிரியர் சுடர் இதழிலே (1980 வைகாசி - 1981 ஆனி,) மேற்படி விடயம் தொடர்பாக 'இலக்கியப் பிரச்சினைகள் என்ற தலைப்பிலே பிரம்மா என்ற புனைபெயரில் ஒரு தொடர் கட்டுரை எழுதியுள்ளார். அத் தொடரில் அக்கால வரையான இனப்பிரச்சினை இலக்கியச் செல்நெறி நோக்கப்பட்டது. 1981ஆம் ஆண்டில் பா. சுகுமார் என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் 'இலங்கைத் தமிழ் இன உணர்வின் இலக்கிய வெளிப்பாடு' என்ற ஆய்வேடு ஒன்றை அப்பல்கலைக்கழகத் தமிழ்த் துறைக்குச் சமர்ப்பித்தார். 1988 ஜூலையில் தெல்லிப்பளைக் கலை இலக்கியக்களத்தின் கேள்விக்கிணங்க அ. யேசுராசா அவர்கள் 'ஈழத்துத் தமிழ்ச்சிறுகதைகளும் தேசிய இனப் பிரச்சினையும் என்ற தலைப்பிலான ஆய்வுரையொன்றை நிகழ்த்தினார். பின்னர் இவ்வுரை விரிந்த நிலையில் அலை (33) திசை என்பவற்றிற் பிரசுரமாயிற்று திரு. ச. முருகானந்தன் அவர்களால் எழுதப்பட்ட தேசிய இனப்பிரச்சினையில் ஈழத்துச் சிறுகதைகளின் தாக்கம்' என்ற சிறுகட்டுரை 1989 நவம்பர் - டிசம்பர் மல்லிகை இதழில் பிரசுரமாகியுள்ளது.

இவை தவிர அவ்வப்போது இத் தொடர்பிற் சிற்சில கட்டுரைகள் சிலரால் எழுதப்பட்டுள்ளன. இனப் பிரச்சினை தொடர்பான ஆக்கங்களைத் தொகுக்கும் முயற்சி என்ற வகையிலே தேர்ந்தெடுக்கப்பட்ட 82 கவிதைகளின் தொகுப்பொன்று மரணத்துள் வாழ்வோம் என்ற தலைப்பில் 1985இல் தமிழியல் நிறுவனத்தால் வெளியிடப்பட்டது. சடந்த ஆண்டு திசையிலே, இனப்பிரச்சினைச் சிறுகதைகளிற் சில தனிக்கவனம் பெற்று மறு பிரசுரமாயின என்பதும் ஈண்டு குறிப்பிடத் தக்கது.

மேற்படி ஆய்வு நோக்குகள் தொகுப்பியற் சிந்தனைகள், என்பனவற்றின் தொடர்ச்சியும் வளர்ச்சியுமாக இக் கட்டுரை முயற்சி அமைகிறது. இலங்கைத் தமிழரின் இன உணர்வு தொடர்பாக ஆரம்பகாலம் முதல் அண்மைக்காலம் வரை எழுதப்பட்ட எல்லாவகை இலக்கியங்களும் அவை தொடர்பான ஆய்வுகளும் இதிற் கவனத்திற் கொள்ளப்படவுள்ளன. காலத்துக்குக் காலம் இலக்கியவாதிகள் இன உணர்வு தொடர்பாக முன்வைத்த சிந்தனைகள் அவை இலக்கியச் செல் நெறியில் ஏற்படுத்திய தாக்கங்கள் என்பனவும் நோக்கப்படவுள்ளன. இவைதொடர்பானதகவல்கள் கருத்துக்கள்என்பவற்றிலே தவறுகள் காணப்படின் அவற்றைச் சுட்டிக் காட்ட வேண்டிய பாரிய பொறுப்பு வாசகர்களுடையதாகும்.

### ஈழமும் தமிழின உணர்வும்

ஈழம் என்ற சொல் பொது நிலையில் இலங்கைத் தீவு முழுவதையும் சுட்டி நிற்பது. சிறப்பு நிலையில் அது தமிழ் மக்களின் நிலப்பரப்பைச் சுட்டிப் பயில்வது, இந்நிலப்பரப்பைக் குறிப்பதற்குத் 'தமிழ் ஈழம்' என்ற சொற்றொடரையே நாம் பெரிதும் வழங்கி வருகிறோம். ஈழம் என்ற சொல்லின் வரலாற்றை ஆராய்ந்த பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை அவர்கள் அச்சொல் பொதுவாக இலங்கையைக் குறிப்பினும் சிறப்பாகத் திருக்கோணமலைப்பகுதிக்கே உரியதாக வழங்கி வந்துள்ளது என்பர். (ஆய்வு 2 பக்.7)

'யாழ்ப்பாண அரசிலே திருக்கோணமலை அடங்கியிருந்த காலத்திலே, தமிழ் அரசு ஈழமெனப்பட்டது. திருக்கோணமலை கண்டியரசின் மேலாதிக்கத்துட் குட்பட்டிருந்த போது கண்டியரசே ஈழமெனப்பட்டிருக்கிறது'

என்பது அவர் தரும் தகவல் (மேற்படி),

இன்று நாம் ஈழத்துத் தமிழ் இன உணர்வு என்று கூறும்போது இலங்கைத் தீவின் பல பாகங்களிலும் வாழும் தமிழர்களின் உணர்வு நிலையைக் கவனத்திற் கொள்கிறோம். இவர்களுள் வடக்கு கிழக்கு நிலப்பரப்பில் பூர்வ குடிகளாக வாழ்பவர்கள், அப்பிரதேசங்களிலிருந்து மேற்கு, தெற்கு மத்திய, பிரதேசங்கட்குச் சென்று வாழ்பவர்கள், தொழில்புரிபவர்கள் என்போர் ஒரு சாரார், கடந்த நூற்றாண்டிலே தமிழ் நாட்டிலிருந்து மலையகத் தோட்டங்களில் குடியேற வரவழைக்கப்பட்டவர்களின் பரம்பரையினர் இன்னொரு சாரார், தமிழ்பேசும் மக்கள் என்ற பெருவரையறைக்குள் அமையும் முஸ்லிம்கள் மற்றொருசாரார், இவர்கள் அனைவரும் பௌத்த சிங்களப் பெரும்பான்மை இனத்தால் பாதிக்கப்பட்டவர்கள்; பாதிக்கப்பட்டு வருபவர்கள். இவர்கள்பாதிக்கப்படும்நிலைகளில் வேறுபாடுகள் உள. அப் பாதிப்புக்களை உணர்ந்து கொள்ளும் நிலையிலும் அவற்றை எதிர்கொள்ளும் நிலையிலும் கூட இவர்கள் வேறுபடலாம். ஆயினும் இன்று நாம் ஈழத்துத் தமிழ் இன உணர்வு என்று கொள்ளும் பொழுது இவர்கள் அனைவரின் பேரினவாதப் பாதிப்பு தொடர்பான உணர்வோட்டங்களும் கவனத்திற் கொள்ளப்படுவது தவிர்க்க முடியாததாகிறது. இந்த அடிப்படையில் நோக்கும் போது ஈழத்துத் தமிழ் இனஉணர்வுகளைப் பாதித்து அவற்றை முனைப்புப் பெறத் தூண்டி நின்ற பௌத்த சிங்கள இனவாதச் செயற்பாடுகளைப் பின்வரும் வகைகளில் அவதானிக்க முடிகிறது.

...னத்திற் கொள்வது வழக்கம் குறிப்பாக சுதந்திரன்- இதழ் தமிழரசுக்கட்சி என்பவற்றின் தோற்றக் காலப்பகுதியில் இருந்தே இவ்வகை இலக்கிய வெளிப்பர்டுகளை அவதானிப்பர். இக் கட்டுரையாளரின் முற்கூட்டிய 'இலக்கியப்பிரச்சினைகள்' கட்டுரைத் தொடரும் அவ்வாறு நோக்கியதே. பா. சுகுமார் அவர்களின் பார்வையும் அதுவே. ஆயினும் இன்று ஆய்வுச் சிந்தனை வளர்ந்துள்ள சூழலில் தமிழ் இன உணர்வு இலக்கிய வரலாற்றை ஆரியச் சக்கரவர்த்திகள் ஆட்சிக்காலம் எனப்படும் கி. பி. 13 ஆம்-17 ஆம் நூற்றாண்டுக் கிடைப்பட்ட காலப்பகுதி ஆக்கங்களிலிருந்து தொடங்கலாம் என எண்ணத் தோன்றுகிறது அக்காலத்தெழுந்தனவாகக் கொள்ளப்படும் தக்ஷிண கைலாசபுராணம், திருக்கரைசைப்புராணம் கோணேசர் கல்வெட்டு, வையா பாடல் ஆகிய ஆக்கங்களில் ஈழத்துத் தமிழர்களின் பிரதேச உரிமை உணர்வுக் கூறுகளை அவதானிக்க முடிகிறது.

மேற்குறித்த ஆக்கங்கள் திருக்கோணமலைப் பிரதேசம் சார்ந்த சமூக- பண்பாட்டு உருவாக்கத்தை எடுத்துக் கூறும் உள்ளடக்கம் பொருந்தியவை. தக்ஷிண கைலாச புராணம் திருக்கோணேஸ்வரத்தின் வரலாறு கூறும் தலபுராணமாகும். இக் கோணேஸ்வரத்தை 'தக்ஷிண கைலாசம்' - தெற்கின் கண் உள்ளகைலை' - எனச் சிறப்பிப்பது, திருக்கரைசைப்புராணம் மகாவலிகங்கைக்கரையிலே அமைந்த திருக்கரைசைத் தலத்தின் சிறப்புரைக்கும் தலபுராணமாகும். இத் தலம் அகத்தியத் தாபனம் எனவும் பெயர் பெறும். கைலையங்கிரியில் இருந்து தெற்கிற்கு வந்த அகத்தியர் சிவபிரானுக்கு எடுத்த ஆலயம் இது என்பது இத்தல புராணம் தரும் தகவல்.

கோணேசர் கல்வெட்டு நூலிலே சோழவேந்தனான குளக்கோட்டராமன் என்பான் கோணேசர் கோட்டம் கோபுரம் முதலியன அமைத்த செய்தி கூறப்பட்டுள்ளது, வையாபாடலின், பிரதானபகுதியிலே திருக்கோணமலைப் பிரதேசத்திலும் அதனுடன் தொடர்புடைய பிரதேசங்களாகவுள்ள (இன்றைய) வட மத்தியமாகாணப் பகுதிகள் சிலவற்றிலும் வன்னியர் என்பார் குடியேறி ஆங்காங்குள்ள ஆதிக்குடிகளை அடக்கியாண்டதான வரலாறு கூறப்பட்டுள்ளது.

ஈழத்தில் ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் எழுந்த தமிழ் ஆக்கங்களில் மேற்குறித்த நான்கும் திருக்கோண...

...தின் பே... து சேர் ஜோன் கொத்தலாவலையுடன் பேசிக் கொண்டிருந்தனர். அவ்வேளை கேணல் லின்விக்கிரமசூரிய கொத்தலாவலையைப் பார்த்து களனி மாநாட்டில் சிங்களம் மட்டும் தீர்மானத்தை நீங்கள் பிரகடனம் செய்த பின்பும் ஏன் 1956 பொதுத் தேர்தலில் தோல்வியடைந்தீர்கள்?' என்று கேட்டார்.

'நான் சிங்களமும் தமிழும் அரச மொழியாக இருப்பதையே விரும்பினேன். நான் பிரதமராய் இருந்த போதிலும் அவர்கள் என்னை மீறி சிங்களம் மட்டும் பிரகடனம் செய்தனர். எனக்கு அதில்



திருப்தியில்லை. மக்களிடம் ஆணை பெற விரும்பினேன். எல்லோரையும்போல நானும் ஒரு சோதிடரை கலந்தாலோசித்தேன் நான் ஒரு அரசனைப் போல இருக்க பலன் இருப்பதாக அவர் சொன்னார். ஆச்சரியமும் மகிழ்ச்சியுமடைந்தேன். அன்று தேசாதிபதியாக இருந்த சேர் ஒலிவரிடம், பாராளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை நடாத்தும்படி கூறினேன். என்ன நடந்தது? மக்கள் என் தலையிலும் முதுகிலும் குத்தினார்கள். எட்டு இடங்களுடன் பதவியிழந்தேன. அந்த சோதிடரை கொலை செய்திருப்பேன்....ஆனால் இப்பொழுது அரசியலுக்கு வெளியே என் சுதந்திரத்தை எவ்வளவு மகிழ்ச்சியாக, எவருக்கும் தலை வணங்காமல் உண்மையில் ஒரு அரசனைப் போலவே உணர்கிறேன். அந்த சோதிடரை நான் தவறாகப் புரிந்து கொணடேன். ஒரு அரசின் மன்னன் ஆகப் போகிறேன் என்று அவர் சரியாகத்தான் சொன்னார்', என்று கூறிவிட்டு எழுந்து வீர...

### ஒரே கோட்பாடு

ஒரு டொக்ரர் தன் காரை திருத்துவதற்காக கராஜ்ஜில் விட்டிருந்தார். திருத்திய பின் மெக்கானிக் சொன்ன கூலியைக் கேட்ட டொக்ரர் திகைத்தவராய், சில மணித்தியால வேலைக்கு இவ்வளவு கூலியா? நான் ஒரு ஆபத்தானஒப்பரேசனுக்கு எடுக்கும் கூலியை விட இது அதிகம், என்றார்.

சரி சார், ஆனால் மனிதனைக் கடவுள் படைத்த காலத்திலிருந்தே நீங்கள் ஒரே கோட்பாட்டின் கீழ் தான் வேலை செய்கிறீர்ள். ஆனால் நாங்கள் ஒவ்வொரு ஆண்டும் வெவ்வேறு வகையில் உற்பத்தியாகும் கார்களையெல்லாம் படிக்க வேண்டியிருக்கிறது, என்றான் மெக்கானிக்.

□

'பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த விஞ்ஞானிகள் பற்றி ஏதாவது சொல் பார்க்கலாம்'

....'ஓ' அவர்கள் இப்போ இல்லை...இறந்து போனார்கள்.

□

### பூனை வயிற்றில்

ஒரு தொடக்கப் பள்ளி ஆசிரியை தன் பத்தாண்டுகள் அனுபவத்தில் குழந்தைகளிடமிருந்து பெற்ற 3500 கவர்ச்சியான கருத்துக்களை சேகரித்து புத்தகமாக வெளியிட்டார்.

அவற்றில் ஒன்று -

ஒரு பூனையின் உள்ளே என்ன இருக்கிறது? என்று கேட்கிறது ஒரு குழந்தை.

எலும்பும் ரப்பரும் இருக்கிறது என்று பதில் சொல்லுகிறது மற்றக் குழந்தை தொடர்ந்து, நான் பார்த்தேன். ஒரு பூனை வெயில் ஒளியில் படுத்திருந்தது, அது கொட்டாவி விட்டது. அதன் உடம்பு விரிந்தது. பின்பு ஒடுங்கிவிட்டது என்றது.

□

மகன்: 'மாணவர் பக்கம் நின்று, முதலில் நான் கல்வியை நோக்குகின்றேன் என்று கல்வியமைச்சர் லலித் சொல்லிருக்கிறார் அப்பா....'

தந்தை: ஆனால்...மகனே! அவர் ஒவ்வொரு பாடசாலை நாளையும் விடுமுறை நாளாகப் பிரகடனம் செய்யப் போவதில்லை'

□

### நாணயம்

ஒரு நோயாளி தன் உடல் நிலையைச்சோதித்து சிகிச்சை பெற பதிவு செய்யக் கேட்டு ஒரு வைத்திய நிலையத்திற்கு ரெல்போன் செய்தார். பதிலளித்த தாதி, புத்தகத்தைப்...

லாம்.''

□

### குழந்தையுள்ளம்

இறந்து கிடந்த ஒரு தவளையைச் சுற்றி பல எறும்புகள் மொய்த்தன.

இதைப் பார்த்த சிறுமி தாயிடம் சொன்னாள்.-

''அம்மா இந்த எறும்புகளுக்கு எவ்வளவு இரக்கம்...? ஒரு தவளை செத்ததுக்காக அழுகின்றன........''

□

### பாவம் முயல்

ஆசிரியர் 'ஆமையும் முயலும்' கதையை கூறிக்கொண்டிருந்தார்.

''முயல் வேகமாக ஓடிச் சென்று, அவ்வளவு தூரத்தையும் ஆமை கடந்துவர எவ்வளவோ நேரமாகும் என்றெண்ணிக்கொண்டு ஒருமறைவில் படுத்துத் தூங்கிவிட்டது. ஆனால் நித்திரையாய்க் கிடந்த முயலை ஆமை முந்திவிட்டது.......''

ஒரு மாணவி குறுக்கிட்டாள்.

''ஏன் சார் முயலை அந்த ஆமை எழுப்பி விட்டிருக்கலாமே...!''

□

### நம்பும் வயசு

வில்லிமொரிஸ் என்ற எழுத்தாளர் வியட்நாம் போர்க் காலத்தில் ஒரு கல்லூரியில் சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்தினார்.

அவ்வேளை ஒரு மாணவன் கேட்டான். ''முப்பது வயதுக்கு மேற்பட்டவர் எவரையும் நான் நம்புவதில்லை. இதுபற்றி என்ன சொல்கிறீர்கள்?''

''முப்பதுவயதுக்குகீழ்ப்பட்டவர் எவரையும் நான் நம்புவதில்லை. அவர்களுக்கு அனுபவமில்லை, சுயநலக்காரர். வரலாறு தெரியாதவர்கள். மேலும் அவர்கள் உலகநிலையற்றவற்றில் பற்றுமிக்கவர்கள்'' என்றார் எழுத்தாளர்.

''உங்கள் வயது என்ன?'' மாணவன் கேட்டான். ''என் வயது முப்பது'' என்றார் எழுத்தாளர்.

□

### அறிவியல்

ஒரு ஐந்தாம் வகுப்பு மாணவி தாயிடம் கேட்டாள்-

'ஒருவாளியைப் பயன்படுத்தாமல் ஒருலீற்றர் தண்ணீரை எப்படிக் கொண்டு போவீர்கள்?''

சிறிது நேரம் யோசித்த தாய்''ஒருபெரிய பஞ்சு உருண்டையில்நனைத்து...அல்லது... இரண்டு கைகளையும் கோலி அள்ளி கொஞ்சம் கொஞ்சமாக.. சே எனக்குத் தெரியாது'' என்றார்.

மகள் சொன்னாள்-

''குளிர வைத்து ஐஸ் கட்டியாக்கி ஒரு கையில் எடுத்துப் போகலாம்:?'

# வெகுஜன எழுச்சியில் கவிஞர்கள் பங்கு

**1948 ஆம்** ஆண்டில் நம் நாடு சுதந்திரம் அடைந்ததற்குப் பின்னர் வடகீழ் மாகாணங்களில் வாழும் தமிழ் முஸ்லிம் மக்களும், இலங்கையின் பிற்பகுதிகளில் வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் முஸ்லிம் மக்களும் காலத்துக்குக் காலம் பல வகைகளிலும் சோதனைக்கும், வேதனைக்கும் ஆளாகினர்.

1948 இல் மலையகத் தமிழ் மக்களின் குடியுரிமை பறிக்கப்பட்டது. 1950 இல் கிழக்கிலங்கையில் திட்டமிட்ட குயேற்றத்திட்டம் என்ற போர்வையில் தமிழ் முஸ்லிம் மக்களின் பூர்வீக நிலங்களின் பறிப்பு. 1956 இல் சிங்களம் மட்டும் சட்டம். தமிழ்மொழி உரிமை பறிப்பு. 1956 இல் இருந்து 1983 வரை பாரிய இனக்கலவரங்கள், உயிர்பறிப்புகள், சொத்துக்களில் அழிப்புகள்.

அஹிம்சைப் போராட்டங்கள் அர்த்தமற்றவை என்று தமிழினத்தின் இளைய தலைமுறை சிந்திக்கத் தொடங்கியது. முடிவு சுதந்திரத்திற்காக மண்ணின் மீட்புக்காக, உரிமைகளைப் பெற ஆயுதங்களை ஏந்த வேண்டிய நிலை உருவாகியது.

அடிமை விலங்கை உடைத்தெறிய முனைந்த இளைஞர்கள் வேட்டையாடப்பட்டனர். அவர்கள் குடும்பங்கள் அழிக்கப்பட்டன. சொத்துக்கள் துவம்சம் செய்யப்பட்டன. அடக்குமுறையின் உச்சக் கட்டத்தில் அணையாத தீபமாக, இளைஞர்கள் செயலாற்றினார்கள். அந்த தீபம் அணையாத தீபமாக உலகளாவிய நிலையில் பிரகாசித்தது.

இறைவன் எதையும் ஜோடி, ஜோடியாக ஏற்படுத்தியுள்ளான். ஒன்று மற்றொன்றுக்கு போராட்டத்தின் இருகண்கள் ஆயுதப் போராட்டமும், ஆதரவாக இருந்து கொண்டிருக்கும். சுதந்திர சுயநிர்ணய வெகு ஜனஎழுச்சிப் போராட்டமுமாகும். முன்னையது ஆரம்பம் என்றால் பின்னையது முடிவு என்பதாகும். ஆயுதப் போராட்டத்தின் உச்சக் கட்டம் தான் வெகு ஜன எழுச்சிப் போராட்டமாகும். வெகு ஜன எழுக்சிப் போராட்டம் என்பது மக்களை சுதந்திரத்திற்காக சுயநிர்ணய உரிமைக்காக, எழுச்சி கொள்ளச் செய்யத்தூண்டுவதாகும். மக்கள்எழுச்சிகொண்டால் விடிவு எளிதாகிவிடும். இது சரித்திரம் கூறும் உண்மை.

போராளிகளின் ஆரம்ப தியாகங்கள் வெகு ஜன எழுச்சிப் போராட்டங்களுக்கு அஸ்திவாரமாக அமையும் போது மககளை ஸ்திரமடைய வெகு ஜனத்தொடர்பு சாதனங்களும், கலை, கலாசார நிகழ்ச்சிகளும், கவிதைகள், கட்டுரைகள் தமது பங்களிப்பை உரிய முறையில் செய்ய வேண்டும். இது அவசியம்! எம் இனத்தைப்போல் உலகில் எத்தனையோ இனங்கள் சுதந்திரத்திற்காக சுயநிர்ணய உரிமைக்காக, தம் மண்ணுக்காக போராடிக் கொண்டுள்ளன.

தற்கால உலகின் நிகழ்வுகளில் ஒன்று பலஸ்தீனப் போராட்டமாகும். பலஸ்தீனப் போராட்டம் இது பழைய தொடர்கதை என நினைக்கலாம். பலஸ்தீன மக்களின்

> போராளிகளின் ஆரம்ப தியாகங்கள் இலகு ஜன எழுச்சிப் போராட்டங்களுக்கு அத்திவாரமாக அமையும் போது மக்களை ஸ்திரமடைய வெகுஜனத் தொடர்பு சாதனங்களும், கலை கலாசார நிகழ்ச்சிகளும், கவிதைகள், கட்டுரைகள் தமது பங்களிப்பை உரிய முறையில் செய்ய வேண்டும். இது அவசீயம்.

வெகுஜன எழுச்சியின் மூலக்கரு என்ன என்பதை அறிவது தான் இக்கட்டுரையின் பிரதான நோக்கமாகும். வெகு ஜனப் போராட்டத்தின் உச்ச கட்டத்தில் பலஸ்தீன மக்கள் இன்று இருந்து கொண்டிருக்கிறார்கள்.

1948 க்கு முன்னர் பலஸ்தீனம் பலஸ்தீன மக்களுக்குரியதாக இருந்தது. அவர்களின் தலைமைத்துவம் சீர் கெடும் போது அககால பலஸ்தீன கவிஞர்கள் அரசியல் கவிதைகளைக் கொண்டு அவர்களைச் சீர்திருத்தினார்கள். அவை காத்திரமான அரசியல் கவிதைகளாகத் தோன்றின. மண்ணின் மைந்தர்களான அக்கவிஞர்கள்எதிர்காலத்தை உணரக் கூடியவர்களாகத் திகழ்ந்தார்கள். அரபு மன்னர்களின் சக போக வாழ்க்கையும், அவர்கள் மத்தியில் ஊடுருவிய அந்நிய ஏகாதிபத்தியங்களின் தலையீடுகளும், சியோனிசவாதிகளின் போக்கின் தன்மையும் அக்கால பலஸ்தீனக் கவிஞர்களைச்சிந்திக்க வைத்தன. 1920 ஆம் ஆண்டில் அவர்கள் சியோனிச அபாயத்தைப் பற்றிய தங்களது பயத்தை கவிதைகள் மூலம் மக்கள் முன்சமர்ப்பித்தார்கள். தொடர்ந்து 16 வருடங்களாக மக்களைச் சிந்திக்க வைத்ததன் காரணமாக 1936 இல் பிரமாண்டமான பொது வேலை நிறுத்தம் ஒன்று உருவாகியது. வேலை நிறுத்தத்தின் போது பலஸ்தீன மக்கள் உணர்ச்சி மிகு இக்கவிதைகளைப் பாடத் தொடங்கினார்கள். அரபுப் பத்திரிகைகளும், பிற பிரசுரங்களும் இக்கவிதைகளை வெளியிட்டு மக்களை எழுச்சி கொள்ள வைத்தன. அன்றுபலஸ்தீனத்தை ஆண்ட பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளை இக்கவிதைகள மிரண்டு எழச் செய்தன. பத்திரிகைகள் பிரசுரங்கள் தடை செய்யப்பட்டன. இத்தடை 1940 ஆம் ஆண்டுவரை நீடித்தது.

1948 இல் இஸ்ரவேல் எனும் நாடு உருவாகியது. பலஸ்தீன மக்கள் நாடிழந்தார்கள். அகதிகளானார்கள். போராட்டம் வெடித்தது. அரபு உலகின் சகல கவிஞர்களும் ஒன்றிணைந்து தங்கள் கவிதைகள் மூலம் வெகு ஜனப் போராட்டத்திற்கு மக்களைத் தயார் படுத்தினார்கள். இதனால் பலஸ்தீனம் பலஸ்தீனியருக்கே என்ற சுயநிர்ணய உணர்வு தலைவிரித்தாடியது. இந்த உணர்வு உச்சக் கட்டத்தை அடைந்த போது 1956 ஆம் ஆண்டு எழுச்சி செய்த ''கபர் கசாம்'' கிராம மக்கள் சியோனிச இராணுவத்தினால் படுகொலை செய்யப்பட்டார்கள். இந்நிகழ்ச்சி மனித இனம் வெட்கித்தலைகுனிய வைத்த போது, உலகம் கண்டனம் செய்த போது, பலஸ்தீனியர்கள் வெஞ்சினம் கொண்டார்கள். பலஸ்தீன கவிஞர்களின் உள்ளத்திலிருந்து வெஞ்சினம் கொண்ட கவிதைகள் உருவாகின. இதன் பெறுபேறு இஸ்ரவேல் இராணுவத்தின் அடக்குமுறைகளாக அமைந்தது. கவிஞர்களைத் தேடியழிக்கும் பணி உருவாகியது. வருடக்கணக்காக இது தொடர்ந்தது. ''கமால்நாசர்'' அன்றைய பலஸ்தீனத்தின் பிரபல கவிஞர். 1973 ஏப்ரலில் இவர் சியோனிசவாதிகளால் தேடியலைந்து பிடிக்கப்பட்டு படு கொலை செய்யப்பட்டார்.

> 1960-ல் பலஸ்தீன இளம் கவிஞர் குழு உறுதியாகச் செயல்பட்டது. இவர்கள் சியோனிக் ஆதிக்கத்தில் கொடிய துன்பங்களை அனுபவித்தவர்கள் இவர்களின் கவிதைகளில் புதிய அறைகூவல் இருந்தது. அது ஒரு பேரிகையாக மாறியது. இவர்களது கவிதைகள் மண்ணின் மகத்துவம் பற்றியும். தாய்நாட்டின் அபகரிப்பு பற்றியும், மண்ணின் மீது காதல் கொள்ள வேண்டிய அவசியம் பற்றியும் போராட்டம், தியாகம் இவைகளின் அவசியம் பற்றியும் பேசின.

1960 இல் பலஸ்தீன இளம் கவிஞர் குழு உறுதியாகச் செயல்பட்டது. இவர்கள் சியோனிச ஆதிக்கத்தில் கொடிய துன்பங்களை அனுபவித்தவர்கள். இவர்களின் கவிதைகளில் புதிய அறைகூவல் இருந்தது. அது ஒரு பேரிகையாக மாறியது இவர்களது கவிதைகள் மண்ணின் மகத்துவம் பற்றியும், தாய் நாட்டின் அபகரிப்பு பற்றியும், மண்ணின் மீது காதல் கொள்ள வேண்டிய அவசியம் பற்றியும் போராட்டம், தியாகம் இவைகளின் அவசியம் பற்றியும் பேசின. இக்கவிதைகள் ஏக்கமாக வெளிவந்தன.

பட்டி தொட்டிகளில் அகதி முகாம்களில் இக்கவிதைகள் பாடப்பட்டன. பலஸ்தீன தாய் இக்கவிதைகளைப் பாடியே தனது பிள்ளைக்கு அமுதூட்டினாள். இளம் சிறார்களுக்கு மண்ணின் பற்றும், சுதந்திர வேட்கையும் இக்கவிதைகள் மூலம் ஊட்டப்பட்டன சுதந்திரவேட்கை அவர்கள் நரம்பு நாளங்களில் பரவிப் பாய்ந்தன. சியோனிச இராணுவம் அவர்களுக்குத் துச்சமாகத் தெரிந்தது. அவர்களின் நவீன ஆயுதங்களை அவர்கள் பொருட்படுத்தவில்லை. சியோனிச இராணுவத்தைக் கண்டால் அவர்கள் உணர்ச்சியின் விளிம்புக்கே சென்றுவிடுவார்கள். கையில் எது கிடைத்தாலும் கல்லாக அல்லது இரும்புத்துண்டாக இருந்தாலும் அவைகளை எறிந்து சியோனிச இராணுவத்தை தாக்கத் தொடங்கினார்கள். இந்நிகழ்ச்சி இன்னும் தொடர்கின்றது. உலகம் அவர்களை வியப்புடன் பார்த்துக் கொண்டிருக்கின்றது. பலஸ்தீனியமக்களை வெகு ஜனப் போராட்டத்திற்கு இட்டுச் சென்ற இக்கவிதைகளை எழுதியவர்களில் ஒருவர் ''மஹ்மூட் தர்வீஷ்'' ஆகும். இவரது புரட்சி மிகு கவிதைகளுக்கு 1970 நவம்பரில் ஆசிய ஆபிரிக்க எழுத்தாளர் மகாநாட்டில் தாமரை விருது வழங்கப்பட்டது வரலாற்று நிகழ்ச்சியாகும்.

ஆக வெகு ஜனப் போராட்டத்திற்கு கவிஞர்களின் பங்கு மிக மிக அவசியம் என்பது தெளிவாகின்றது. தமிழ் இனத்தின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கு அதிகமாகப் பங்களிப்பு செய்தவர்கள், கவிஞர் காசி ஆனந்தன், புதுவை இரத்தினதுரை இன்குலாப் ஆகியவர்களைக் குறிப்பிட வேண்டும். இவர்களின் உணர்ச்சி மிகு கவிதைகள் இன்று வெகுஜன எழுச்சியை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. இதயங்களையே சுண்டியிழுத்துக் கொண்டிருக்கின்றன. இவர்களின் பங்களிப்பு போல் தமிழினத்தில் மேலும் கவிஞர்கள் உருவாக வேண்டியது மிகவும் அவசியம். இலைமறைகாய் போல் எத்தனையோ கவிஞர்கள் நம் மத்தியில் இருக்கத்தான் செய்கின்றார்கள். அவர்கள் வெளிவர வேண்டும். அவர்களை வெளிவரச் செய்வது தமிழினத்தின் கடமையாகும். அப்படியானவர்கள் ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கப்படக் கூடியவர்கள். கவிஞர்களின் சிந்தனையிலிருந்து புறப்படும் கவிதைகள் பத்திரிகைகளில் மட்டும் பாயக் கூடாது. நெஞ்சங்களின் ஆழங்களில் சங்கமமாக வேண்டும். அச்சங்கமம்தான் மக்கள் எழுச்சியின் ஆரம்ப அஸ்திவாரமாகும். அந்த அஸ்திவாரம். தான் இன்று தமிழினத்திற்கு அத்தியாவசியமாகும்.

துயரங்களின் தோழர்களே!
தளையுண்ட நண்பர்களே!!
வாருங்கள்
என்றென்றும் தோல்வியுறா
அணிவகுத்துச் செல்வோம்
நாம் எதையும் இழக்கோம்
நமது சவப் பெட்டிகளைத் தவிர
''அவர்கள் அரபிகள் காட்டுமிராண்டிகள்
நமது எதிரிகள் முணுமுணுப்பார்கள்
ஆம் நாங்கள் அரபிகள்
நாங்கள் அறிவோம்
தொழிற்சாலைகளும் வீடுகளும்
ஆஸ்பத்திரிகளும் பாடசாலைகளும்
எப்படிக் கட்டுவது என்பதை அறிவோம்
குண்டுகளும் ஏவுகணைகளும்
எப்படிச் செய்வது என்பதை அறிவோம்
எனது கண்கள் இருக்கும் வரை
எனது உதடுகள் இருக்கும் வரை
எனது கைகள் எனது தன்னுணர்வு இருக்கும் வரை
விடுதலைக்கான பயங்கரப் போரை
எதிரியின் எதிரில் நான் பிரகடனம் செய்வேன்
தொழிலாளர்கள்- மாணவர்கள்- கவிஞர்கள் பெயரால்
நான் பிரகடனம் செய்வேன்
நான் வாழும் வரை எனது சொற்களும்வாழும்
சுதந்திரப் போராளிகள் கைகளில்
ரொட்டியும் ஆயுதமாயும் என்றும் இருக்கும்
நீ. என்னைச் சுற்றிக் கட்டலாம்
எனது வாயில் மண் இட்டு நிரப்பலாம்
ஆயினும் என்ன?
கவிதை என் துடிக்கும் இதயத்தின் குருதி
சவுக்கடியிலும், சங்கிலிப் பிணைப்பிலும்
நான் பாடுவேன்
போரிடும் எனது பாடலைப் பாட
என்னுள் ஒரு கோடி
வானம் பாடிகள் உள்ளன!

ஈழப்பித்தன்

## "கோணர் கிக்"

ஒரு இனத்துக்குச் செய்யும் கொடுமைகளை ஒரேயடியாகச் செய். பின்பு நல்ல உணவு கொடுத்துப் பராமரி. மக்கள் பழைய கொடுமைகளை மறப்பார்கள். இப்படிச் சொன்னவர் இத்தாலியின் அரசியல் சாணக்கிய எழுத்தாளர் சாட்சாத்- மாக்கியவல்லி!

தமிழ் ஈழத்தில் மாக்கியவல்லியின் தந்திரத்தை மாற்றிப் பிடித்தவர் ராஜீவ் காந்தி. அவர் முதலில் சாப்பாடு போட்டார். பின்பே கொடுமைகளைக் கட்டவிழ்த்து விட்டார். எல்லாம் பொய்த்துக் கடைசியில் படைகளைத் திரும்ப எடுத்துக்கொண்டார்.

பாவம் அவருக்கு அரசியலும் தெரியாது! யாருக்கு அடிக்க வேண்டும் என்பதும் தெரியாது. பாவம்......... பைலட்டாக இருந்திருந்தால் பதவியும் போயிராது.

-அங்கதன்

எம்மைப் பொறுத்த வரை
எமது சினிமா வரலாறு எப்

சினிமா விமர்சனத்
திற்குபரிசு

பிரசுரமாகும் போது
அவற்றுக்கு ஏதாவது சன்மா
னமகிடைக்கின்றதா? எழுதும்

டனும் நீநாஸம் பயிற்சி
முகாமும் திரைப்பட விழா

சப்ளின் ஆகியோர் அனைவ
ரின் படைப்புக்களுடனும்

னார்கள். அந்த தீபம் அணையாத தீபமாக உலகளாவிய நிலையில் பிரகாசித்தது.

இறைவன் எதையும் ஜோடி, ஜோடியாக ஏற்படுத்தியுள்ளான். ஒன்று மற்றொன்றுக்கு போராட்டத்தின் இருகண்கள் ஆயுதப் போராட்டமும், ஆதரவாக இருந்து கொண்டிருக்கும். சுதந்திர சுயநிர்ணய வெகு ஜனஎழுச்சிப் போராட்டமுமாகும். முன்னையது ஆரம்பம் என்றால் பின்னையது முடிவு என்பதாகும். ஆயுதப் போராட்டத்தின் உச்சக் கட்டம் தான் வெகு ஜன எழுச்சிப் போராட்டமாகும். வெகு ஜன எழுச்சிப் போராட்டம் என்பது மக்களை சுதந்தான் இக்கட்டுரையின் பிரதான நோக்கமாகும். வெகு ஜனப் போராட்டத்தின் உச்ச கட்டத்தில் பலஸ்தீன மக்கள் இன்று இருந்து கொண்டிருக்கிறார்கள்.

1948 க்கு முன்னர் பலஸ்தீனம் பலஸ்தீன மக்களுக்குரியதாக இருந்தது. அவர்களின் தலைமைத்துவம் சீர் கெடும் போது அக்கால பலஸ்தீன கவிஞர்கள் அரசியல் கவிதைகளைக் கொண்டு அவர்களைச் சீர்திருத்தினார்கள். அவை காத்திரமான அரசியல் கவிதைகளாகத் தோன்றின. மண்ணின் மைந்தர்களான அக்கவிஞர்கள்எதிர்காலத்தை உணரக் கூடியவர்களாகத்தின் சகல கவிஞர்களும் ஒன்றிணைந்து தங்கள் கவிதைகள் மூலம் வெகு ஜனப் போராட்டத்திற்கு மக்களைத் தயார்படுத்தினார்கள். இதனால் பலஸ்தீனம் பலஸ்தீனியருக்கே என்ற சுயநிர்ணய உணர்வு தலைவிரித்தாடியது. இந்த உணர்வு உச்சக் கட்டத்தை அடைந்த போது 1956 ஆம் ஆண்டு எழுச்சி செய்த "கபர்கசாம்" கிராம மக்கள் சியோனிச இராணுவத்தினால் படுகொலை செய்யப்பட்டார்கள். இந்நிகழ்ச்சி மனித இனம் வெட்கித்தலைகுனிய வைத்த போது, உலகம் கண்டனம் செய்த போது, பலஸ்தீனியர்கள் வெஞ்சினம் கொண்டார்கள்.

பட்டி தொட்டிகளில் அகதி முகாம்களில் இக்கவிதைகள் பாடப்பட்டன. பலஸ்தீன தாய் இக்கவிதைகளைப் பாடியே தனது பிள்ளைக்கு அமுதூட்டினாள். இளம் சிறார்களுக்கு மண்ணின் பற்றும், சுதந்திர வேட்கையும் இக்கவிதைகள் மூலம் ஊட்டப்பட்டன சுதந்திரவேட்கை அவர்கள் நரம்பு நாளங்களில் பரவிப் பாய்ந்தன. சியோனிச இராணுவம் அவர்களுக்குத் துச்சமாகத் தெரிந்தது. அவர்களின் நவீன ஆயுதங்களை

வெளிவாகின்றது. தமிழ இனத்தின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கு அதிகமாகப் பங்களிப்பு செய்தவர்கள், கவிஞர் காசி ஆனந்தன், புதுவை இரத்தினதுரை இன்குலாப் ஆகியவர்களைக் குறிப்பிட வேண்டும். இவர்களின் உணர்ச்சி மிகு கவிதைகள் இன்று வெகுஜன எழுச்சியை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. இதயங்களையே சுண்டியிழுத்துக் கொண்டிருக்கின்றன. இவர்களின் பங்களிப்பு போல் தமிழினத்தில் மேலும் கவிஞர்கள் உருவாக வேண்டியது மிகவும் அவசியம். இலைமறைகாய் போல் எத்

எனது கண்கள் இருக்கும் வரை
எனது உதடுகள் இருக்கும் வரை
எனது கைகள் எனது தன்னுணர்வு இருக்கும் வரை
விடுதலைக்கான பயங்கரப் போரை
எதிரியின் எதிரில் நான் பிரகடனம் செய்வேன்
தொழிலாளர்கள்- மாணவர்கள்- கவிஞர்கள் பெயரால்
நான் பிரகடனம் செய்வேன்
நான் வாழும் வரை எனது சொற்களும்வாழும்
சுதந்திரப் போராளிகள் கைகளில்
ரொட்டியும் ஆயுதமாயும் என்றும் இருக்கும்
நீ. என்னைச் சுற்றிக் கட்டலாம்
எனது வாயில் மண் இட்டு நிரப்பலாம்
ஆயினும் என்ன?
கவிதை என் துடிக்கும் இதயத்தின் குருதி
சவுக்கடியிலும், சங்கிலிப் பிணைப்பிலும்
நான் பாடுவேன்
போரிடும் எனது பாடலைப் பாட
என்னுள் ஒரு கோடி
வானம் பாடிகள் உள்ளன!

---

# இலக்கியத்தடம்

## தமிழ் சினிமாக்களின் தரம்

எத்தகைய சினிமாப் படங்களை நல்ல சினிமாப் படங்களாகச் சொல்லலாம். நம் மத்தியே உள்ள சினிமா அரங்குகளில் காட்டப்படும் அரங்குகளில் மினி சினிமா எல்லாச் சினிமாக்களும் உண்மையில் தரமானவையா?

சில வகையான வாய்ப்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு, சுடச்சுட இறக்குமதியாகி எமது சினிமா ரசிகர்களின் நெஞ்சங்களைக் கொள்ளை கொள்ளும் தமிழ் சினிமாக் கலையினை உன்னதங்களாகக் கொள்ளலாமா?

அச்சில் வருவது எல்லாம் இலக்கியம் என்று எவ்வாறு சொல்ல முடியாதோ அவ்விதமே திரையில் காட்டப்படும் சினிமாக்கள் என்று சொல்ல முடியாது என்று கூறப்படுகின்றது.

சினிமா ஒரு கலை. எந்தவொரு கலைக்கும் அடிப்படையான குணாதிசயங்கள் உண்டு. அவற்றினைக் கைவிட்டால் அவற்றின் அடிப்படையே போய் விடும்.

ஆனால் நம்மத்தியிலே காட்டப்படும் சினிமாக்கள் தொழிற்சாலை உற்பத்திகள் போல உள்ளன. 'கலை' என்பது காற்றோடு போய் அது தொழிலாகி விட்டது.

தொழில் என்ற காரணத்தால் சுலபமாக பணம்சேர்க்க நினைக்கும் பண முதலைகளினால் சினிமா குதறப்படுகிறது. எமது தமிழ் சினிமா - தென்னிந்திய மசலாத்தனமான சினிமா இவ்விதம் படுமோசமான நிலைக்குத் தள்ளப்பட்டு இருப்பதற்குக் காரணம் இதுவே.

மனமே குறிக்கோளாக இருப்பதனால் மக்களைஎன்ன விதத்தில் கவரலாமோ, எவ்விதம் அவர்களது உணர்வுகளைத் தூண்டி விட்டு அதற்கு தீனி போடுவதாக முனைந்து வியாபாரத்தினைக் கவனிக்கலாமோ அதனையே தற்போதைய தமிழ் சினிமாக்களின் முன்னோடிகள் செய்து வருகின்றனர்.

### சினிமாச் செய்திகள்

இந்த சினிமா வியாபாரிகளின் சந்தை நலன்களைக் கவனிக்கவே தென்னிந்திய சினிமாச் சஞ்சிகைகள் ஒன்றுக்குப் பத்தாக வண்ண வண்ண கலர்களில் வடிவங்களில் வெளி வருகின்றன.

முதலாளிகளால் உழைப்பு சுரண்டப்பட்டு கூலியாக கிடைக்கும் மிகுதிப் பணத்தில் சாதாரண பொதுமக்கள் இந்த மாயங்களுக்கும் பணத்தை இறைக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் உள்ளனர்.

தரமான சினிமாப் படங்களோ, அத்தகைய சினிமாப் படங்களைப் பற்றி அறிந்து கொள்ளக் கூடிய தரமான சினிமாச் சஞ்சிகைகளோ தமிழகத்திலும் இல்லை. இங்கும் இல்லை. (சில இலக்கிய சிற்றேடுகள் வேறு சில சஞ்சிகைகளில் தான் இவை பற்றிய சுட்டுரைகள் குறிப்புக்கள் வருகின்றன)

எம்மைப் பொறுத்த வரை எமது சினிமா வரலாறு எப்படி இந்திய மசால சினிமாக்களால் ஆட்சி செய்யப்படுகின்றதோ அதே போலவே அங்குள்ள சினிமாச் சஞ்சிகைகளே இங்கும் ஆட்சி செலுத்துகின்றன.

எமது திரை அரங்குகளில் மினி அரங்குகளில் எவ்விதம் ஆபாச காட்சிகள் மட்டும் அல்ல ஆபாச வசனங்கள், கோமாளித்தனங்கள் நிறைந்த சினிமாப் படங்கள் காட்டப்படுகின்றனவோ அவ்விதமே எமது பத்திரிகைகளிலும் அத்தகைய சினிமாச் செய்திகளைப் பிரசுரிக்கின்றன.

இத்தகைய சினிமாச் செய்திகளுக்கு மூலங்கள் இங்கு கடைவிரிக்கப்பட்டு இருக்கும் இந்திய சினிமாச் சஞ்சிகைகளே.

### நமது பத்திரிகைகள்

கொழும்பில் இருந்து வெளிவரும் சகல தமிழ் பத்திரிகைகளிலும் சினிமாச் செய்திகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகின்றன. இது இன்று நேற்றுத் தொடங்கிய விளையாட்டு அல்ல. மிக நீண்ட காலமாக நடந்து வரும் நிகழ்ச்சி.

தரமான சினிமாக் கட்டுரைகள், செய்திகள், விமர்சனக் கட்டுரைகளை தாராளமாக பிரசுரிக்கலாம். இதில் அலை; வியூகம் போன்ற சஞ்சிகைகளும், திசை வார இதழும் கணிசமான பங்களிப்பினைச் செய்து வருகின்றன. தமிழ் சினிமாவின் மோசமான செய்திகளைப் பிரசுரித்துத் தான் தமது விற்பனையினைக் காட்ட வேண்டிய நிலையில் இங்குள்ள (யாழ்ப்பாணத்தில்) எந்தப் பத்திரிகைக்கும் இல்லை காரணம் தென்னகத்துசினிமடுசஞ்சிகைகள் இங்கு அமோகமாக விற்பனையாகின்றனவே.

### சினிமா விமர்சனத் திற்குபரிசு

பத்திரிகைஒன்றுதனதுவார வெளியீட்டில்சினிமாவுக்குஒரு பக்கத்தினை ஒதுக்கியுள்ளது. தரமான சினிமாக்கள் பற்றிய செய்திகள், கட்டுரைகள் அதில் பிரசுரமானால் நன்றாகவும் இருக்கும். பிரயோசமாகவும் இருக்கும்.

ஆனால் கவலைக்குரிய விடயம் என்ன வென்றால். 'திரைப்படட ரசிகர்களுக்கு ஓர் தித்திக்கும் செய்தி. ரசிகர்களே நீங்கள் சமீபத்தில் பார்த்து ரசித்து பரவசம் அடைந்த படம் பற்றிய விமர்சனத்தை எழுதி அனுப்புங்கள். தரமான விமர்சனத்துக்கு ரூபா 100/- சன்மானமாக வழங்கப்படும்' என்று ஓர் விளப்பரம் வெளியிடப்பட்டு உள்ளது.

பிரசுரமாகும் போது அவற்றுக்கு ஏதாவது சன்மானஎகிடைக்கின்றதா? எழுதும் வரிக்கு வரி பணம் பெறும் எழுத்தாளர்களும் மேலை நாடுகளில்உள்ளனர் ஆனால் எமது படைப்பாளிகளுக்கு சிறு தொகை பணம் கூட இல்லை.

எழுத்தினை விலை பேச வேண்டும் என்று இங்கு குறிப்பிடவில்லை. ஆனால் எழுத்தாளர்களது உழைப்புக்கு சிறிய சன்மானம் கூட கொடுக்கப்படுவதில்லை.

எழுத்தாளர்களுக்கு சன்மானம் கிடைப்பதில்லை. மூன்றாந்தர சினிமா விமர்சனத்துக்குசன்மானம் கிடைக்கப் போகின்றது என்று எழுத்தாள நண்பர் ஒருவர் கூறினார்.

# அழலாடிக்குட்டன்

மூன்றாந்தரத்தில் உள்ள தமிழகத்து சினிமாப் படங்களில் இருந்து ரசிகர்கள் தாங்கள் பார்த்து பரவசம் அடைந்த நிகழ்ச்சிகளை எழுதத் தொடங்கினால் அது எங்கு போய் முடியும்?

### எழுத்தாளர்களுக்குச் சன்மானம்

எழுத்தாளர்கள் பத்திரிகைகளுக்கு கவிதைகள், கதைகள், கட்டுரைகள் என்று பலவற்றினை எழுதுகின்றார்கள். ஒரு இலக்கியப் படைப்பினை படைப்பது என்பது இலகுவான காரியம் அல்ல. இலக்கியப் படைப்பினை உருவாக்குவது என்பது நுணுக்கமாக செலுத்தி எடுக்கப்படும் சிலைபைப் போல மிகமிக நுட்பமானது.

மிகுந்த சிரமப்பட்டு எழுதி பத்திரிகைகளுக்கு எழுத்தாளர்கள் அனுப்பி அவை

### தரமானசினிமாக்களின் பரீட்சயம்

தரமான சினிமாப் படங்கள் மக்கள்மத்தியில் கொண்டு செல்ல இந்தியாவின் கர்நாடக மாநிலத்தில் உள்ள கிராமம் (ஹெக்கோடு) ஒன்றில் ஒரு அமைப்பு நடத்திய திரைப்பட இயக்கம் பற்றிய குறிப்புக்கள் இங்கே தரப்படுகின்றன.

யாத்ரா (1984) என்னும் சிறு சஞ்சிகையில் இக்கட்டுரை பிரசுரமானது.

'ஹெக்கோடு கிராமத்தில் உள்ள நீநாஸம் என்ற ஸ்தாபனம் கலைத்துறைகளின் பல முகங்கள் கொண்ட ஒன்று. பூனாவில் உள்ள Film Archieves of India, பின் Film And T. V. Institute of India ஆகிய இரு ஸ்தாபனங்களின் உதவியுடனும் ஒத்துழைப்புடனும் நீநாஸம் பயிற்சி முகாமும் திரைப்பட விழாவும் கொண்ட இத்திட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தது. இதற்கும் முன்னால் 1977 டிசம்பரில், நீநாஸம் உலக Classics கொண்ட ஒரு திரைப்பட விழாவைநடாத்தியிருந்தது. இது தொடங்கி கிராமத்து மக்களிடம் தரமான திரைப்படங்களை எடுத்துச் செல்ல வேண்டும் என்ற எண்ணத்துடன் திரைப் படங்களை திரையிட்டு வருகிறது. ஆச்சரியமாக இருக்கும். ஆனால் உண்மை. ஒன்றுமறியாத பேதைகளாக முகங்காட்டும் இக் கிராமத்து மக்கள் உலக திரைப்படக்கலை மேதைகளான ஸத்யஜித்ரே குரஸவா, மெர்க்மன், ஃபெல்லினி, புனுவல், கோடார்ட், க்ளோஸோ ஃப்ளாஹெர்ட்டி. மிக்யாகுச்சி,தெஷிகா ஹாரா, மணீகௌல், ரெனே, பின் கேட்கவேவேண்டாம். சார்லி சப்ளின் ஆகியோர் அனைவரின் படைப்புக்களுடனும் பரிச்சயம் கொண்டவர்கள் இருப்பிலும் இவர்கள் முதல் இருவரின் (ஸத்யஜித்ரே குரஸாவா) பரம ரசிகர்கள். 'ஹெக் கோடுவில் ஏற்பாடு செய்த திரைப்படவிழாவுக்கு கிடைத்த ஆதரவின் உற்சாகத்தில் ஹெக்கோடுவிலிருந்து 50 கிலோ மீட்டர் உள்ள கிராமத்திலும் National Film Atchieves of Indiaவின் உதவியுடன் இப்படங்களைத் திரையிட்டது. இங்கும் விளைவுகள் உற்சாகம் தருவனவாகவே இருந்தன. தரமான படங்கள் கலைப் படங்கள், கிாமத்தில் இரசிக்கப்டும், ஆதரவு பெறும், வேரூன்றும் எனத் தெளிவாகியதும் திரைப்படங்களைப் பயிற்சி முகாம் ஒன்றும் ஏற்பாடு செய்வதென்று தீர்மானிக்கப் பட்டது.


## கேள்வி விண்ணப்பம் மூலம் பாவித்த லொறி பொடி (LORRY BODY)

## விற்பனை

எமது சங்கம் பாவித்த லொறி பொடி கேள்வி விண்ணப்பம் மூலம் விற்பனைக்குண்டு. விண்ணப்பப் படிவத்தினை ரூபா 10/- செலுத்தி தலைமைக் காரியாலயத்தில் பெற்று 31 - 05 - 1990க்கு முன் பதிவுத் தபாலில் விண்ணப்பிக்கவும். கடித மேலுறையில் இடது பக்க மூலையில் 'பாவித்த லொறி பொடி விற்பனை' எனக் குறிப்பிடவும். சங்க வேலைநாட்களில் தலைமைக் காரியாலயத்தில் லொறி பொடியை பார்வையிடலாம். மீளளிக்கப்படும் வைப்புப் பணம் ரூபா 500/- செலுத்தப்பட வேண்டும்.

தெரிவு செய்யப்படுபவர் அறிவித்தல் கிடைக்கப் பெற்று 10 நாட்களுக்குள் முழுப்பணமும் செலுத்தி லொறி பொடியை வெளியே எடுத்துச் செல்ல வேண்டும்.

தலைவர்
**கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம்**
**பரந்தன்.**

(B/961)

# சிறைப்பட்ட சிந்தனைகள்



15 - 11 - 1989

இன்று நீர்வேலியைச் சேர்ந்த லோகேஸ்வரன் என்ற பையனைத் திரும்பவும் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றார்கள். இவன் இயக்கத்தின் முழுநேர உறுப்பினன் கூட இல்லை. சட்டி, பானை வாங்குவதற்காகக் கடைக்குப் போன இடத்தில் இவனையும் இவனது ஒன்றுவிட்ட சகோதரனையும் E.P.R.L.F உம் ஆமியும் இணைந்து கைது செய்தனர். இருவரையும் சித்திரவதை செய்தபோது இவனது சகோதரர் வாய்தடுமாறி E.P என்று சொல்லிவிட்டார். 'E. P என்று சொல்வது தங்களைக் கிண்டல் செய்யும் நோக்கத்துடனானது. ஏன் E P.R.L.F. என்று சொல்லவில்லை?' என்று கேட்டு அடித்ததில் அவருக்குக் கை வெடித்துவிட்டது. அதுமட்டுமல்ல E.P என்று சொன்னதற்காக ஆயிரம்ரூபாய் அபராதம் விதித்தனர். E.P.R.L.F. செந்தோழர்கள்.

இவனை இவனது வீட்டிற்குக் கொண்டு சென்றனர். தாய் சகோதரர்கள முன்னிலையில் இம்சைப்படுத்தினார்கள். 'ஆயுதங்களைக் காட்டு' என்றார்கள். உலோகங்கள் இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்துக் காட்டும் மெற்றல் டிரெக்டர் கருவி சத்தம் போட்ட இடமெல்லாம் கிணறு தோண்ட வைத்தார்கள். எதுவும் அகப்படாத ஆத்திரத்தில் மீண்டும் தாக்கியபோது 'தயவுசெய்து என்னைச் சுட்டுவிடுங்கள், என்னால் வேதனை தாங்கமுடியவில்லை' என்று கத்தியதற்காக வீட்டிலிருந்த உலக்கையை எடுத்து இவனது தாயின் கதறலுக்கு மத்தியில் நையப்புடைத்தார்கள். கோண்டாவில் முகாமுக்குக் கொண்டுசென்று மீண்டும் சித்திரவதை செய்தார்கள். காலில் கயிற்றைக் கட்டித் தலைகீழாகத் தாக்கினார்கள். காலில் கட்டப்பட்ட நிலையில் தலைகீழாக கப்பியின் உதவியுடன் அந்தரத்துக்குக் கொண்டு சென்று கப்பிக் கயிற்றைக் கைவிட்டு தலைகீழாக விழுத்தினார்கள். மத்தியான வெயிலில் கைகால்களைக் கட்டிப்போட்டார்கள். நிலம் கொதித்துக் கொண்டிருந்தது. உடல்வேதனையாலும் சுடுமண்ணின் அகோரத்தாலும் இவன் கதறினான். பகல் நித்திரை செய்துகொண்டிருந்த E. P. R. L. F தோழர் ஒருவர் தனது தூக்கத்தைக் கலைத்ததற்காக இவனது நெஞ்சில் ஏறி இருந்து கொண்டு கூரிய கல்லொன்றினால் மண்டையை உடைத்தார். மத்தியானநேரம் இரத்தப்பெருக்கு அதிகமாக இருந்ததால் இவன் மயங்கிவிட்டான்.

சமையல் அறையாக இருந்த ஒன்றினுள் இவனைக் கொண்டுபோய்ப் போட்டனர். எந்தவிதமான வைத்திய சிகிச்சையும் இல்லை. தானாக மயக்கம் தெளிந்தான். உயிருடன் இருந்தால் மேலும் தன்னைச் சித்திரவதை செய்வார்கள் எனக் கருதினான். தற்கொலை செய்வதற்கான மார்க்கத்தைத் தேடினான். இருட்டில் தடவிக்கொண்டே போனான். நிலத்துக்குப் பொலீஷ் போடும் கலவை இருந்தது. கொஞ்சமாவது விஷத்தன்மை இருக்கும் எனக் கருதி அதைக் குடித்துவிட்டான். மயக்கம் வந்தது.

மயக்கம் தெளிந்தபோது யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் இவன் சேர்க்கப்பட்டிருந்தான். தொண்டையில் ஓட்டைபோட்டு குழாய் வழியாக உணவு உட்செலுத்தப்பட்டதால் பேசமுடியாத நிலை. தனது நிலையைப் பற்றிச் சைகைமூலம் விசாரித்திருக்கிறான். நீ செத்துப் போய்விட்டால் என்று இங்கே ஒப்படைத்தார்கள். நாங்கள் ஆறு நாட்களாக உன்னைக் காப்பாற்ற முயற்சித்தோம். கடவுள் உன்னைக் கைவிடவில்லை' என அந்தத்தாதி ஆறுதல் சொன்னாள். இவன் உயிர் பிழைத்துவிட்டான் என்ற செய்தி எப்படியோ தெரியக்கூடாதவர்களுக்குத் தெரிந்துவிட்டது. யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் புகுந்து ஏறிக்கொண்டிருந்த குளுக்கோசின் குழாய்கள் அனைத்தையும் பிடுங்கி எறிந்துவிட்டு இவனை இந்த முகாமுக்குக் கொண்டுவந்தனர்.

> மத்தியான வெயிலில் கை கால்களைக் கட்டிப் போட்டார்கள். நிலம் கொதித்துக்கொண்டிருந்தது. உடல் வேதனையாலும் சுடுமண்ணின் அகோரத்தாலும் இவன் கதறினான். பகல் நித்திரை செய்து கொண்டிருந்த **E.P.R.L.F** தோழர் ஒருவர் தனது தூக்கத்தைக் கலைத்ததற்காக இவனது நெஞ்சில் ஏறி இருந்துகொண்டு கூரிய கல்லொன்றினால் மண்டையை உடைத்தார். மத்தியான நேரம் இரத்தப்பெருக்கு அதிகமாக இருந்ததால் இவன் மயங்கிவிட்டான்.

இவன் K.K.S.க்கு வந்த பின்னர் இவனைப் பரிசோதித்த டாக்டருக்குக்கூட இவனை விடுதலை செய்வதற்குச் சிபாரிசு பண்ணுவதற்கு மனம்வரவில்லை. இவன் மேலதிகமான வைத்திய சிகிச்சை பெறவேண்டியவன். இவன் இதே நிலையில் இங்கு வைக்கப்பட்டிருந்தால் இவனது ஆயுள் குறுகிவிடும். எப்போதும் மூச்சுவிடுவதற்கே சிரமப்படுவான். அடிக்கடி நோய் கடுமையாகி ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லப்படுவதும் இரண்டு மணித்தியாலத்தின் பின்னர் மீண்டும் புளொக்கில் இவனைச் சேர்ப்பதும்தான் இங்கே அடிக்கடி காணும் காட்சி. இராணுவத்தில் சேர்ந்ததால் மனிதநேயமே அற்றுப்போன டாக்டர்கள்.

இவனைத் தூக்கிக்கொண்டு போவதை எல்லோரும் ஜன்னல் கரையில் நின்று பார்த்துக்கொண்டிருந்தார்கள். 'இவனை ஏன் தான் விடாமல் வைத்திருக்கிறார்களோ?' என்று திட்டிக்கொண்டிருந்தார்கள். 'றேடியோவில் என்ன செய்தி?' என்று கேட்டேன். 'நேபாளத்தில் மனித உரிமைகள் மீறப்படுவதாக இந்திய வானொலி கவலை தெரிவித்தது' கோபத்துடன் ஒருவன் சுவரில் கையால் அறைந்து சொல்லிவிட்டுச் சென்றான். நான் சிரித்துக் கொண்டேன்.

---

கவிதை

## ஒரு விடியலின் கதை

இரவொன்று புலரும் வேளை
இ:தென்ன சோகம் கண்ணே!
ஈழத்து மண்ணில் இன்று
இருக்கின்ற அமைதி கண்டும்
விழிகளில் வடியும் இந்தத்
துளிகளைத் துடைத்துவிடு; ஒரு
விடியலின் கதை சொல்கின்றேன்...

●

முடிந்த கதை என்றாலும்; நம்
முன்னாலே சென்றவர்கள்
விடுதலை என்று கூறி
வேடிக்கை காட்டியதில்
வீணாகப் பொழுதிழந்தோம்
பொன்னான வாழ்விழந்தோம் —பின்பு
பொறுமையை இழந்தோம்
புலிகளாச் சீறினோம்
வீரத்தை இந்த மண்ணில்
விதைகளாய்த் தூவினோம்

●

அடிபட்டு உதைபட்டு
அதற்கும் மேல் வதைபட்டும்
விடிவொன்று வேண்டுமென்று
துடிதுடித்திருந்தோம்; நெஞ்சில்
வேதனை நிறைந்திருந்தும்
சாதனை படைத்து எங்கள்
சந்ததி காக்கத் துணிந்தோம்

●

ஈழத்தை மீட்கும் பணியில்
இன்னுயிரை ஈந்து சென்ற
தீரர்கள் திசையினிலே
தினம் தினம் நாம் நடந்தோம்
சாவினைக் கண்டு நாங்கள்
சளைத்திடவில்லைக் கண்ணே!
சதிவலை எறிந்த போதும் அதில்
சிக்கிடவில்லைக் கண்ணே.

●

சுதந்திரம் எங்கள் மூச்சு
சூளுரைத் திருந்தோம் நாங்கள்
செந்நீரைச் சிந்தி வளர்த்தோம் - இதனைச்
சிதைத்திட நினைப்பும் வருமோ?
கோடிக்கை எதிர்த்திடினும் கொண்ட
கொள்கையை மாற்றுவோமோ?
ஈடிணையில்லா எங்கள் தமிழ்
ஈழத்தை இழந்திடுவோமோ?

இரவொன்று புலரும் வேளை
இ:தென்ன சோகம் கண்ணே!
ஈ[illegible]த்து மண்ணில் இன்று
இருக்கின்ற அமைதி காண்பாய்
நாளைய உலகத்திற்கும் புது

---

## ஹைக்கூ கவிதைகள் — ஒரு நோக்கு

சார்லீஸ்

உலகம் பூராக ஹைக்கூ பற

முன்னர் சோஷலிசத்தைவிடு

இதன் பின்னர் 1920 இல் பன்னிரண்டு பிரான்சுக் கவிஞர்களின் பிரான்சு ஹைக்கூக் கவிதைகள் தொகுத்து வெளியிடப்பட்டன. பிரான்சில் 1924 இல் ஹைக்கூப் போட்டிகள் பலவும் நடாத்தப்பட்டன. ஆயிரக்கணக்கான இளங் கவிஞர்கள் ஹைக்கூப் பறவைகளின் மேல் பறந்தனர். சிலரின் சிறகுகள் ஓடிந்தன. ஆயினும் ஹைக்கூக்கு பிரான்சில் தோன்றிய இப் புதிய அலைகள் 1925 இல் நின்று போயிற்று.

பிரான்சில் ஹைக்கூ கவிதைத் துறை நீண்ட காலம் தாக்குப்பிடிக்க முடியாமல்

---

## விண்வெளி 2000 விஞ்ஞானம்

கிருமிகளை வெள்ளிக்குக் கொண்டு போய்க் குடியேற்றுவதன் மூலம் அதிசயிக்கத்தக்க பலாபலன்கள் ஏற்படலாம் என்று விஞ்ஞானிகள் எதிர்பார்க்கிறார்கள். வெள்ளியிலே இவை வர்க்க விருத்தியை வேகமாக ஆரம்பித்த பிறகு, இந்தக் கிருமிகள் தங்கள் குடியிருப்பு இடங்களாகிய முகில்களில் இருந்து பெருமளவு நீரையும் கரியமிலவாயுவையும் பிரித்துஎடுத்துவிடும். இங்ஙனம் நீரையும் கரியமிலவாயுவையும் பிரித்துஎடுத்து

கண்ணாடி வீடு போலச் செயலாற்றுவதுதான் என்பதை ஏற்கனவே பார்த்தோம்.

வெள்ளியின் சூழலிலே கரியமிலவாயுவின் அளவு குறைந்து கொண்டே போகுமானால் அதனுடைய தரைப்பிரதேசத்து உஷ்ணமும் குறைந்து கொண்டே போகும். துருவப் பிரதேசத்தில் இருக்கும்நீராவி கூட - உஷ்ணம் குறைந்துவிடும் காரணத்தினால்-மழையாகப் பெய்யும். இங்ஙனம், நீராவி மழையாகப் பெய்வதனால் சூழலிலே சூழ்ந்திருக்கும் நீராவி, கண்ணாடி வீடு

காலில் கயிற்றைக் கட்டித் தலைகீழாகத் தாக்கினார்கள். காலில் கட்டப்பட்ட

கொண்டிருந்த E.P.R.L.F தோழர் ஒருவர் தனது தூக்கத்தைக் கலைத்ததற்காக இவனது நெஞ்சில் ஏறி இருந்து

தன்னைச் சித்திரவதை செய்வார்கள் எனக் கருதினான். தற்கொலை செய்வதற்கான மார்க்கத்தைத் தேடினான்.

இவன் K.K.S.க்கு வந்த பின்னர் இவனைப் பரிசோதித்த டாக்டருக்குக்கூட

அறைந்து சொல்லிவிட்டுச் சென்றான். நான் சிரித்துக் கொண்டேன்.

சாவினைக் கண்டு நாங்கள்
சளைத்திடவில்லைக் கண்ணே!
சதிவலை எறிந்த போதும் அதில்
சிக்கிடவில்லைக் கண்ணே.

●

சுதந்திரம் எங்கள் மூச்சு
சூளுரைத் திருந்தோம் நாங்கள்
செந்நீரைச் சிந்தி வளர்த்தோம் - இதனைச்
சிதைத்திட நினைப்பும் வருமோ?
கோடிக்கை எதிர்த்திடினும் கொண்ட
கொள்கையை மாற்றுவோமோ?
ஈடிணையில்லா எங்கள் தமிழ்
ஈழத்தை இழந்திடுவோமோ?

இரவொன்று புலரும் வேளை
இ:தென்ன சோகம் கண்ணே!
ஈ[illegible]த்து மண்ணில் இன்று
இருக்கின்ற அமைதி காண்பாய்
நாளைய உலகத்திற்கும் புது
நம்பிக்கை ஊட்டுகின்ற
நல்வழி இதுதானம்மா!

- ஆதிலட்சுமி இராசையா

# ஹைக்கூ கவிதைகள் — ஒரு நோக்கு

சார்ல்ஸ்

உலகம் பூராக ஹைக்கூ பற்றிய பிரக்ஞை முழுமையாக உணரப்பட்டு வருகின்றது. இலக்கிய உலகில் ஒவ்வொரு மொழியிலும் ஜப்பானிய ஹைக்கூ மொழிபெயர்ப்புக் கவிதைகளாக எழுந்து; பின்னர் மூன்றடிக் கவிதைகளாக ஒவ்வொரு மொழியிலும் ஹைக்கூ எழுந்து வருகின்றது.

இவ்வகையில் ஹைக்கூ பெற்ற சிறப்பு அடையாளம் (Special Identification) வேறு எந்த இலக்கிய வடிவத்துக்கும் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஹைக்கூ இலகுவில் எவராலும் உணரக்கூடியதும் உள்வாங்கக்கூடியதுமான கவிதையாக அமைந்தமையால் சர்வதேசப் புகழை அடைந்துள்ளது.

ஹைக்கூ கவிதை வெறுமனே வடிவமாற்றம் மூலம் உருவெடுத்ததாகக் கருதிட முடியாது. ஜப்பானிய இலக்கிய உலகில் ஒரு சரித்திரத்தையே படைத்த இந்த ஹைக்கூ கவிதை வடிவம் பதினாறாம், பதினேழாம் பதினெட்டாம் நூற்றாண்டுகளில் பூவாய் அரும்பி, வளர்ந்து மணந்தது.

ஹைக்கூ கவிதை வடிவம் ஜப்பானுக்குள் மாத்திரம் நின்று விடவில்லை. அகிலமெங்கிலும் ஹைக்கூவின் மணம் பரவியது.

ஜப்பானில் விடுதலைப் பா (FREE VERSE) சோதனை முயற்சிகள் மேற்கத்திய குறியீட்டியல் அறிமுகத்தின் பின்னர் தோன்றியபோதும் அவை அயல்நாட்டு எண்ணங்களையோ ஜப்பானிய வைதீக உள்ளடக்கத்தையேதான் பற்றிப் படர்ந்தன. ஜப்பானிய இலக்கியத்தில் முக்கிய ஹைக்கூ கவிஞராக விளங்குபவர் "தங்குபோக்" ஆவார். தக்குபோக்கு (THUKU BOKU) முதல் உலகப்போருக்கு-முன்னர் சோஷலிசத்தைவிடு நிலைப்பாலில் முழங்கினார். இதன்மூலம் ஜப்பானிய இலக்கியத்தில் அழியாத சுவடு பதித்து நிலையான இடம் பெற்றிருக்கிறார்.

ஜப்பானில் எழுந்த ஹைக்கூ கவிதைகள் அழகியற் கோட்பாடுகளுடனேயே உள்ளார்த்தமாக ஒன்றிணைந்து நிற்கின்றன. ஒவ்வொரு ஹைக்கூவிலும் வசந்தம், இலையுதிர் காலம் முதலிய பருவங்களின் நிதர்சனத்தைக் காணலாம். இயற்கைப் படிமங்கள் கருத்துக்களின் பதுக்கல் அறைகளிலிருந்தே வருகின்றன.

ஹைக்கூ ஜப்பானிய இலக்கியத்தில் நீண்ட தடத்தைப் பெற்றிருக்கின்றது. சோசகா, தங்கா பின்னர் குறுகிய வடிவில் ஹைக்கூவாகி இக்கவிதை வடிவம் கடுகளவு சிறியதாயிதும் காரம் பெரிதாக அர்த்த ஜாலங்கள் நிறைந்தவையாகக் காணப்பட்டன.

ஜப்பானிய இலக்கியத் துறையில் மாத்திரமே ஹைக்கூவின்பதிவுகள் ஏற்பட்டதாகக் கருதிட முடியாது. இன்று உலகம் எங்கெனும் ஹைக்கூ பொதுவான கவிதை வடிவமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு வருவதை நாம் அவதானித்தல் வேண்டும்.

பிரான்சில் ஹைக்கூ கவிதை வடிவத்தின் மீது ஒரு தாகம் ஏற்பட்டது. 1905 இல் ''மார்சல் ரெவான்'' ஜப்பானியக் கவிதைத் தொகுப்பு ஒன்றைப் பிரெஞ்சு மொழியில் 1910 இல் வெளியிட்டார்.

பிரெஞ்சு மொழியில் முதன் முதல் வெளியிடப்பட்ட வேற்றுமொழிக் ஹைக்கூ தொகுப்பு பிரான்சிய மக்களால் முழுமையாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. பிரான்சிய இலக்கிய வாதிகளின் கண்டனத்துக்கும் ''ஹைக்கூ'', உண்டாக வேண்டியிருந்தது.

இதன் பின்னர் 1920 இல் பன்னிரண்டு பிரான்சுக் கவிஞர்களின் பிரான்சு ஹைக்கூக் கவிதைகள் தொகுத்து வெளியிடப்பட்டன. பிரான்சில் 1924 இல் ஹைக்கூப் போட்டிகள் பலவும் நடாத்தப்பட்டன. ஆயிரக்கணக்கான இளங் கவிஞர்கள் ஹைக்கூப் பறவைகளின் மேல் பறந்தனர். சிலரின் சிறகுகள் ஒடிந்தன. ஆயினும் ஹைக்கூக்கு பிரான்சில் தோன்றிய இப் புதிய அலைகள் 1925 இல் நின்று போயிற்று.

பிரான்சில் ஹைக்கூ கவிதைத் துறை நீண்ட காலம் தாக்குப்பிடிக்க முடியாமல் போய்விட்டது. ஆயினும் ஹைக்கூவின் தாக்கம் இன்னும் பிரான்சில் உணரப் பட்டே வருகின்றது. ஆனாலும் ஹைக்கூவின் செறிவு, திட்டவட்டமான வடிவம், நீதிபோதனை, நிர்ப்பந்தம் இல்லாமை முதலியன கவிதைக்குத் தேவையான அம்சங்களாக எழுந்தாளர்களால் அங்கீகரிக்கப்படாமல் போகவில்லை.

பிரான்சிய இலக்கிய நெஞ்சங்களை ஹைக்கூ கவர்ந்தது போல், ஆங்கில, அமெரிக்க கவிஞர்களையும் ஹைக்கூ இந் நூற்றாண்டில் ஆரம்ப காலகட்டத்தில் கவர்ந்திருந்தது.

## பகுதி 3

என். என். பிலின்ட், எஸ்ரா பவுண்டு, எமிலோலல் போன்றவர்களின் மணங்களில் ஹைக்கூ கவிதை வடிவத்தின் மூலம் கவிதை உலகிற்கு புதிய பாதை ஒன்றுக்கு வழிகாட்டினர். குறுகிய வடிவில் கவிதைகளை ஆழமாக நெஞ்சில் பதிக்கும் ஹைக்கூ உருவம் ஆங்கிலக் கவிஞர்களினாலும் பின்னர் கவரப்பட்டது.

இன்றைய ஜப்பானியக் கவிதைகள் உலகம் முழுவதும் பெருமளவில் கையாளப்பட்டு வருகின்றது. மொழி பெயர்ப்பில் பல்வேறு எண்ணப்போக்குகளோடு ஜப்பானிய ஹைக்கூக்கள் உலக மக்களனைவரையும் பெரிதும் கவர்கின்றன.

ஹைக்கூ உலக மொழிகள் அனைத்திலும் விடு நிலைப் பாலில்அவரவர்எண்ண நிலைப் போக்குகளுக்கேற்ப வளர்ச்சி கொள்கின்றது.

(தொடரும்)

# விண்வெளி 2000 விஞ்ஞானம்

கிருமிகளை வெள்ளிக்குக் கொண்டு போய்க் குடியேற்றுவதன் மூலம் அதிசயிக்கத்தக்க பலாபலன்கள் ஏற்படலாம் என்று விஞ்ஞானிகள் எதிர்பார்க்கிறார்கள். வெள்ளியிலே இவை வர்க்க விருத்தியை வேகமாக ஆரம்பித்த பிறகு, இந்தக் கிருமிகள் தங்கள் குடியிருப்பு இடங்களாகிய முகில்களில் இருந்து பெருமளவு நீரையும் கரியமிலவாயுவையும் பிரித்துஎடுத்துவிடும். இங்ஙனம் நீரையும் கரியமிலவாயுவையும் பிரித்துஎடுத்துவிடுவதன்மூலம் தமக்கு வேண்டிய உணவை இவை உற்பத்தி செய்துகொள்வதோடுபிராணவாயுவையும் வெள்ளியின்சூழலிலே பெருமளவுக்குச் சேர்த்து விடக்கூடும். கரியும் நீரும் சேர்ந்த பொருளாகிய ஹார்போஹைட்ரேட்க்களைஇக்கிருமிகள் உற்பத்தி செய்யும். இந்தக்கிருமிகளிலே எவையாவது உஷ்ணம் நிறைந்த கீழ்ப்பகுதிகளிலே விழ நேர்ந்தால், அல்லது தாமாக கீழே விழாவிட்டாலும் கீழ்நோக்கிச் செல்லும் காற்றோட்டத்திலே




சிக்குண்டு கீழே செல்ல நேர்ந்தாலோ அவை கறுத்தக் கரியாக எரிந்துவிடும். அப்படி எரிய நேரிடும்போது, இவற்றிலே உள்ள நீர் ஆவியாகப் பிரிந்து, மேல்நோக்கிச்செல்ல கரி மட்டும் வெள்ளியின் தரையிலே தங்கிவிடும்.

இப்படிப்பட்ட மாற்றங்கள் நெடுங்காலமாகத்தொடர்ந்து நடைபெற்று வந்தால். சூழலில் நிறைந்திருக்கும் கரியமிலவாயுவிற் பெரும்பகுதி அற்றுப்போய்விடும். கரியமிலவாயுவின் அளவு எவ்வளவுக்குக் குறைகிறதோ, அவ்வளவுக்குப் பிராண வாயுவின் அளவு அதிகரித்துக்கொண்டே போகும். வெள்ளியினுடைய தரைப்பிரதேசஉஷ்ணம் அதிகமாக இருப்பதற்குக் காரணம் அங்குள்ள கரியமில வாயு கண்ணாடி வீடு போலச் செயலாற்றுவதுதான் என்பதை ஏற்கனவே பார்த்தோம்.

வெள்ளியின் சூழலிலே கரியமிலவாயுவின் அளவு குறைந்து கொண்டே போகுமானால் அதனுடைய தரைப்பிரதேசத்து உஷ்ணமும் குறைந்து கொண்டே போகும். துருவப் பிரதேசத்தில் இருக்கும்நீராவி கூட - உஷ்ணம் குறைந்து விடும் காரணத்தினால்-மழையாகப் பெய்யும். இங்ஙனம், நீராவி மழையாகப் பெய்வதனால் சூழலிலே சூழ்ந்திருக்கும் நீராவி, கண்ணாடி வீடு போலச்செயற்படுவதும் அற்றுப்போகும். இதனால் நிலப்பரப்பின் உஷ்ணநிலை மேலும் குறைந்து கொண்டே செல்லும்.

மழைஅதிகம்அதிகமாகப்பெய்யப்பெய்ய உஷ்ணம் நிறைந்த முகில் கூட்டத்தின் அளவும் குறைந்துகொண்டே வரும் கடைசியாக பிராணவாயு நிறைந்த சூழலுடைய கிரகமாக வெள்ளிக்கிரகம் மாறிவிடும். பூமியில் இருந்து அங்கே கொண்டு செல்லப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்ட உறுதியான தாவரங்கள் விலங்கினங்கள் என்பன வாழக்கூடிய சூழ்நிலை உருவாகும். காலக்கிரமத்திலே மனிதன்கூட அங்கே குடியேறி வாழக்கூடிய சூழ்நிலை தோன்றக்கூடும்.

பனிமுகில் மூடியதும், தகதகக்கும் உஷ்ணமுள்ள தரைப் பிரதேசத்தை உடையதுமாகிய வெள்ளியில் மனிதக்குடியேற்றம் என்பது நம்புவதற்குக் கஷ்டமான ஒரு சம்பவம் எனத் தோன்றக்கூடும். ஆனால் இப்படியானதோர் நிலைமை சாத்தியமாகக்கூடியதுதான் என எண்ணுவதற்குச் சாதகமாக இருப்பது, மூன்றுகோடியே அறுபது லட்சம் மைல்களுக்கு அப்பால் உள்ள, முகில்மூடிய, மர்மங்கள் நிறைந்த வெள்ளியின் இரகசியங்களை ஒவ்வொன்றாகத் துப்புத் துலக்கி வெளிப்படுத்துவதற்கு, வானியல் அறிஞர்கள் கையாண்ட நுட்பமான உபகரணங்களும் விவேகம் நிறைந்த முடிவுகளுமே ஆகும்,

பூமிக்குத் தூரத்திலே உள்ள ஒரு கிரகத்துக்குச் சமீபமாக, முதன்முதலாகத் தன்னியக்க விண்கலத்தை அனுப்பி, அதனை அவதானித்து ஆராய்ச்சி செய்தது. வெள்ளியில்தான் மரீனர் - இரண்டு என்ற விண்கலம் வெள்ளிக்கு 41000 கிலோ மீற்றர் தூரத்திலே, 1962ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14ஆம் திகதி சென்றபோது, இந்த ஆராய்ச்சி இடம்பெற்றது. பூமியில் இருந்து செலுத்தப்பட்ட 109 நாட்களின்பின், மரீனர் - இரண்டு வெள்ளிக்குச் சமீபமாகச் சென்றது. இந்த விண்கலத்தில் மைக்ரோவேவ் ரேடியோ மீற்றர், அகச்சிவப்பு ரேடியோ மீற்றர், மக்னெற்றோ மீற்றர், ரேடியோவினை அளக்கும் கருவிகள், கிறிஸ்ரன் மைக்ரோபோன், சோலர் ப்ளாஸ்மாஸ்பெக்ற்றோமீற்றர்ரேடியோற்ராக்கிங் பீக்கன் என்று பல முக்கியமான, நுண்ணிய கருவிகள் பொருத்தப்பட்டிருந்தன.

பூமியைச் சுற்றிக் காந்தவயல் இருப்பதுபோல, வெள்ளியைச் சுற்றியும் காந்தவயல் இருக்கிறதா என்பதை அறிவதற்காக மரீனர் - இரண்டில் காந்தத்தின் அளவை அளந்தறியும் கருவியும் இருந்தது. 41000 கிலோ மீற்றர் உயரத்தில், வெள்ளியிலே காந்தவயல் இருந்திருக்குமேயானால், இந்தக் கருவி அதனை அளந்து தெரிவித்திருக்கும். வெள்ளியில் அவ்வளவு உயரத்தில் காந்தவயல் கிடையாது என்பதை இக்கருவி புலப்படுத்தியது.

இதேபோல, கதிரியக்க வலயங்களும் அங்கே இல்லை, வெள்ளியிலே காந்தவயல் இருந்தால், அது பூமியில் உள்ள காந்தவயலிலும் 10/1 இலிருந்து 20/1 வரைதான் இருக்கமுடியும் எனத் தெரிகிறது. பூமி வேகமாகத் தன்னைத்தானே சுற்றுகின்ற காரணத்தினால் – நிரட்சரேலிகப் பகுதியில் மணிக்கு 1040 மைல் வேகத்தில் சுற்றுவதனால் - பூமியைச் சுற்றியுள்ள காந்தவயல் உருவாக்கப்படுகிறது. வெள்ளியோ, மிக மெதுவாக, 243 நாட்களுக்கு ஒருமுறை தன்னைத் தானே சுற்றுகிறது.

உடுவில் வியன் நமசிவாயம்

வெள்ளி மஞ்சரி பற்றியும்
வெள்ளி மஞ்சரிக்கும்...
வாசகர்களே:
உங்கள் விமர்சனங்கள்
வரவேற்கப்படுகின்றன
படைப்பாளிகளே:
உங்களிடமிருந்து தரமான
சிறுகதை, கவிதை
ஆய்வுக் கட்டுரைகள்
அனைத்தும்:-
வரவேற்கப்படுகின்றன.

-ஆ.ர்-

மழை மேகத்தின் ஆக்கிரமிப்பினால் தான் மயில் நடனமிடுகிறது.

ஆக்கிரமிப்பினால், ஒருவனை அல்லது ஒரு ஜீவனை மயக்கி வைக்கவும் முடியும்; ஒடுக்கி வைக்கவும் முடியும்.

வசப்படுத்தி வைக்கவும் முடியும்: வாழ்க்கையிலிருந்து அகற்றவும் முடியும்.

இசையாலும், பேச்சாலும், பாசத்தாலும், எழுத்தாலும், உதவி செய்வதன் மூலமும் நாம் எவரையும் ஆக்கிரமிக்கலாம். இவற்றால் நர்மும் ஆக்கிரமிக்கப் படலாம்.

எனது பாடசாலைப் பருவத்தில் நான் ஒரு எழுத்தாளரால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தேன். இந்த உண்மையை வெளிப்படுத்துவதில் எனக்கு எந்தவிதமான வெட்க உணர்வும் ஏற்படாது.

என் நேசிப்பிற்குரிய அந்த எழுத்தாளர் தான் ஜெயகாந்தன்.

'ஒரு தேசத்தின், ஒரு நாகரீகத்தின், ஒரு காலத்தின், ஒரு வளர்ச்சியின், ஒரு வாழ்க்கையின் உரைகல் தான் இலக்கியம்' என்று அவர் குறிப்பிட்டிருந்ததை நான் என் சிந்தனைக் களஞ்சிய அறையுள் சேகரித்து வைத்திருக்கிறேன்.

இந்தக் கருத்திற்காக நான் அவரையும் அவர் விரல்களுக்குள் கட்டுப்பட்டு கிடக்கும் பேனாவையும் நினைத்துப் பிரமித்துப் போயிருக்கிறேன்.

அவரின் 'அக்கினிப் பிரவேசம்' அவளுக்காகவும், 'யாருக்காக அழுதான்?' அவனுக்காகவும் நான் அழுதிருக்கிறேன்.

'சில நேரங்களில் சில மனிதர்கள்' நாவலில் பிரபுவைத் தேடி, கங்காவுடன் கைகோர்த்துக் காடு மேடெல்லாம் அலைந்திருக்கிறேன்.

வாழ்க்கையின் முழு அர்த்தத்தையும் அவர் எழுத்துக்களின் ஈரத்தில் கண்டிருக்கின்றேன்.

நினைத்த விஷயத்தை சட்டென்று சொல்லும் நேர்மைத் தனத்தை நேசித்திருக்கின்றேன்.

'எழுதுபவனுக்கு எவ்வளவு பொறுப்பு உண்டோ, அவ்வளவு பொறுப்பு வாசிப்பவனுக்கும் வேண்டும்' என்ற அவரது கருத்தை நான் கனவுகளில் கூட ஆதரித்திருக்கிறேன்.

அவர் சிறுவயதில் 'பீடி' புகைத்ததிலிருந்து. நண்பனின் பூணூலை அறுத்துக் கொண்டு ஓடியதிலிருந்து அவரது அத்தனை குறும்புத்தனங்களையும் நான் அறிந்து ரசித்திருக்கிறேன்.

ஆனால் —

அண்மைக் காலத்தில் அவரது தப்பான பிரச்சாரத்தினால் - நான் மட்டுமல்ல; உலகத் தமிழினமே அவரைச் சுமந்து - போற்றி வைத்திருந்த இடத்திலிருந்து கீழே தள்ளிவிட்டது.

இதற்கான காரணம்,

தமிழீழப் போராட்டத்தைப் பற்றிய அவரது அவசரப் பிரச்சாரமே.

நிஜத்தை அறிந்து கொள்ளாமல் நீதியுரைப்பவன் முட்டாள்.

இந்தியப் படையால் ஈழத்தமிழினம் அழிந்துகொண்டிருந்த சமயம், இந்திய அரசின் ஆக்கிரமிப்பிற்கும், உயிர் அழிப்புக் கொள்கைக்கும் ஜெயகாந்தன் துதிபாடிக் கொண்டிருந்தார்.

நியாயத்தைப் பேசுவதாக எண்ணிக் கொண்டு, அநியாயத்திற்கு அவர் ஆதரவு தெரிவித்துக் கொண்டிருந்தார்.

ஜெயகாந்தன் அவர்களே!

அத்திபாரத்தின் பலத்தை அறிந்து கொள்ளாமல் கட்டிடத்தை கண்டிக்காதீர்கள்.

ஈழப் போராட்டம் என்பது ஒடுக்கப்பட்ட உயிர்களின் போராட்டம் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

தப்பான கருத்திற்கு அடிமையாகிக் கொள்வதைத் தவிர்த்து விடுங்கள்.

கனியின் பெயர் தெரியாமல் ருசிபார்க்க முனையாதீர்கள்.

'எழுத்தாளன் வஞ்சிக்கப்பட்டவர்களிடமும், தண்டிக்கப்பட்டவர்களிடமும் சபிக்கப்பட்டவர்களிடமும் குடிகொண்டுள்ள மனித ஆத்மாவை நாடிச் செல்கிறான்' என்று - நீங்களே ஒரு தடவை குறிப்பிட்டிருந்ததை நினைத்துப் பாருங்கள்.

காலம், உங்கள் கருத்துக்களை மாற்றி வைக்கும் என்று மனப்பூர்வமாக நம்புகிறேன்.

இன்னும்.......

எதிர்நோக்குகின்றனர். கிண்டிய கிணறுகளுக்கருகில் சிறு பயிர்கள் செய்யப்படுகின்றன. காலகண்டியில் குழந்தைகளுக்கும் முதியோர்களுக்கும் கர்ப்பிணிப் பெண்களுக்கும் உணவளிக்கும் திட்டம் ஓரளவு ஆறுதலைக் கொடுத்தது. உணவளிக்கும் திட்டத்தில் கோதுமையும் சர்க்கரையும் பருப்பும் கலந்த உணவு வழங்கப்படுகிறது. இத்திட்டம் போதியளவு நிவாரணம் வழங்குவதில்லை. உதாரணமாக போலிங்கா நகரில் முதியோரின் பட்டினி அப்பட்டமாகக் காணக் கூடியதாக உள்ளது.

கோரபுற் (Koroput) மாவட்டத்தில் பற்றாக்கி என்னும் கிராமத்தில் பட்டினியின் ஒவ்வொரு அம்சத்தையும் காணக் கூடியதாக இருக்கின்றது. அங்கு வசிப்பவர்களில் 50% ஆதி வாசிகளாவர். இங்கு பிரதானமாக நெல்லும் சிறு பயிர்களும் செய்யப்படுகின்றன. பயிர்கள் முற்றாக வரட்சியினால் அழிவுற்றன. தோண்டப்பட்டுள்ள 200 கிணறுகளுக்கருகில் சிறு சிறு பயிர்கள் மட்டும் வளர்க்கப்படுகின்றன. இரு பத்திரிகையாளர்கள் இவ் இடத்திற்கு விஜயம் செய்த ஐந்து மணிக்குத்தான் அன்றைய முதலாவது உணவை உண்டார்.

பின்னர் பத்திரிகையாளர்கள் சஞ்சலா என்னும் பிள்ளைகள் இல்லாத வயோதிப மாதுவைக் கண்டனர். அவரின் கணவருக்கு வயது சென்றதால் வேலைக்குச் செல்ல முடியவில்லை. அப் பெண்ணுக்கு வேலை கிடைத்ததால் ஐந்து ரூபா மட்டும் சம்பளமாகக் கிடைக்கும். சாப்பிடுவதற்கு அவர்களுக்கு உணவு இல்லை உணவு வழங்கும் திட்டத்தில் குழந்தைகளுக்கே உணவு போதாது எப்படி அவர்களால் எங்களுக்கு வழங்க முடியும்? என அவள் நிருபர்களிடம் வினாவினாள்.

இன்னுமொருவர் சரியான உணவு இல்லாமையால் வேலை செய்ய சக்தி இல்லாமல் கடந்த எட்டு நாட்களாக காய்ச்சலில் படுக்கையாகப் படுத்திருந்தார். பற்றாக் காய் (Fataki) என்னும் கிராமத்தில் ஆதி வாசியின் குடிசையின் வாயிலில் இன்னுமொரு பெண் மரணப்படுக்கையில் படுத்திருந்தாள். பக்கவாட்டாய்ப் படுத்திருக்கும் பொழுது அவளின் விலா

ருந்தன. குடிசை மிகவும் சுத்தமாக இருந்தது அடுப்பின் மீது நீர்ப்பானைகள் மட்டுமிருந்தன. ஒரு உணவுப் பொருட்களையும் குடிசையில் காணமுடியவில்லை. மூச்சு விடும் பொழுது குடிசை வாசியின் விலா எலும்புகள் மேலும் கீழும் அசைவது தெரிந்தது. குழி விழுந்த இரு கண்களால் இரு பத்திரிகையாளர்களையும் பார்வையிட்டாள். வெள்ளைச் சேலையிலிருந்து அவளின் காலெலும்புகள் வெளித் தெரிந்தன. அருகிலிருந்த பெண்ணுடன் கதைப்பதற்குக் கூடசக்தி அற்று மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கிக் கொண்டிருந்தாள்.

பற்றாக் நகரில் பட்டினியின் கோலம் அவர்களை அதிர்ச்சியுறச் செய்தது. வரட்சியினால் ஏற்பட்டுள்ள வறுமை என்பதைத் வெளிவாகக் காட்டியது

□

ஆங்கில மூலம்:-

**FRONT-LINE**

ஏப்ரல் 29- மே 12 1986

தமிழில்:- வி. வி. பிள்ளை

உடலுளம் நொந்த அகதிகள் தம்மை
ஊருக்கனுப்பிடவே
கடல் வழி கப்பலும், ககனவூர்தியும்
காவின, பாரதமும்
கடல்வழி செல்ல 'கப்பல் சிதம்பரம்'
கரிசனை யோடனுப்பி
உடன் பிறப்பென்ற உணர்வினைத் தமிழர்க்
கூட்டினர் அத்தினத்தில்

நொந்திடு தமிழர் நோவினை நீக்கி
நேசக்கரம் நீட்ட
இந்தியா என்றும் எங்களோடென்ற
எண்ணம் வலுப்பெற்று
அந்திய வெற்றி அடைந்திட பாரதம்
அளித்திடும் கரம் என்ற
பிந்திய நினைவு பிறந்தது அதுவும்
பின்னர் பொய்யாச்சு


இலங்கையில் எங்கள் இடரது போக்க
ஏழுகோடித் தமிழர்
பலங்குன்றாத பாரத நாட்டில்
பக்கத்துணை என்றோம்
நலன்களைப் பேணி நம்மிடர் போக்கும்
நடு நிலை நின்றென்றே
கலங்கரை போன்று தமிழகம் தன்னை
கண்டோம் தமிழ் மாந்தர்

காந்தி நாட்டின் கைகள் காக்கும்
கட்டித் தழுவி இடர்
ஏந்தித் தீர்க்கும் என்றே நாங்கள்
எண்ணித் துணிந்திருந்தோம்
சாந்தி வேண்டி சரண் எனக்கூறி
சமுத்திரம் தனில் பாய்ந்து
நீந்தித் தானும் நீழ் கடல் தாண்ட
நினைத்தார் எம்மக்கள்

இடும்பை நீங்கும் இந்தியா ஏகில்
என்ற நினைவுடனே
குடும்பம் குடும்பமாகச் சென்று
குவிந்தார் அம்மண்ணில்
படுந்துயர் போக்கப் பாரதம் செய்த
பரிவுப சாரத்தால்
கடுந்துயர் வேளை கைவிடாதென்ற
கருத்தை வளர்த்ததுவே.

- தொடரும்

## மெயில் வாகனத்தார்




கடந்த வாரம் வெளியீட்டு விழா நடந்த சிரித்திரன் சித்திரக் கொத்து நூலிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு கருத்துச் சித்திரம் இது. சிரித்திரன் சுந்தரின் தூரிகையில் உருவான மறக்கமுடியாத பாத்திரங்களில் 'மெயில் வாகனத்தார்' மறக்கமுடியாத ஒருவர்.


## மூன்று விடயங்கள்

□ சிலருக்கு அடிக்கடி விக்கல் ஏற்பட்டுத் துன்பப்படுவார்கள். இவர்கள் வெள்ளாட்டுப்பாலில் இஞ்சிச் சாற்றைக் கலந்து சாப்பிட்டு வந்தால் நல்லது. அந்த விக்கல் தொந்தரவு அடியோடு நின்றுவிடும்.

□ நட்பின் இனிமையிலே நகையும், மகிழ்வைப் பகிர்ந்துகொள்ளுதலும் நிலவட்டும்.

□ எறும்பு தன் எடைபோல மூன்று பங்கைத் தூக்கக்கூடியது.

உளவியல்



# மடந்தைப் பருவத்தினரும் அவர்களது நடத்தைக்கோலங்களும் சமுதாயப் பொறுப்புக்களும்

காலத்திற்கேற்ப சூழலும், கருத்தும் மாறுபடும் இவ்வேளையில், திட்டமிட்ட ஆரோக்கியமான சமூக அமைப்பொன்றை உருவாக்குவதில் ஆர்வத்தோடு பலரும் முயன்று வரும் இச்சந்தர்ப்பத்தில் அதற்கு அவசியமான அலகுகளாகிய இளைஞர் சமூகம் பற்றிச் சில உளவியல் ரீதியான தகவல்களை அறிந்து கொள்வது அவசியம். கால தேச வர்த்தமானங்களுக்கு ஏற்ப நிகழும் மாற்றங்களை உடன்பாடாகவும் எதிர்மறையாகவும் எதிர்நோக்கும் இயல்பு கொண்ட இளைஞர்களையும் அவர்களின் நடத்தைக்கோலங்களையும் இனங்காண்பது எளிதன்று. முரண்பாடுகள் நிறைந்த பருவம் என உளவியலாளர்களால் வர்ணிக்கப்படும் கட்டிளமைப்பருவத்தையும் அப்பருவத்துக்குரிய உந்தல்களையும் மனவெழுச்சிகளையும் நடத்தைக்கோலங்களையும் இங்கு நோக்குவோம்.

இப்பருத்தை முன்கட்டிளமைப்பருவம், கட்டிளமைப் பருவம் என இரண்டாக வகுத்தே பல உளவியலாளர்கள் ஆராய்ந்துள்ளனர் பிறழ்வுகள், கல்வி உளவியலாளர்கள், சமூக உளவியலாளர்கள் இவ்வாய்வில் அதிகளவு பங்கினைப் பெறுகின்றனர். ஒன்பது வயது முதல் பதினொன்று - பதின்மூன்று வயதுவரை உள்ள காலப்பகுதியை முன் பருவம் எனவும், பதின்மூன்று பதின்னான்குவயதிலிருந்துபத்தொன்பது- இருபத்தியொரு வயதுவரை உள்ள காலப்பகுதியைப் பின் பருவம் என்றும் கொள்வர். இவ்வயதெல்லை முன் பின் சிறிதுமாறலாம். அமெரிக்க, பிரித்தானிய, ஜேர்மனிய உளவியலாளர்களின் கருத்துக்களிலேயே வேறுபாடுகள் காணப்படுகின்றன. நமது நாட்டின் பல்வேறுகாரணிகளுக்கேற்ப இவ்வயதெல்

இன்று இப்பணியில் முயன்று வருகின்றனர்.

குமரப்பருவத்தினர், கட்டிளமைப்பருவத்தினர், இளைஞர் பருவத்தினர், மடந்தைப் பருவத்தினர் எனப் பலவாறு அழைக்கப்படும் இப்பருவத்துக்குரியவர்களை உளவியலாளர்கள் பலவாறு வர்ணித்துள்ளார்கள் முகமூடிப்பருவத்தினர் என ஒரு உளவியலாளர் குறியச்குட் லெவின் என்ற உளவியலாளர் இப்பருத்தை தெளிவற்ற ஒரு நிலைக்கு ஒப்பிடுகின்றார். சில போது குழந்தை போலவும் சிலபோது முதிர்ச்சி பெற்றோரைப் போன்றும் செயற்படுவர். மனவெழுச்சி வெளிப்பாட்டிலும் இதைக் காணலாம். தன்னலமிக்கவராகவும், ஓர் இலட்சியவாதிபோலவும் செயற்படுவர். சிலவேளைகளில் தளர் நோக்குடன் காணப்படுவர், அதேவேளை உடனடியாகத் தளரா நோக்குடன் செயற்படுவதையும் காணலாம். பொதுவாக முன்பருவத்தினரில் அதிகமாகக் காணப்படும் இவ்வியல்பு காலம் செல்லச் செல்லப் பல்வேறு அனுபவங்கள் வந்தடையும் போது அந் நடத்தை வெளிப்பாடுகளில் முதிர்ச்சி காணப்டடும். பின் பருவம் உளம் விழிப்போடிருக்கும் பருவம் என மஸ்லோ குறிப்பிடுகின்றார். பௌர்பி என்பாரின் கருத்துப்படி காரணகாரிய ரீதியாகத் தொடர்புகளைப் புரிந்து கொள்ளும் பருவமாகும். தர்க்கரீதியான அணுகுமுறையும், பகுத்தறிவு ரீதியாகச் சூழலை ஏற்றுக் கொள்ளும் திறனும் உடைய பருவமாகும். தன் உடல் வளர்ச்சியில் ஆர்வத்தோடு அக்கறை காட்டும் பருவம், உடல் வளர்ச்சிக்கு ஏற்ப நிறைய உண்ணவிரும்பும் பருவமாகவும் காணப்படும் இப்பருவத்தில் தான் பெற்றோரின் கட்டுப்பாடுகள் அவர்களின் மனப்பான்மையில் மாற்றத்தை ஏற்படுத்தும், பெற்றோர், ஆசிரியர் போன்றோரின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு தமது நண்பர்களின் ஆதிக்கத்துக்குட்பட விரும்புவர். சமூகத்தின் சம்பிரதாயங்கள், ஒழுக்கங்கள். மரபுகள், கலாசாரங்கள், மீளாய்வு

இவைகள். இதனையே 'புதியனவிளைதலும், பழையன உராய்தலும்' எனச் சித்தர் ஒருவர் பாடினார். சிறிது அவதானித்துப்பாருங்கள். வாழ்வின் புதிய சிந்தனைகளுக்கு வித்திடுபவர்களாக இருப்பர். தம் இயல்போடு ஒத்துப் போபவர்களைச் சேர்த்துக் குழுக்களாக இயங்குவர். சகபாடிகளுக்கிடையே விட்டுக் கொடுத்தல், உரிமைகளைச் சமமாகப்பகிர்ந்தளித்தல் தாராளமனப்பாங்கு என்பன அங்கு காணப்படும். தம்மைக் கட்டுப்படுத்துவதை, மேற்பார்வை செய்வதை விரும்பார்கள். தமது சதந்திரத்தைப் பாதிக்கும் எந்தநிலைகளையும் ஏற்க விரும்பமாட்டார்கள். இத்தகைய பருவத்தைப் பக்குவமாய் வெல்வது பெற்றோரினதும், ஆசிரியர்களினதும், அயலவர்களினதும் திறனிற்தான் தங்கியுள்ளது. இத்திறன் உளநூல்களைக் கற்பதால் ஏற்படும் என்பதல்ல. கற்றவர்களினால்தான் இது சாத்தியமாகும் என்பதுமல்ல. காலமாற்றங்களையும் அதன் தாக்கங்களையும் இயல்பாகப் புரிந்துகொண்டு சிறிது விட்டுக்கொடுத்து நிதானமாக வழிநடத்தக்கூடிய எல்லோராலும் இப்பருவத்தை வெல்ல முடியும், எம்மைச் சூழ நாம் தரிசிக்கின்ற பல கட்டிளமைப் பருவத்தினர், கல்லூரிகளிலும், கல்வி நிறுவனங்களிலும், பொதுவிடங்களிலும் சந்திக்கின்ற இளைஞர்கள் கல்வி அறிவைப் பூரணமாகப்பெற்ற குடும்பத்தில் பிறந்தவர்கள்அல்ல. பலருக்கு ஞாபகமிருக்கலாம் யாழ்ப்பாணத்தில் நடந்த உலகத் தமிழ் மகாநாட்டில் அன்று இரவு நடந்த அனர்த்தங்களின்போது ஓடிச் சிதறுண்ட, வீழ்ந்த, வழிதெரியாதுபிரிந்து தவித்த பெண்களையும், குழந்தைகளையும், பெற்றோரையும், சகோதரங்களையும், அணைத்து, ஆறுதல்கூறி, ஓடித்திரிந்து உரியவரிடம் ஒப்படைத்து, வீழ்ந்தவர்களைக் காயப்பட்டவர்களைத் தூக்கி, துடைத்து, தெம்புகூறி அவர்களை அவர்கள் போகுமிடத்துக்கு வழிகாட்டி, அழைத்துச் சென்றும் விட்டவர்கள் இக்கட்டிளமைப் பருவத்

தையைக் கண்டவர்கள். தமது குழந்தைகள் எதிர்காலத்தில் நல்ல முயற்சியுள்ள மனிதர்களாக உலாவ வேண்டும் என்ற ஆசையை நெஞ்சு நிறைய வைத்துக் கஞ்சியூட்டி வளர்த்தவர்கள். வறுமையிலும் பிள்ளைகளை வளர்ப்பதில் சில நெறிகளைக் கடைப்பிடித்தவர்கள். கடும் உடல் உழைப்பின் அசதியால் பனங்கள்ளைக் குடித்துவிட்டுப் பிள்ளைகள் கண்டு விடக்கூடாது என்பதற்காகத் தமது தோட்டங்களில் பொழுதைக் கழித்துவிட்டு வரும் பெற்றோர்கள் எமக்குப் புதிதல்ல எத்தனை வயதானாலும் தந்தைக்கு முன் தோளில் சால்வை போடமாட்டார்கள் நேரே சுருட்டுப்பற்ற மாட்டார்கள், அப்பு அம்மானுக்கு முன் உரத்துப் பேச மாட்டார்கள், சட்டம்பிமாரைக் கண்டால் தூரத்தே வழிவிட்டு ஒதுங்கி நிற்பார்கள் வயதுக்குரிய மரியாதையை மனமொப்ப அளிப்பார்கள். இத்தகைய மாதா பிதா தெய்வத்தின் கருக்களாகப்பிறந்த இளைஞர்கள் பலர் இருந்தார்கள் நான் கூறிய சம்பவங்களில் கூடிப் பிறந்த சகோதரங்கள் போல் உதவியவர்கள் இத்தகையை வழித்தோன்றல்களே. இன்றைய சாலமாற்றத்தில் முன்னையோர்களின் ஒழுக்கநடத்தைகள் அர்த்தமற்ற கோலங்களாகப் படலாம். பலருக்குத் தோன்றலாம் ஆனால் நாம் நமக்குமுன் நடந்த சில உண்மைகளை மறந்து விடக்கூடாது. இத்தனை கொலைவெறிக்கும், குண்டுவீச்சுக்கும் செல்லடிக்கும் பின், ஈழத் தமிழினம் தலை நிமிர்ந்து நிற்பதற்கும், பட்டதுயரத்தை மறந்திட்டு மீண்டும் பயிர்க்களம் நோக்கியும், கடற்பரப்பின் மீதும், கொழுபபுக்கடைச் சரக்கேற்றவும், புறப்பட்டு விட்டனர் என்றால் இத்துணிவும் பொறுமையும் எப்படிவந்தது, உயர்ந்த இலட்சியத்துக்காக மேருமலையோடு மோதிய பின்னும், துணிவோடு சுதந்திரக்குரல் எழுப்புவதற்கும், ஒன்றுபடுவோம், ஒற்றுமையாகச் செயற்படுவோம் திட்டமிடு

தாக்கங்களால் எமதுபண்பாட்டு, ஒழுக்கக், கலாசாரங்களுக்குப் பொருந்தாத சீமைக்கோலங்களை எமது முற்றத்தில் கீறி அழகுபார்க்கக் கூடாது. பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கலவகையினானே எனக் கூறப்படுவதின் அர்த்தத்தை இளைஞர்கள் புரிந்து கொள்ள வேண்டும். இப்பருவத்துக்குரிய பல இயல்பான தூண்டல்கள் உள அவற்றை எளிதாக வயப்படுத்துவதன் மூலம் ஆரோக்கியமற்ற சமுதாயத்தை உருவாக்கிவிடும் எந்த அம்சங்களையும் நுளைய விடக் கூடாது. வீரமும் விவேகமும் கொண்ட சமுதாயம் ஒன்றை எதிர்காலத்துக்களிக்கும் பொறுப்பு ஒவ்வொருவருக்குமுரியது பெற்றோர், ஆசிரியர், அயலவர் அனைவருக்கும் இருக்கும் முக்கிய சடமை இதுவாகும். நாமே நமது விடுதலைப் போராட்டத்திற்கு குழிதோண்டக் கூடாது மனிதனுடைய அறியாமை என்பது பலகாரணிகளால் மறைக்கப்பட்டிருக்கும். நாம் இன்று சரி என நினைப்பது எமது வாழ்நாளிலேயே பிழையாகி விடுவதைக் காண்கின்றோம். அதனால் இளைஞர்களை நற்பிரசைகளாக உருவாக்கி விடுவதில் நாம் விழிப்போடு இருத்தல் அவசியம்.

இப்பருவத்தினரை நெறிப்படுத்துவதில் முழு வெற்றி பெறுவதற்கான வழிகளைப் பல உளவியலாளர்கள் ஆராய்ந்துள்ளனர். வயதும் முதிர்ச்சியும், உடற்பண்புகளும் மாற்றங்களும் சமூகப் பண்புகளும் அதன்தாக்கங்களும் -வெளிப்பாடுகளும், மனவெழுச்சிப்பண்புகளும் அவற்றின் வெளிப்பாடுகளும், அறிதல்திறனும் அதன் அவசியமும் என ஐந்து கூறுகளாகப் பிரித்து இயல்புகளையும் நிலைகளையும், தேவைகளையும் ஆராய்ந்துள்ளனர். முன் பருவத்தினரிடம் உடல் வளர்ச்சியில் தீவிரம் காணப்படும் தன் தோற்றம் பற்றி பல்வேறு எண்ணங்கள், கவலைகள் எழும் பாய் முதிர்ச்சி எழுதல் உண்மையை அறியாத அதன் மன குழப்பங்கள்காணப்படும்சமூகப்பண்புகளில் குழு ஆதிக்கம் காணப்படும் பெற்றோரை விடச் சகபாடிகளின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பர். இச் சமூக முதிர்ச்சியில் பெண்களது சமூக முதிர்ச்சி ஆண்களிலும் பார்க்க மேற்பட்டுக்காணப்படும். பொதுவாக் நட்பும் பூசலும் வலுப் பெற்றத் தொடங்குகின்றன. மனவெழுச்சி இப்பருவத்தில் மேல்

வம்காட்டுவர். அதனால் அரசியல், பொருளாதாரச், சமய விடயங்களில் தீவிரப்பற்றுடையவர்கள் என்று தெளிவில்லாத தள நிலையிலிருந்து செயற்படுவர். இத்தகைய நடத்தைக் கோலங்கள் பின் பருவத்தில் முதிர்ச்சி பெறும். பொதுவாகப் பதினைந்து வயதிலிருந்து இருபது வயது வரை உள்ள இளைஞர்களை அவதானித்துப் பாருங்கள். பெற்றோருக்கும், ஆசிரியர்களுக்கும் திருபதியையும் மறுபக்கம் பாரிய பொறுப்பையும் உணாத்தும் பருவம் இது. உடல் மன முதிர்ச்சி நிலையை அடைவதால், குடும்ப நிலை, பராமரிப்பு, கல்வி, சகபாடிகளின் நிலை, சூழல், மதப்பற்று, போன்ற காரணிகளைப் பொறுத்து சமூக அலகுகள். உருவாகலாம்.

துவங்களை, இனங் காண்பதில் வேகமும், ஆராய்சியும் காணப்படும். அதே வேளை போதிய அறிவு அனுபவமின்மையால் குழு நிலை விருப்பத்தைத் தெரிவு செய்ய விரும்புவார், பின் தன்னிலை சரியோ எனக் குழம்புவார். இத்தகைய சந்தர்ப்பத்தில் தந்தை, தமையன், தாய், தமக்கை, ஆசிரியர் போன்றோரின் வழியைப் பின்பற்ற விரும்புவர், அவர்கள் சரியாக தமக்கு வழி காட்டவில்லை என்று சினப்பர் காட்டுவதாகத் திருப்தியுறுவர். இவ்வாறு பல நடத்தைக் கோலங்களை இனங் காணலாம். இவை அவரவர் குடும்ப, சூழ்நிலைக்கு ஏற்ப தனியார் வேறுபாட்டைக் கொண்டிருக்கும். பியாஜே, புருனர் போன்றோ

வே. புகபாலசிங்கம் B.A. (Hons)Cey. Dip in Ed.

ஆளுமை நுண்ணறிவு. போன்றவற்றின் வெளிப்பாடுகளைத் தெளிவாக இனங்காணலாம். பால உந்தல் பற்றிய தெளிவுஏற்பட்டிருப்பது போன்ற தெம்பு நிலை காணப்படும். எனினும் போதிய தெளிவின்மையால் அதை அறியும் நாட்டம் காணப்படும், சூழல் நிலைக்கு ஏற்ப அதிற் செயற்படுந் திறனையும் வளர்ப்பர். தன்னைப்பற்றிய உணர்வும் கூச்சமும் காணப்படும். சமூகப் பண்புகளில் தெளிவு ஓரளவு இருக்கும் குழு ஆதிக்கம் பிறர் போல் நடக்க ஆர்வம், கவர்ச்சியில் விருப்பம், அதே வேளை ஏனைய காரணித் தாக்கங்களால் இவற்றில் கட்டுப்பாடுகளைத் தாமே வரித்துக் கொள்வர். மனவெழுச்சிப் பண்புகளில் தீவிரப் போராட்டம் காணப்படும். பெற்றோரும், அயலவரும் தமது சுதந்திர எண்ணங்களுக்கு தடை போடுவதாக முரண்படுவர். எதையோ இழந்து விட்டோமா, பறிகொடுத்து விட்டோமா என்ற வினா மனதில் எழ எதிலோ கவனம் போல் இருப்பர். இதிலும் ஏனைய சமூகக்காரணிகளைப் பொறுத்து முதிர்ச்சியும் காணப்படும். அறிதல் திறனில் முதிர்ச்சியடைந்தாலும் போதிய அனுபவமின்மையால் கொள்கையில் தெளிவும் தெளிவின்மையும் காணப்படுவர், முதிர்ச்சி பெற்றவர் போலவும் சில விடயத்தில் குழந்தை போலவும் தொழிற்

ரின் கருத்துக்கள் மட்டுமன்றி பலசமூக உளவியலாளர்களின் கருத்துக்களும் இவ்விடயத்தில் உடன்பாடாக அமைகின்றன.

இவற்றைப் பெற்றோரும், ஆசிரியர்களும் அறிந்து கொள்வது அவசியம் எமது செல்வங்களை பட்டை தீட்டி அழகு பார்க்க வேண்டியவர்கள் நாமே. பட்டை தீட்டுவதாக நினைத்துக் கொண்டு அவர்களை உடைத்து விடவோ உருக்குலைத்து விடவோ கூடாது. அன்றோ எமக்கு முன்னால் எதிர்நோக்கியிருக்கும் முக்கிய தேவைகளை இவர்கள்மூலமே நிறைவு செய்ய இருக்கின்றோம். எமது ஒற்றுமையின்மையாலும் தெளிவான வழிகாட்டல் இல்லாமையினாலும் நாம்இழந்திட்ட பெரும் செல்வங்கள எவ்வளவு தியாக வேள்வியில் தீக்குளித்த தியாகசீலர் எத்தனை, திட்டமிட்டு உருவாக்கிய எத்தனை தூண்களை அநியாயமாகச் சாவு கொடுத்து விட்டோம். எனியும் இந்நிலை தொடரக் கூடாது. அதனால் நம்மவர்கள், கற்றவர்கள், பல்வேறு அனுபவங்களைப் பெற்றவர்கள் சட்டிளமைப்பருவத்தினருக்குநல்வழிகாட்டமுயன்றிட வேண்டும். எமது பண்டைய மரபு கூறும் ஆடவர்க்குரிய குணங்களாகிய அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி போன்றவற்றை இவர்கள் பெற்றிட உதவிடல் நம்கடனே. சான்




## நிஜத்தை அறிந்து நீதியுரை!

விரிந்து கிடக்கும் இந்த விசாலமான உலகத்தில் பல கோடிக்கணக்கான மனிதர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்த மனிதர்கள் அனைவரும் ஏதோ ஒரு விதத்தில் யாராலும், எதாலும் ஆக்கிரமிக்கப்பட்டுக் கொண்டேயிருக்கிறார்கள்.

ஒரு மன்னனால் மக்கள் ஆக்கிரமிக்கப்படுவதைப் போல, ஒரு கொள்கையில் பிடிப்பு வைத்துள்ளோம் என்ற கருத்தின் அடிப்படையில் மனசுகள் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதைப் போல —

ஆக்கிரமிப்பு அத்தனை மனிதனுள்ளும் இடம் பெற்றுக் கொண்டேயிருக்கிறது.

மோசமான அன்பு கூட ஒருவித ஆக்கிரமிப்புத்தான் என்று யாரோ குறிப்பிட்டிருப்பது என் நினைவு வானத்தில் நீந்திக் கொண்டிருக்கிறது.

மகுடியின் ஆக்கிரமிப்பினால் தான் நாகம் ஆடுகிறது.

மழை மேகத்தின் ஆக்கிரமிப்பினால் தான் மயில் நடனமிடுகிறது.

ஆக்கிரமிப்பினால், ஒருவனை அல்லது ஒரு ஜீவனை மயக்கி வைக்கவும் முடியும்; ஒடுக்கி வைக்கவும் முடியும்.

வசப்படுத்தி வைக்கவும் முடியும்: வாழ்க்கையிலிருந்து அகற்றவும் முடியும்.

இசையாலும், பேச்சாலும், பாசத்தாலும், எழுத்தாலும், உதவி செய்வதன் மூலமும் நாம் எவரையும் ஆக்கிரமிக்கலாம். இவற்றால் நர்மும் ஆக்கிரமிக்கப்படலாம்.

எனது பாடசாலைப் பருவத்தில் நான் ஒரு எழுத்தாளரால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தேன். இந்த உண்மையை வெளிப்படுத்துவதில் எனக்கு எந்தவிதமான வெட்க உணர்வும் ஏற்படாது.

என் நேசிப்பிற்குரிய அந்த எழுத்தாளர் தான் ஜெயகாந்தன்.

'ஒரு தேசத்தின், ஒரு நாகரீகத்தின், ஒரு காலத்தின், ஒரு வளர்ச்சியின், ஒரு வாழ்க்கையின் உரைகல் தான் இலக்கியம்' என்று அவர் குறிப்பிட்டிருந்ததை நான் என் சிந்தனைக் களஞ்சிய அறையுள் சேகரித்து வைத்திருக்கிறேன்.

இந்தக் கருத்திற்காக நான் அவரையும் அவர் விரல்களுக்குள் கட்டுப்பட்டு கிடக்கும் பேனாவையும் நினைத்துப் பிரமிக்குப் போயிருக்கிறேன்.

## ஒரிஸா ஒரு கண்ணோட்டம்

ஒரிசாவில் பசி என்பது மிகவும் சாதாரணமானது. மேலும் நூற்றுக்கணக்கானவர்கள் பட்டினியால் இறந்ததாக கால கண்டி வொலன்கீர் ஆகியவற்றின் காங்கிரசல்லாத எம். எல் ஏக்கள் குரல் எழுப்பினர். இதை மருத்துவ ரீதியாக நிரூபிக்க முடியாததால் கட்டுக் கதை என அரசாங்கம் மறுத்தது மேற்கு ஒரிசா பசி பட்டினியை நோக்கி சென்று கொண்டிருந்தது. தொடர்ச்சியான உணவு இன்மையால் உடம்பில் நோயெதிர்ப்பு சக்தி குறைந்து நோய்களுக்கு ஆளாகி இறப்பை நோக்கி மக்கள் சென்று கொண்டிருக்கின்றனர்.

கோரபுற், கால கண்டி பொலங்கீர் ஆகிய இடங்களில் இவ் உண்மைகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. பத்திரிகையாளரின் ஆய்வுப்படி வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ள இடங்களில் வேலையின்மையும் பசியும் உணவு இல்லாமையால் நோயும் வாட்டுகிறது. பொதுவாக போசாக்கின்மை பொருளாதாரத்தின் அடிமட்டத்திலுள்ள ஆதிவாசிகளையும் ஹரிசனங்களையும் பீடித்துள்ளது. பட்டினியால் நேரிடும் இறப்பு முதியோர்கள் மத்தியில் மிகவும் சர்வசாதாரணமானது. வரட்சியால் விவசாயிகள் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டனர். வேலையின்மை தலைதூக்கித் தாண்டவமாடுகிறது. அதனால் மக்கள் பட்டினியை எதிர்நோக்குகின்றனர். கிண்டிய கிணறுகளுக்கருகில் சிறு பயிர்கள் செய்யப்படுகின்றன. காலகண்டியில் குழந்தைகளுக்கும் முதியோர்களுக்கும் கர்ப்பிணிப் பெண்களுக்கும் உணவளிக்கும் திட்டம் ஓரளவு ஆறுதலைக் கொடுத்தது. உணவளிக்கும் திட்டத்தில் கோதுமையும் சர்க்கரையும் பருப்பும் கலந்த உணவு வழங்கப்படுகிறது. இத்திட்டம் போதியளவு நிவாரணம் வழங்குவதில்லை. உதராணமாக போலிங்கா நகரில் முதியோரின் பட்டினி அப்பட்டமாகக் காணக் கூடியதாக உள்ளது.

கோரபுற் (Koroput) மாவட்டத்தில் பற்றாக்கி என்னும் கிராமத்தில் பட்டினியின் ஒவ்வொரு அம்சத்தையும் காணக் கூடியதாக இருக்கின்றது. அங்கு வசிப்பவர்களில் 50% ஆதி வாசிகளாவர். இங்கு

னர். இரு அந்நியர்களை கண்டதும் ஆதி வாசிகளும் ஹரிசனங்களும் அவர்களைச் சூழ்ந்து கொண்டனர். எங்கள் குடிசைக்கு வாருங்கள் வெறும் கலயங்களைக் காணுங்கள் என்றனர். அவர்களின் எலும்பு தெரியும் கன்னங்களையும் விலா எலும்புக் கூட்டையும் ஒட்டி உலர்ந்த வயிற்றையும் அவர்களின் சிரிப்பால் மறைக்க முடியவில்லை.

திரியோதன் என்னும் ஹரிசனருக்கு 20 வயது இருக்கலாம். இவர் மூன்று பிள்ளைகளின் தந்தை போலியோ நோயால் பீடிக்கப்பட்டவர் மனைவியும் மன நோயாளர் இவருக்கு உதவும் தந்தை மத்திய பிரதேசத்துக்குச் சென்று வேலை செய்கிறார். நான்கு நாட்களுக்கு முன் அவர் இருபது ரூபா மகனுக்குக் கொடுத்தார். திரியோதனின் தந்தை அன்று மாலை ஐந்து மணிக்குத்தான் அன்றைய முதலாவது உணவை உண்டார்.

பின்னர் பத்திரிகையாளர்கள் சஞ்சலா என்னும் பிள்ளைகள் இல்லாத வயோதிப மாதுவைக் கண்டனர். அவரின் கணவருக்கு வயது சென்றதால் வேலைக்குச் செல்ல முடியவில்லை. அப் பெண்ணுக்கு வேலை கிடைத்ததால் ஐந்து ரூபா மட்டும் சம்பளமாகக் கிடைக்கும். சாப்பிடுவதற்கு அவர்களுக்கு உணவு இல்லை உணவு வழங்கும் திட்டத்தில் குழந்தைகளுக்கே உணவு போதாது எப்படி அவர்களால் எங்களுக்கு வழங்க முடியும்? என அவள் நிருபர்களிடம் வினாவினாள்.

இன்னுமொருவர் சரியான உணவு இல்லாமையால் வேலை செய்ய சக்தி இல்லாமல் கடந்த எட்டு நாட்களாக

எலும்புக்கூடு மேலும் கீழும் அசைந்த வண்ணமிருந்தது. பக்கத்துக் குடிசையில் அவளின் மகன் கோபி வசிக்கின்றான். அவன் காட்டுக்குள் சென்று ஒருவகைப் புல்லை எடுத்து விளக்குமாறு செய்து விற்கின்றான். இதனால் வருமானம் கிழமைக்கு ஒரு முறையோ இரு முறையோ ஐந்து ரூபாய் மட்டும் கிடைக்கும் என்று அவன் கூறினான். தாய்க்கு இந்த மாதிரியாகவே வருத்தம் ஒருமாதமாக இருக்கிறது. சென்ற கிழமை தொடக்கம் சத்தியும் வயிற்றோட்டமாகவும் இருக்கிறது. நாங்கள் என்ன செய்வது எனப் பரிதாபமாகக் கேட்டான்.

இன்னும் நிலமுள்ள ஆதி வாசியின் குடிசைக்கு நிருபர்கள் வந்தனர். அக்குடிசை வாசியின் பயிர்கள் முற்றாக வரட்சியால் பாதிக்கப்பட்டிருந்தன. குடிசை மிகவும் சுத்தமாக இருந்தது அடுப்பின் மீது நீர்ப்பானைகள் மட்டுமிருந்தன. ஒரு உணவுப் பொருட்களையும் குடிசையில் காணமுடியவில்லை. மூச்சு விடும் பொழுது குடிசை வாசியின் விலா எலும்புகள் மேலும் கீழும் அசைவது தெரிந்தது. குழி விழுந்த இரு கண்களால் இரு பத்திரிகையாளர்களையும் பார்வையிட்டாள். வெள்ளைச் சேலையிலிருந்து அவளின் காலெலும்புகள் வெளித் தெரிந்தன. அருகிலிருந்த பெண்ணுடன் கதைப்பதற்குக் கூடசக்தி அற்று மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கிக் கொண்டிருந்தாள்.

பற்றாக் நகரில் பட்டினியின் கோலம் அவர்களை அதிர்ச்சியுறச் செய்தது. வரட்சியினால் ஏற்பட்டுள்ள வறுமை என்பதைத் வெளிவாகக் காட்டியது

ஒரிசாமாநிலம் கிழக்கே வங்காள விரிகுடாவையும் வடக்கே மேற்கு வங்காள மாநிலத்தையும் தெற்கே ஆந்திர மாநிலத்தையும் மேற்கே மத்தியப் பிரதேசத்தையும் எல்லையாக கொண்டதாகும். இதன் பரப்பளவு 155,707 கிலோமீட்டர் ஆகும். இம்மாநிலத்தின் குடித்தொகை 26,370,271 ஆகும். புவனேஸ்வர் இம்மானிலத்தின் தலைநகரம் என்பதும் குறிப்பிடத்தக்கது.



## பாரதச்சுவடுகள்

--- பாப்பாணன்

(10)

சாதிப்பெருமை யாவும் போச்சு
சமத்துவம் நிலவியது
வேதியர் என்ன வேற்றவர் என்ன
வேடம் ஒன்றாச்சு
ஆதிப் பெருமை பேசிய தமிழன்
அகதிகள் என்றாச்சு
பாதிப் பிணமாய், பரம்பரை பெருமைப்
பவிசும் இழந்தாச்சு

சாத்திரம், சகுனம் பார்த்தவரெல்லாம்
சகலதும் பொய்த்துணர்ந்தார்.
கோத்திரப் பெருமை குலத்தின் மகிமை
கூறுதல் விட்டொழிந்தார்
ஆத்திரம் மட்டும் அவர்தம் நெஞ்சில்
அகதி முகாம்களிலே
நேத்திரம் சொட்டும் நீர்த்துளியோடு
நெஞ்சு கலங்கலுற்றார்

தரையில் படுத்து தனித்துவம் விடுத்து
தரத்தில் ஒன்றானார்
நிரையில் நின்று நீர் பெற்றுண்ணும்
நிலைமைக் காளானார்
நரையில் மூத்த கிழவர் என்ன
நண்டுச் சிறுவனென்ன
விரைவில் ஈழமண்ணைச் சேர
விரும்பித் தவம் செய்தார்

உடலுளம் நொந்த அகதிகள் தம்மை
ஊருக்கனுப்பிடவே
கடல் வழி கப்பலும், ககனவூர்தியும்
காவின, பாரதமும்
கடல்வழி செல்ல 'கப்பல் சிதம்பரம்'
கரிசனை யோடனுப்பி
உடன் பிறப்பென்ற உணர்வினைத் தமிழர்க்
கூட்டினர் அத்தினத்தில்

நொந்திடு தமிழர் நோவினை நீக்கி
நேசக்கரம் நீட்ட
இந்தியா என்றும் எங்களோடென்ற
எண்ணம் வலுப்பெற்று
அந்திய வெற்றி அடைந்திட பாரதம்
அளித்திடும் கரம் என்ற
பிந்திய நினைவு பிறந்தது அதுவும்
பின்னர் பொய்யாச்சு

இலங்கையில் எங்கள் இடரது போக்க
எழுகோடித் தமிழர்

மைப்பருவம், கட்டிளமைப் பருவம் என இரண்டாக வகுத்தே பல உளவியலாளர்கள் ஆராய்ந்துள்ளனர் பிறழ்வுகள், கல்வி உளவியலாளர்கள், சமூக உளவியலாளர்கள் இவ்வாய்வில் அதிகளவு பங்கினைப் பெறுகின்றனர். ஒன்பது வயது முதல் பதினொன்று - பதின்மூன்று வயது வரை உள்ள காலப்பகுதியை முன் பருவம் எனவும், பதின்மூன்று பதினான்குவயதிலிருந்துபத்தொன்பது- இருபத்தியொரு வயதுவரை உள்ள காலப்பகுதியைப் பின் பருவம் என்றும் கொள்வர். இவ்வயதெல்லை முன் பின் சிறிதுமாறலாம். அமெரிக்க, பிரித்தானிய, ஜேர்மனிய உளவியலாளர்களின் கருத்துக்களிலேயே வேறுபாடுகள் காணப்படுகின்றன. நமது நாட்டின் பல்வேறுகாரணிகளுக்கேற்ப இவ்வயதெல்லையை இருபத்தியொருவயது வரை நீடிக்கலாம். பிறப்பு, குடும்ப உறவு பொருளாதார நிலை, சூழல், சமூகத்தாக்கங்களுக்கு ஏற்ப இவ்வயதெல்லையில் தனியாள் வேறுபாடு காணப்படலாம். புரூனர், எரிக்கன். பௌர்பி, பியாஜே, பார்ட்கின்சி, சிக்மண்டபுறோயிட், ஆட்லர், மஸ்லோ, லெவின் மார்க்ஸ், மொறிஸ், பிளே போன்ற பல வேறுபிரிவுகளைச் சார்ந்த உளவியலாளர்கள் இவ்வாய்வுகளில் ஈடுப்பட்டு ஆக்க பூர்வமான கருத்துக்களை முன்வைத்துள்ளனர். குறிப்பாகக் கல்வி உளவியலாளர்களினதும், பிறழ்வு உளவியலாளர்களினதும் பங்களிப்பு பாராட்டத்தக்கதே. கல்வியின் இலட்சியம் அவர்கள் பணியிலும் தெரிகின்றது. இலங்கை இந்தியாவைச் சேர்ந்த உளவியலாளர்களும்

னகாரிய ரீதியாகத் தொடர்புகளைப் புரிந்து கொள்ளும் பருவமாகும். தர்க்கரீதியான அணுகுமுறையும், பகுத்தறிவு ரீதியாகச் சூழலை ஏற்றுக் கொள்ளும் திறனும் உடைய பருவமாகும். தன் உடல் வளர்ச்சியில் ஆர்வத்தோடு அக்கறை காட்டும் பருவம். உடல் வளர்ச்சிக்கு ஏற்ப நிறைய உண்ணவிரும்பும் பருவமாகவும் காணப்படும் இப்பருவத்தில் தான் பெற்றோரின் கட்டுப்பாடுகள் அவர்களின் மனப்பான்மையில் மாற்றத்தை ஏற்படுத்தும், பெற்றோர், ஆசிரியர் போன்றோரின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு தமது நண்பர்களின் ஆதிக்கத்துக்குட்பட விரும்புவர். சமூகத்தின் சம்பிரதாயங்கள், ஒழுக்கங்கள். மரபுகள், கலாசாரங்கள், மீளாய்வு செய்ய விரும்புபவர், ஒரு ஆரோக்கியமான இளைஞரின் வளர்ச்சிப் பருவத்தில் ஏற்படும் இக்கருத்து நிலைச் சிந்தனைகள் எதிர்மறையான வெளிப்பாடுகள் அல்ல. அவ்வாறு நினைந்து அப்பருவத்தினரின் செயல்களை கடுமையாக விமர்சித்துக்கண்டிக்க முற்படுவது பிழையானஅணுகுமுறையாகும். வயது முதிர்ந்தவர்கள் சிலர் தமது உடல் உளத்தாக்கங்களால் நலிவுற்றிருப்பதால் இப்பருவத்தினர் மீது சினங் கொண்டு அவர்களது ஒவ்வொரு செய்கையையும் தடுப்பதையும் கண்டிப்பதையுமிட்டுப் பக்குவமாக அணுகிப்புரிந்து கொள்ளுமாறு அவர்களை வயப்படுத்த வேண்டும்.

இளைஞர்களின் நியதியான ஆளுமை வெளிப்பாடுகளுக்கான முன் ஆயத்தங்களே லூரிகளிலும், கல்வி நிறுவனங்களிலும், பொதுவிடங்களிலும் சந்திக்கின்ற இளைஞர்கள் கல்வி அறிவைப் பூரணமாகப்பெற்ற குடும்பத்தில் பிறந்தவர்கள்அல்ல. பலருக்கு ஞாபகமிருக்கலாம் யாழ்ப்பாணத்தில் நடந்த உலகத் தமிழ் மகாநாட்டில் அன்று இரவு நடந்த அனர்த்தங்களின்போது ஓடிச் சிதறுண்ட, வீழ்ந்த, வழிதெரியாதுபிரிந்து தவித்த பெண்களையும், குழந்தைகளையும், பெற்றோரையும், சகோதரங்களையும், அணைத்து, ஆறுதல்கூறி, ஓடித்திரிந்து உரியவரிடம் ஒப்படைத்து, வீழ்ந்தவர்களைக் காயப்பட்டவர்களைத் தூக்கி, துடைத்து, தெம்புகூறி அவர்களை அவர்கள் போகுமிடத்துக்கு வழிகாட்டி, அழைத்துச் சென்றும் விட்டவர்கள் இக்கட்டிளமைப் பருவத்தினரே. இவர் அறிவும் செல்வமும் மலிந்த குடும்பத்தில் பிறந்தவர்கள் அல்ல. உழைப்பு என்ற ஒன்றைத்தவிர எந்தச் சுகத்தையும் காணாத சாதாரண குடும்பத்தில் பிறந்தவர்கள்தான். இலங்கை இராணுவத்தினரின் அட்டூழியத்தின் போதும் இந்திய இராணுவத்தினரின் கொடுந்தாக்குதல்களின்போதும் இப்பருவத்தினர் கைமாறுகருதாது எம்மவர்க்கு இம்மண்ணுக்கு ஆற்றிய சேவைகள் எத்தனை எத்தனை? இத்தகைய இளைஞர்களிற் பலர் சாதாரண குடும்பத்தில் பிறந்தவர்கள் தான் போதிய பாடசாலைக்கல்வியைப் பெறாதவர்கள் தான். எனினும் இவர்களது பிறப்பிற்குக் காரணமாய் இந்தப் பெற்றோர்கள், வறுமையிலும் செம்மை

யோர்களின் ஒழுக்கநடத்தைகள் அர்த்தமற்ற கோலங்களாகப் படலாம். பலருக்குத் தோன்றலாம் ஆனால் நாம் நமக்குமுன் நடந்த சில உண்மைகளை மறந்து விடக்கூடாது. இத்தனை கொலை வெறிக்கும், குண்டுவீச்சுக்கும் செல்லடிக்கும் பின், ஈழத் தமிழினம் தலை நிமிர்ந்து நிற்பதற்கும், பட்டதுயரத்தை மறந்திட்டு மீண்டும் பயிர்க்களம் நோக்கியும், கடற்பரப்பின் மீதும், கொழுபபுக் கடைச் சரக்கேற்றவும், புறப்பட்டு விட்டனர் என்றால் இத்துணிவும் பொறுமையும் எப்படிவந்தது, உயர்ந்த இலட்சியத்துக்காக மேருமலையோடு மோதிய பின்னும், துணிவோடு சுதந்திரக்குரல் எழுப்புவதற்கும், ஒன்றுபடுவோம், ஒற்றுமையாகச் செயற்படுவோம் திட்டமிடுவோம், அதன் வழிநடப்போம் என அறைகூவல் விடுவதற்கு எதுகாரணம் கருவில் ஊறிய சில ஒழுக்கங்களை அப்புக்கும் ஆச்சிக்கும், தாய்மாமனுக்கும் மாமிக்கும் தந்தைக்கும் தாய்க்கும், குருவுக்கும் பெரியோருக்கும் என நாம் முன்னவர்கள் வகுத்த ஒழுக்க நெறிகளதுஅதன் வழி வாழ்ந்த அனுபவங்களுமே இந்த உயிர் மூச்சுக்கு காரணம் நம் முன்னவர்கள் தந்த ஒழுக்க விழுமியங்களில் விளைத்த பயிர்களாக நம் இளைஞர்கள் இருந்ததினாற்தான், இத்தனை எமக்குச் சாத்தியமாயிற்று. இதை வரப்போகும் சமூகம் உணரவேண்டும் அடுத்த தலைமுறை எம்மை வழிநடத்த ஆரோக்கியமாக வளரவேண்டும்.

மாறிவரும் நவீன உலகின்

மும் என ஐந்து கூறுகளாகப் பிரித்து இயல்புகளையும் நிலைகளையும், தேவைகளையும் ஆராய்ந்துள்ளனர். முன் பருவத்தினரிடம் உடல் வளர்ச்சியில் தீவிரம் காணப்படும் தன் தோற்றம் பற்றி பல்வேறு எண்ணங்கள், கவலைகள் எழும் பாய் முதிர்ச்சி எழுதல் உண்மையை அறியாத அதன் மன குழப்பங்கள்காணப்படும்சமூகப்பண்புகளில் குழுஆதிக்கம் காணப்படும் பெற்றோரை விடச் சகபாடிகளின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பர். இச் சமூக முதிர்ச்சியில் பெண்களது சமூக முதிர்ச்சி ஆண்களிலும் பார்க்க மேற்பட்டுக்காணப்படும். பொதுவாக் நட்பும் பூசலும் வலுப் பெற்றத் தொடங்குகின்றன. மனவெழுச்சி இப்பருவத்தில் மேல் நிலையிற்காண படும், பதட்டம், எதையும் எப்போதும் நினைந்திருத்தல், சகிப்புத் தன்மைகள் இல்லாமை, தன் கருத்துக்களே சரி என்ற எழுச்சி நிலை, பெற்றோரை முதியோரைக்குறை கூறல் போன்ற நிலைகள் காணப்படும், அறிதல் திறனில் இப்பருவத்தினரிடம் திறமை வெளிப்படவும் அதிகரிக்கவுள் தொடங்கும், பகற்கனாகாண்பர், அதில் விருப்பமும் மகிழ்ச்சியும் கொள்வர் இவை பொதுமைக் கருத்துக்களை ஏற்றுப் புதியபுனையுந்திறனுக்கு உந்துதல்களாகவும் அமையும். சமூகப், பண்பாட்டு கலாசார, அரசியல் நிலைகளை புரிந்து கொள்ளமுனைவர். அதனால், அதன் கொள்கைகளால் பாதிக்கப்பட்டு அவற்றுக்கு மாதிரிகளாக இயங்கத் தொழிற்பட ஆர்

வேளை ஏனைய காரணித் தாக்கங்களால் இவற்றில் கட்டுப்பாடுகளைத் தாமே வரித்துக் கொள்வர். மனவெழுச்சிப் பண்புகளில் தீவிரப் போராட்டம் காணப்படும். பெற்றோரும், அயலவரும் தமது சுதந்திர எண்ணங்களுக்கு தடைபோடுவதாக முரண்பாடுவர், எதையோ இழந்து விட்டோமா, பறிகொடுத்து விட்டோமா என்ற வினா மனதில் எழ எதிலோ சவனம் போல் இருப்பர். இதிலும் ஏனைய சமூகக்காரணிகளைப் பொறுத்து முதிர்ச்சியும் காணப்படும். அறிதல் திறனில் முதிர்ச்சியடைந்தாலும் போதிய அனுபவமின்மையால் கொள்கையில் தெளிவும் தெளிவின்மையும் காணப்படுவர், முதிர்ச்சி பெற்றவர் போலவும் சில விடயத்தில் குழந்தை போலவும் தொழிற்படுவர், சுயநலமிக்கவராகவும், பிறருக்கு உதவுபவராகவும் காணப்படுவார். தொழில் வாழ்க்கை பற்றிப் பிரச்சினைகள் எழுவதால் அதில் தெளிவான முடிவுக்கு வர முடியாதவராகக் சாணப்படுவார். கொள்கைகளை, தத்

றோம். எமது ஒற்றுமையின்மையாலும் தெளிவான வழிகாட்டல் இல்லாமையினாலும் நாம்இழந்திட்ட பெரும் செல்வங்களை எவ்வளவு தியாக வேள்வியில் தீக்குளித்த தியாக சீலர் எத்தனை, திட்டமிட்டு உருவாக்கிய எத்தனை தூண்களை அநியாயமாகச் சாவு கொடுத்து விட்டோம். எனியும் இந்நிலை தொடரக்கூடாது. அதனால் நம்மவர்கள், கற்றவர்கள், பல்வேறு அனுபவங்களைப் பெற்றவர்கள் சட்டிளமைப் பருவத் தினருக்குநல்வழிகாட்டமுயன்றிட வேண்டும். எமது பண்டைய மரபு கூறும் ஆடவர்க்குரிய குணங்களாகிய அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்படி போன்றவற்றை இவர்கள் பெற்றிட உதவிடல் நம்கடனே. சான்றோன் ஆக்குதல் தந்தைக் கடனே எனச் சங்க இலக்கியம் இதனையே கூறுகின்றது தந்தை மகற்காற்றும் உதவி முதலில் உளது என வள்ளுவரும் கூறுகின்றார் அன்றோ.

# மட்டக்களப்பு தமிழகம் தமிழ் அறிஞர் மூவருக்கு எடுத்த முத்தான பாராட்டு விழா

*(மட்டக்களப்பு மாவட்ட கலாசார பேரவையினால் அண்மையில் தமிழ் அறிஞர்களான கல்விமான் கே. கணபதிப்பிள்ளை 'தத்துவ சிரோன்மணி' பட்டமும் வித்துவான் பண்டிதர் வி. சீ. கந்தையா 'மகாவித்துவான்' பட்டமும் பண்டிதை கங்கேஸ்வரி கந்தையா 'இலக்கிய மணி' பட்டமும் அளித்துக் கௌரவிக்கப்பட்டனர்.*

*இப்பட்டமளிப்பு விழாவில் மேற்படி தமிழ் அறிஞர்கள் பற்றி ஜனாப் எம். எம். மஃரூப் கரீம் ஆற்றிய சிறப்புரையின் தொகுப்பு.)*

மட்டக்களப்பு தமிழகத்தின் சிந்தனையாளராக, தத்துவத்தின் வித்தகராக, விளங்குபவர். தள்ளாத வயதிலும் பொதுப்பணியைத் தள்ளாது, தயங்காது செய்து வருபவர் தான் இன்று தத்துவசிரோன்மணியாக கௌரவிக்கப்பட்டுள்ள பெரியார் கல்விமான் கணபதிப்பிள்ளை.

நன்னூல் ஆசிரியர் ஒரு ஆசிரியரைப்பற்றிக் கூறும் வரைவிலக்கணம் அனைத்திற்கும் இலக்கணமாக வாழ்ந்தவர். ஆசிரியராக, அதிபராக சேவையாற்றியதன் மூலம் சிவானந்தா வித்தியாலயத்தின் ஸ்தாபகர் முத்தமிழ் வித்தகர் விபுலானந்தர் கண்ட கனவை நனவாக்கி ஆயிரக்கணக்கான சிறந்த நல்மாணவர்களை உருவாக்கிய உத்தமர் தத்துவ சிரோன்மணி



கே. கணபதிப்பிள்ளை

கணபதிப்பிள்ளை.

பல தத்துவஞானிகளின் ஆழ்ந்த கருத்துக்களை அடக்கிய ஆங்கில தத்துவ நூல்களைப்படித்து தான் பெற்ற இன்பம் இவ்வையகம் பெற பல தத்துவ கருத்துக்களை தன் பேச்சினாலும் எழுத்தாற்றலினாலும் உலகிற்கு உணர்த்தியவர்.

தன் பதவியிலிருந்து ஓய்வு பெற்றாலும் ஏனைய சமூக சமய பெரியார்களை உள்ளடக்கி சர்வமதசபை அமைத்து தமிழ் - முஸ்லிம் சமூக ஒற்றுமை, ஐக்கியம் உருவாக்கும் இணைப்பு பாலமாக செயல்பட்டு தராசுபோல் நடுநிலையுடன் செயல்பட்டார் என்றால் அது மிகையாகாது.

### வி. சீ. கந்தையா

மீன்பாடும் தேனாடாம் மட்டக்களப்பு தமிழகத்தின் பெரு



கங்கேஸ்வரி கந்தையா

மையை இத்தரணியெங்கும் பரப்பக் காரணமாக இருந்தவர் பண்டிதர் வித்துவான் வி. சீ. கந்தையா.

மட்டக்களப்பு தமிழகத்தின் தமிழ்மொழியின் வனத்தை பண்டைய இலக்கியங்களோடு ஒப்பிட்டுக் காட்டியவர். இத் தமிழக பண்பாடு, கலாசாரம், கவிநயம் ஆகியவற்றை ஆராய்ந்து அகில உலகிற்கு எடுத்தக் காட்டியவர்.

தவத்திரு தனிநாயகம் அடிகளார், குன்றக்குடி அடிகளார் ஆகியோரால் இவரது சேவையும், நூல்களும் பாராட்டப்பட்டுள்ளன.

இப்பகுதி முஸ்லிம்களின் ஏடறியா இலக்கியமான கவிகளைப்பற்றிஆராய்ந்து அதை பண்டைய இலக்கியங்களுடன் ஒப்பிட்டுக் காட்டியவர்.

இதுவரை இப்பகுதியில் அறியப்படாதிருந்த இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் புலவர்கள் பற்றிய ஏடுகளை ஆராய்ந்து அரிய பல கருத்துக்களை கூறியவர்.

இப்பகுதிவாழ் தமிழ் மக்களிடையே அழியாதிருக்கும் நாட்டுக்கூத்து, சண்ணகிவழக்குரை, குழுத்திப் பாடல்கள், உடுக்குச்சிந்து, மழைக்காவியம், கொம்புவிளையாட்டு முதலியவற்றைவிளக்கமளித்தவர்.

இப்பகுதியில் தமிழர் குடியேற்றம், அரசியல் வரலாறு,



வி. சீ. கந்தையா

மருத்துவம், மந்திரம் ஆகிய பல செய்திகளை வெளியிட்ட் நாட்டுப்பற்றும், மொழிப்பற்றுமுடைய அன்னாரை மகா வித்துவான் என இன்று கௌரவிப்பது இம்மண்ணுக்கு கிடைத்துள்ள மாபெரும் கௌரவமாகும்.

### இலக்கியமணி கங்கேஸ்வரி கந்தையா

'இலக்கியமணி'யாக இன்று பட்டமளித்து கௌரவிக்கப்படும் பண்டிதை கங்கேஸ்வரி கந்தையா தமிழக இலக்கிய வரலாற்றில் இடம்பெற்ற காரைக்கால் அம்மையார் போல் மட்டக்களப்பு தமிழகத்தின் மற்றோர் காரைக்கால் அம்மையாராகும்.

தனது கணவனின் உயர்வு, புகழ் ஆகியவற்றிற்கு காரணமாக விளங்கிய அன்னாருக்கும் சாகித்திய மண்டலபரிசு கிடைத்துள்ளது. கணவன், மனைவி இருவரும் ஏககாலத்தில் சாகித்திய மண்டல பரிசு பெற்ற ஒரேயொரு தம்பதிகள் என்ற பெருமைக்குரியவர்கள்.

யாழ். நல்லை ஆதீனம் இவருக்கு ஏற்கனவே 'அருள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய இராணுவத்தால்

# தமிழீழத்தில் காணாமல் போன சிலர்

1987 ஆண்டு ஒக்டோபர் மாதத்தின் பின்னர் இந்திய ராணுவத்தினாலும் அவர்களுடன் நின்ற கைக்கூலிகளினாலும் தமிழீழ மக்கள் ஆயிரக்கணக்கில் கைதுசெய்யப்பட்டார்கள் . கொல்லப்பட்டார்கள் , சித்திர வதை செய்யப்பட்டார்கள் இவர்களை விடஒருதொகுதி மக்கள் காணாமற் போனார்கள். இவர்களில் சிலரது பெயர்கள்

| | கைதுசெய்யப்பட்ட திகதி | கைதுசெய்யப்பட்டவர் பெயர் | சொந்த இடம் | யார்? கைதுசெய்தது? |
|---|---|---|---|---|
| 1. | 18-5-89 | கனகசபை உதயகுமார் | பண்டத்தரிப்பு | ஈ. பி. ஆர். எல். எவ். |
| 2. | 29 8 89 | அந்தோனிப்பிள்ளை றெபின்சன் குரூஸ் | சொழும்புத்துறை | ,, |
| 3. | 7.10 88 | சுப்பிரமணியம் கனகரெட்ணம் | நல்லூர் | இந்திய இராணுவம் |
| 4. | 28.12 88 | நவரெத்தினம் தவஜோதி | ஆனைக்கோட்டை | ஈ. பி. ஆர். எல். எவ். |
| 5. | 16 11.87 | சண்முகராஜா வரதராஜா | நல்லூர் | இந்திய இராணுவம் |
| 6, | 24.10,87 | செபமாலை அல்லது சின்னத்தம்பி மரியதாஸ் | கோப்பாய் | ஈ. பி. ஆர். எல். எவ் |
| 7. | 22.10.87 | குமாரசாமி துளசிதாஸன் | கல்வியங்காடு | ,, |
| 8. | 22.6.89 | சூசைதாஸன் ஜோன்சன் | இத்தாவில் பளை | ,, |
| 9. | 15 11.87 | பண்டாரி ரெத்தினம் | நல்லூர் | ,, |
| 10. | 8 11.87 | வெள்ளையன் ஞானகுமார் | சண்டிலிப்பாய் | இந்திய இராணுவம் |
| 11. | 8,11.87 | அப்பாபிள்ளை விக்கினேஸ்வரன் | ,, | ,, |
| 12. | 8.11 87 | மாணிக்கன் கந்தசாமி | ,, | ,, |
| 13. | 31.12.87 | துரையப்பா ஜெயராசசிங்கம் | சுன்னாகம் | ,, |
| 14. | 21.12.87 | சுப்பிரமணியம் தவேந்திரன் | ஏழாலை | ,, |
| 15. | 30 12 87 | வீரவாகு சற்குணராசா | ஏழாலை | ,, |
| 16. | 28.5.89 | வேலாயுதம் மதிவாணன் | சுன்னாகம் | ஈ. பி. ஆர். எல். எவ். |
| 17. | 9 11 89 | செல்லத்துரை தனபாலசிங்கம் | மானிப்பாய் | த. தே. இராணுவம் |
| 18. | 29 10 87 | இராசதுரை இராசநாயகம் | சுன்னாகம் | இந்திய இராணுவம் |
| 19 | 29.10.87 | சின்னததுரை அமுதலிஙகம் | ,, | ,, |
| 20. | 25.10.87 | தம்பிராசா தவேந்திரன் | இணுவில் | ,, |
| 21. | 30.5 89 | கணேசன் சைவகலைஞன் | கரவெட்டி | ஈ. பி. ஆர். எல். எப். |
| 22. | 17 11 87 | பிச்சைமுத்து சிவஞானம் | உரும்பிராய் | இந்திய இராணுவம் |
| 23. | 6.01 88 | நவரெத்தினசிங்கம் கிருபாகரன் | யாழ்ப்பாணம் | ,, |
| 24. | 21.10 87 | கந்தையா மகேந்திரராசா (தங்கைச்சி) | கோப்பாய் | இந்திய இராணுவம் |
| 25 | 24 01.88 | செல்லையா சிவகுமார் (சந்தோஷம்) | அளவெட்டி | இந்திய இராணுவம் |
| 26. | 29.10.89 | பரமலிங்கம் அருந்தவநாதன் | சாவகச்சேரி | ஈ பி. ஆர். எல். எப். |
| 27. | 03 11.87 | அருளையா செல்வராசா | சுன்னாகம் | இந்திய இராணுவம் |
| 28. | 03.11.87 | நடேசலிங்கம் ஸ்ரீரஞ்சன் | சுன்னாகம் | இந்திய இராணுவம் |
| 29. | 20,05,89 | இராசரெத்தினம் சிவச்சந்திரன் | முள்ளியவளை | இந்திய இராணுவம் |
| 30. | 28.02 89 | இராமசாமி கோவிந்தராஜ் | தெல்லிப்பளை | ஈ. பி. ஆர். எல். எவ். |
| 31 | 16.05 89 | மாணிக்கம் தவேந்திரராசா | புத்தூர் | ஈ. பி. ஆர். எல். எவ். |
| 32 | 16:05,89 | இளையதம்பி பார்த்தீபன் | புத்தூர் | இந்திய இர்ாணுவம் |
| 33. | 16.05 89 | திலகர் ரவிமோகன் | புத்தூர் | இந்திய இராணுவம் |
| 34. | 28 12 89 | இரத்தினம் சசீந்திரன் | கைதடி | ஈ. பி. ஆர். எல். எவ். |
| 35. | 28 12 89 | கந்தவனம் பத்மநாதன் | கைதடி | ஈ. பி. ஆர். எல். எவ். |
| 36 | 23.02 88 | நடராசா கிருபாகரன் | சுன்னாகம் | இந்திய இராணுவம் |
| 37. | 22.10.87 | துரைராஜசிங்கம் பிரேமானந்தன் | தெல்லிப்பளை | இந்திய இராணுவம் |
| 38 | 13.10 87 | குமாரசாமி செல்வராசா | புத்தூர் | இந்திய இராணுவம் |
| 39 | 15:11.87 | சதிரவேலு விஜயநாதன் | நல்லூர் | இந்திய இராணுவம் |
| 40, | 15 11.87 | கிருஷ்ணசாமி திலகரெத்தினம் | யாழ்ப்பாணம் | |
| 41. | 27 10.87 | மனுவல் ஜெயசீலன் குயின்ரன் | யாழ்ப்பாணம் | இந்திய ராணுவம் |
| 42. | 16 11 87 | சண்முகராசா வரதராசா | நல்லூர் | ,, |
| 43. | 5.11.87 | கிருஷ்ணசாமி திலகநாதன் | யாழ்ப்பாணம் | ,, |
| 44 | 15 11 87 | கதிரவேலு விஜயநாதன் | நல்லூர் | ,, |
| 45. | 19.10.87 | தில்லைநாதன் குலேந்திரன் (24) | யாழ்ப்பாணம் | - |
| 46. | 12.11 67 | திருமதி தங்கரெத்தினம். சங்கரலிங்கம் (51) | நல்லூர் | ,, |
| ,, | ,, | சங்கரலிங்கம் சந்திரிகா (17) | ,, | ,, |
| ,, | ,, | சங்கரலிங்கம் கனகாம்பிகை OR கிரிஜா (13) | ,, | ,, |
| ,, | ,, | சங்கரலிஙகம் காயத்திரி OR வினோ (10) | ,, | ,, |
| 47. | 22.10.87 | மரியாம்பிள்ளை ஒல்குவிச் அன்ரன் | யாழ்ப்பாணம் | ,, |
| 48. | 23.10.87 | சின்னத்துரை டேவிட் துரைசிங்கம் | ,, | ,, |
| 49. | 22 10.87 | இராசதுரை ஸ்ரீகாந்தலிங்கம் | ,, | ,, |
| 50, | 16.12.89 | அந்தோனிப்பிள்ளை ஜோசன் OR ராசா | ,, | ,, |
| 51. | 16.19 87 | நாகலிங்கம் சிவலிங்கம் (45) | தெல்லிப்பளை | த. தே. இராணுவம் |
| 52 | 16.10.87 | அகஸ்ரின் யேசுதாஸ் | யாழ்ப்பாணம் | - |
| 53 | 2. 1.90 | பூவிலிங்கம் இராசேந்திரன் (18) | சுன்னாகம் | ஈ. பி. ஆர். எல். எப். |
| 54. | 02 01.90 | சின்னத்தம்பி சத்திய தாஸன் | ,, | ,, |
| 55 | 22.10 87 | சுப்பிரமணியம் சுதாகரன் (21) | யாழ்ப்பாணம் | - |
| 56. | 13.10.87 | சண்முகநாதன் கமலகுமார் | நீர்வேலி | இந்திய இராணுவம் |



கவிதை

## எழுச்சிப்பா

வான் நோக்கி எழுந்தது பார் விடுதலைத் தீ
வழி மாறி நடந்தாலோ வழிசலே நீ
ஏன் ஓய் உன் இதயத்தில் ரோச மில்லை
இன்னுந்தான் கால் நக்கி இழித்தாய் பல்லை
மானந்தான் தமிழீழம்; வைரம் நெஞ்சம்
மலராதேல் விடிவு... .. அங்கே மரணம் தஞ்சம்.
ஊனென்ன உயிரென்ன ஒதுக்கித் தள்ளு
ஒப்பற்ற தலைவன் பால் உறுதி கொள்ளு.

-□-

தமிழீழ மண்மீது அன்னியன் கால்
தன்மான இதயத்தில் பாய்ந்திடும் வேல்
அமிழ் தெங்கள் தமிழீழம்; அவலா வாங்க
அடி! கோழையா நாங்கள் அயர்ந்து தூங்க
உமி எங்கள் பகைவன் என்று ஊதித்தள்ளு
உதிரப் பேராறாடி உரிமை வெல்லு
துமியே நம் துயரென்று துணிந்தால் வெற்றி
சுடரும் தாயதிக் கன்னல் விளையும் முற்றி.

-□-

அமைதிக்குக் காவல்யார் அரக்கராமோ
அவர் காலில் தமிழீழம் மலரப் போமோ
சுமையாக வாழ்வோரைச் சுட்டுத் தள்ளு
சுடர்கின்ற கொடிமீது புலியைக்கொள்ளு
எமை நோக்கி வீசட்டும் சூறைக் காற்று
எதிர்கொள்வோம் பகைவர்க்கு நாங்கள் கூற்று
தமிழீழ விடிவொன்றே எங்கள் நோக்கு
தாவும் நம் புலியோடு படைகள் தூக்கு

-□-

வெறிகொண்ட நரிக்கும்பல் வெளியேறட்டும்
வேங்கைப் போர் முரசோங்கி விண்ணேறட்டும்
சிறிதென்ன பெரிதென்ன வீரம் ஒன்றே
சேர்ந்திட்ட புலிவெல்லும் ஈழம் இன்றே
பொறிசிந்து வேட்டுக்கள் பொழிவாகட்டும்
புலியெங்கும் தமிழீழப் புகழ் ஓங்கட்டும்
வறிதில்லை வீரம் நம் தமிழ்மண் மீது
மழலைக்கும் கைவந்தால் மாற்றம் ஏது.

-□-

தாயே, செந் தமிழ்த்தாயே, தந்தையே, என்
தலைவா, உன் நா சொல்லும் தாரகம் பொன்
ஓயாப் பேரலைபோலப் படை திரண்டோம்
உலகத்தை யதிர்விக்கும் நடை பயின்றோம்
பாய்கின்ற புலி வீரப் படையை நம்பி
பரணிப்பா வடிப்போம், போர் முடிப்பான் தம்பி
தாய் நாடு எம் தமிழீழ வானமீது
தவழ் வேங்கைக் கொடியை நாம் விடுவோம் தூது.

-□-

-பாண்டியூரன்-

(முதலாம் பக்க தொடர்ச்சி) வந்த இராணுவம் அறையை எட்டிப் பார்த்து விட்டு அப்

சந்திரனைக்காப்பாற்றி வேறு இடத்துக்குக் கொண்டு செல்ல இரண்டு தோணிக்கா

பட்டதோடு மட்டக்களப்பு மக்களையும் அழைத்து அதனைக் கொண்டாட விரும்

அவன் தன்னால் இயன்றளவு திருப்பித் தாக்குதல் நடத்திய போதும் குண்டடிபட்டு மரண

அத்தத் தியாகியின் மரணச் சடங்கு அமிர்தகழியில் இடம் பெற்றது. 1974 ஆம் ஆண்டு

இதுவரை பெண்கள் இடுகாடு வரை செல்லாமல் இருந்த நிலைமையை அமிர்தகழியில்

'வடக்குஇலங்கையில் மறைந்த பண்டிதர் கப்டன் ரவீந்திர னிடம் கண்ட அதே பண்பு

| | | | | |
|---|---|---|---|---|
| 41. | [illegible] | ...ஜெயசீலன் குயின்ரன் | யாழ்ப்பாணம் | இந்திய ராணுவம் |
| 42. | 16 11 87 | சண்முகராசா வரதராசா | நல்லூர் | ,, |
| 43. | 5.11.87 | கிருஷ்ணசாமி திலகநாதன் | யாழ்ப்பாணம் | ,, |
| 44 | 15 11 87 | கதிரவேலு விஜயநாதன் | நல்லூர் | ,, |
| 45. | 19.10.87 | தில்லைநாதன் குலேந்திரன் (24) | யாழ்ப்பாணம் | ,, |
| 46. | 12.11 67 | திருமதி தங்கரெத்தினம். சங்கரலிங்கம் (51) | நல்லூர் | - |
| ,, | ,, | சங்கரலிங்கம் சந்திரிகா (17) | ,, | ,, |
| ,, | ,, | சங்கரலிங்கம் கனகாம்பிகை OR கிரிஜா (13) | ,, | ,, |
| ,, | ,, | சங்கரலிங்கம் காயத்திரி OR வினோ (10) | ,, | ,, |
| 47. | 22.10.87 | மரியாம்பிள்ளை ஒல்குவிச் அன்ரன் | யாழ்ப்பாணம் | ,, |
| 48. | 23.10.87 | சின்னத்துரை டேவிட் துரைசிங்கம் | ,, | ,, |
| 49. | 22 10.87 | இராசதுரை ஸ்ரீகாந்தலிங்கம் | ,, | ,, |
| 50, | 16.12.89 | அந்தோனிப்பிள்ளை ஜோசன் OR ராசா | ,, | ,, |
| 51. | 16.19 87 | நாகலிங்கம் சிவலிங்கம் (45) | தெல்லிப்பளை | ,, |
| 52 | 16.10.87 | அகஸ்ரின் யேசுதாஸ் | யாழ்ப்பாணம் | த. தே. இராணுவம் |
| 53 | 2. 1.90 | பூவிலிங்கம் இராசேந்திரன் (18) | சுன்னாகம் | - |
| 54. | 02 01.90 | சின்னத்தம்பி சத்திய தாஸன் | | ஈ. பி. ஆர். எல். எப். |
| 55 | 22.10 87 | சுப்பிரமணியம் சுதாகரன் (21) | ,, | ,, |
| 56. | 13.10.87 | சண்முகநாதன் கமலகுமார் | யாழ்ப்பாணம் / நீர்வேலி | - / இந்திய இராணுவம் |

பொறிசிந்து வேட்டுக்கள் பொழிவாகட்டும்
புலியெங்கும் தமிழீழப் புகழ் ஓங்கட்டும்
வறிதில்லை வீரம் நம் தமிழ்மண் மீது
மழலைக்கும் கைவந்தால் மாற்றம் ஏது.

-□-

தாயே, செந் தமிழ்த்தாயே, தந்தையே, என்
தலைவா, உன் நா சொல்லும் தாரகம் பொன்
ஓயாப் பேரலைபோலப் படை திரண்டோம்
உலகத்தை யதிர்விக்கும் நடை பயின்றோம்
பாய்கின்ற புலி வீரப் படையை நம்பி
பரணிப்பா வடிப்போம், போர் முடிப்பான் தம்பி
தாய் நாடு எம் தமிழீழ வானமீது
தவழ் வேங்கைக் கொடியை நாம் விடுவோம் தூது.

-□-

**-பாண்டியூரன்-**

(முதலாம் பக்க தொடர்ச்சி) வந்த இராணுவம் அறையை எட்டிப் பார்த்து விட்டு அப்பால் நகர்ந்தது,

### ஒரு கையில் போர்க்கருவி மறு கையில் இசைக்கருவி

மேஜர் சந்திரன் ஒரு புல்லாங்குழல் கலைஞன். போராளிகள் ஓய்வானவேளைகளில் எல்லாம் வேய்ங்குழல் இசைக்கும் சந்திரனின் வேணுகானத்தில் மெய்மறந்து இருப்பர். 1987ஆம் ஆண்டு திலீபன் யாழ்ப்பாணத்தில் உண்ணாவிரதம் இருந்தபோது திருச்செல்வம் முல்லைத்தீவிலும் கிருபாகரன் திருமலையிலும் மதன் மட்டக்களப்பிலும் உண்ணாவிரதம் இருந்தனர். மதன் உண்ணா விரதம் இருந்த காலகட்டத்தில் இரவு முழுவதும் வேணுகானம இசைத்து சந்திர தான் உற்சாகம் ஊட்டிக் கொண்டிருந்தான்.

இதைவிட இன்னுமொரு சம்பவம் முக்கியமாகும். மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் நெருங்கிய ஆதரவாளர் ஒருவரது இல்லத்திற்கு அடிக்கடி சந்திரன் சென்று வருவது வழக்கம். அந்த ஆதரவாளரது குழந்தை ஒன்று மன வளர்ச்சி குறைந்த பிள்ளையாகவிருந்தது. அதனை இரவில் உறங்க வைப்பபதே பெரும் பாடாகவிருந்தது. இதனால் அப்பிள்ளையை உறங்க வைக்க சந்திரன் புல்லாங்குழல் இசைப்பது வழக்கம். தாய் தந்தையரை நித்திரை கொள்ளாது ஆட்டிப் படைக்கும் அப்பிள்ளை சந்திரனின் புல்லாங்குழல் இசைக்கு மகுடியின் நாதத்திற்கு கட்டுண்ட நாகம் போல அடங்கி உறக்கம் கொள்ளுவதுவழமையாகும். குழந்தையை உறங்க வைத்த பின்பே அவன் அவ்விடத்தை விட்டு நகர்வான்,

### இந்தியப்படையின் முற்றுகை

1987ல் ஒரு நாள் ஆரையம்பதிக் கிராமத்தை இந்தியப்படை முற்றுகையிட்டது. சந்திரனைக்காப்பாற்றி வேறு இடத்துக்குக் கொண்டு செல்ல இரண்டு தோணிக்காரர்கள் தயாரானார்கள். அவர்கள் படகை வலித்துக் கொண்டு சந்திரனையும் ஏற்றிக் கொண்டு உப்பேரியில சென்று கொண்டிருக்கும் போது இவர்களை அடையாளம் கண்டு கொண்ட இந்தியப்படைகள் தாக்கத்தொடங்கினார்கள். ஆனால் தோணியை வலித்துக்கொண்டு வெகுவேகமாக படகு செல்லவே தரையில் நி ற துருப்புக்கள் ஹெலிகப்டருக்குத் தகவல் கொடுத்தனர். விரைந்து வந்த ஹெலிக்ப்டர் சந்திரன் சென்ற படகை அடையாளம் கண்டு தாக்கத் தொடங்கியது. இத்தாக்குதலின் போது குண்டுகள் தோணியைத் தாக்கியமையால் அது சேதமுற்றதோடு இரண்டு தோணிக்காரர்களும் அந்த இடத்திலேயே இறநதனர். நீரில் பாய்ந்து சந்திரன் நீந்தத் தொடங்கினான். சல்வீனியாப்பூண்டுகளில் உடலை மறைத்துக் கொண்டு மூன்று மணிநேரம் நீந்தி உப்பேரியின் நடுவில் இருந்த ஒரு காட்டுத் தீவை அடைந்தான். ஆரையம்பதி மக்கள் சந்திரனை இறந்து விட்டதாகவே கருதி சோகக் கடலில் மூழ்கினார்கள். ஆனால் மறுநாள் சந்திரன் நான்கு மணிநேரம் நீந்தி மீண்டும் அதே கிராமத்தில் காலடி வைத்த போது மக்கள் சந்தோஷ சாகரத்தில் திளைத்து கோலாகலமாக சந்திரனை வரவேற்றனர்.

### ஆக்கிரமிப்பு அனுப்பிய அழைப்பிதழ்

மட்டக்களப்பில் கடலோரக் கலங்கரை விளக்கத்திற்குப் பக்கத்தில்இந்தியப்படையின் 'கப்வாலிஸ் படைப்பிரிவு' முகாமிட்டிருந்தது. இப்படைப்பிரிவு துவக்கப்பட்டு 17வதுஆண்டுநிறைவுவிழாவை Light House Campல் கொண்டாடப்படுவதற்கான ஏற்பாடுகள் 30-5-1988 அன்று வெகு தடல்புடலாக செய்யப்பட்டதோடு மட்டக்களப்பு மக்களையும் அழைத்து அதனைக் கொண்டாட விரும்பிய துருப்புக்கள் பலருக்கும் அழைப்பிதழ்கள் அனுப்பி வைத்தனர்.

மேஜர் சந்திரனும் அவரது குழுவினரும் வெகு துரிதமாக செயல்பட்டனர். 'பொறியில் விழமாட்டோம்' என்ற தலைப்பில் கவிதை நடையில் துண்டுப்பிரசுரம் ஒன்றை சந்திரன் அண்ணன் தனது கைப்பட எழுதி அச்சடித்து பொது மக்கள் மத்தியில் விநியோகம் செய்தான்.

இதன் விளைவாக இவ்விழாவில் ஒருவரும் பொது மக்கள் சார்பில் கலந்து கொள்ளவில்லை. இச்சம்பவம் அந்நியஆக்கிரமிப்பு படையின் முகத்தில் காறி உமிழ்ந்தது போல் அமைந்தது.

### இறுதி நாள் சம்பவம்

மட்டக்களப்பு கடலோரக் கலங்கரை விளக்கத்திற்குப் பக்கத்தில் முகாமிட்டிருந்த கப்வாலிஸ் படைப்பிரிவு ஏற்பாடு செய்த விழாவில் பொது மக்கள் எவரும் கலந்து கொள்ளாமையால் வெகுண்டுஎழுந்த இந்திய ஆக்கிரமிப்புப் படையினர் மேஜர் சந்திரனே இதற்குக் காரணம் என்பதை அறிந்து கொ டு சந்திரன் அண்ணையை இலக்குவைத்து தேடுதல்வேட்டையை முடுக்கி விட்டனர்.

தாளங்குடாவில்ஒருவீட்டிற்கு 1988ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 10ம் திகதி சென்ற மேஜர் சந்திரனும் சிறீ என்ற இளம் புலியும் அங்கே குளிக்க விரும்பினார்கள். சந்திரன் குளித்துக் கொண்டு இருக்கும் போது சிறீ சென்றிக்கு நின்று கொண்டிருந்தான். யாரோ ஒரு துரோகி கொடுத்த தகவலின் பேரில் அவ் வீட்டை முற்றுகையிட்ட இந்தியத் துருப்புக்கள் சுற்றி வளைத்து தாக்குதல் நடத்தத் தொடங்கினர். பதிலுக்கு சிறீ தாக்கினான். அவன மட்டும் தனியே நின்று என்ன செய்யமுடியும்? அவன் தன்னால் இயன்றளவு திருப்பித் தாக்குதல் நடத்திய போதும் குண்டடிபட்டு மரணமடைந்தான். சுற்றிவளைப்பை உடைத்துக் கொண்டு வெளியேறமுடியாத நிலைமை எழுந்தபோது மேஜர் சந்திரன் சைனைட் உட்கொண்டுவீரமரணத்தைத் தழுவிக் கொண்டான்.

மட்டக்களப்பு அமிர்தகழியில் பிறந்து 30 வருடகாலம் பொது வாழ்விலும் போராட்ட வாழ்விலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி தாளங்குடாவில் மறைந்த அத்தத் தியாகியின் மரணச் சடங்கு அமிர்தகழியில் இடம் பெற்றது. 1974 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் உரும்பிராய்க் கிராமப் பெண்கள் தியாகி சிவகுமாரனது மரணச் சடங்கில் கலந்து கொண்டு இடுகாடுவரை சென்று அவனுக்கு அஞ்சலி செலுத்தி இதுவரை இடுகாடுவரை யாழ்ப்பாணத்துப் பெண்கள் செல்லாமல் இருந்த ஒரு மரபை உடைத்து ஒரு புரட்சிகர மாற்றத்தை உருவாக்கியது போல மட்டக்களப்பில் இதுவரை பெண்கள் இடுகாடுவரை செல்லாமல் இருந்த நிலைமையை அமிர்தகழியில் நடைபெற்ற மேஜர் சந்திரனின் மரணச் சடங்கில் கலந்து கொண்ட பெண்கள் தகர்த்து முதன் முறையாக பெண்களும் மயானம்வரை சென்று அவனுக்கு அஞ்சலி செலுத்தி ஒரு புதிய மரபை மட்டக்களப்பில் உருவாக்கினார்கள். புரட்சிவீரர்களது வீரமரணம் புரட்சிகர மாற்றங்களையே உருவாக்கி வருகின்றது.

'வடக்குஇலங்கையில் மறைந்த பண்டிதர் கப்டன் ரவீந்திரனிடம் கண்ட அதே பண்புகளை கிழக்குஇலங்கையில் மேஜர் சந்திரனிடம் கண்டேன்'' என்று ஒரு சிரேஷ்ட போராளி குறிப்பிட்ட வாசகம் தான் இன்னும் காதில் ஒலிக்கின்றது

'வாழும் போது ஒரு போராளியின் வாழ்வு மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக அமைகிறது அவன் இறந்த பின் அவனது வாழ்வு ஒரு பாடமாக அமைகிறது என தளபதி மாத்தயா சொன்ன கருத்தும் பொருள் பொதிந்த விடயமேயாகும்


## உங்கள் தேவைக்குகந்த வகையில்;

- பாவித்த பழைய, புதிய வீட்டுத் தளபாடங்கள்......
- வீட்டுப் பாவனைக்குரிய எலெக்ரிக்கல் பொருட்கள்......
- ரீவி, டெக், கசட் றேடியோ, மணிக்கூடு போன்ற எலெக்ரோனிக் பொருட்கள்......

✲ நீங்கள் எவ்வகையான பொருட்களையும் நேரில் பார்த்துப் பெற்றுக் கொள்ளலாம்.

✲ பாவித்த வீட்டுத் தளபாடங்கள்
✲ பழைய பாவனைப் பொருட்கள் விற்க விரும்பின் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

# பிறைற் ஓக்ஷன் சென்ரர்

**இல- 275, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**

(B/949)